24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 28
விலை: 30

சுடர் 34 | கதிர் 14 | கார்த்திகை 24ஆம் நாள் | திங்கட்கிழமை | 10 டிசெம்பர் 2018 | வள்ளுவர் ஆண்டு 2049

## நாடாளுமன்றம் அடுத்த அதிகாரத்தை பயன்படுத்துவதற்குத் தயாராகிறது

### அமைச்சுச் செயலர்கள் விசாரணைக்கு அழைப்பு

கொழும்பு, டிசெ. 10

அரச நிதியை தவறாகப் பயன்படுத்தியதாகத் தெரிவித்து 5 அமைச்சுக்களின் செயலர்களை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்ற தீர்மானம் ஐக்கிய தேசிய முன்னணியால் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதற்கு

அமைவாக அமைச்சுக்களின் செயலர்கள், நாடாளுமன்றக் குழுவால் அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தீர்மானம் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டமை தொடர்பில், அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் சம்பிக்க ரணவக்க தெரிவித்ததாவது:

சட்டவிரோத >> 25

## பைத்தியக்காரனை பைத்தியக்காரன் என்றுதானே நாம் சொல்ல முடியும்

### மைத்திரியை மீண்டும் போட்டு தாக்கினார் சரத் பொன்சேகா



கொழும்பு, டிசெ. 10

பைத்தியக்காரனை பைத்தியக்காரன் என்றுதான் நாம் சொல்ல முடியும். அவ்வாறு சொல்வதில் எந்தத் தவறும் இல்லை. நாட்டின் அரச தலைவர் மைத்திரிபால >> 21

## நிலமையைக் கருத்திலெடுத்து உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்கும்

### எதிர்பார்ப்பதாகக் கூறுகிறார் மைத்திரி



கொழும்பு, டிசெ. 10

நாட்டின் தற்போதைய நிலமையை நீதிமன்றம் புரிந்து கொண்டு, அதற்கு ஏதுவான தீர்ப்பை வழங்கும் என்று நான் எதிர்பார்க்கின்றேன். நீதிமன் றம் எந்தத் >> 21

# தமிழர்கள் குழம்பத் தேவையில்லை
# இலக்கை நாம் அடைந்தே தீருவோம்

### சம்பந்தன் உறுதிபடத் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், டிசெம்பர் 10**

**இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடி தொடர்பில் தமிழ் மக்கள் குழம்பத் தேவையில்லை. இராஜதந்திர ரீதியில் செயற்பட்டு எமது இலக்கை நாம் அடைந்தே தீருவோம். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் 'உதயன் பத்திரிகைக்குத்" தெரிவித்தார்.** >> 25

## ஓ.எல்.பரீட்சையில் குதிரையோடியவர் கிளிநொச்சியில் தப்பியோட்டம்

கிளிநொச்சி, டிசெ. 10

நடைபெற்றுவரும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் குதிரையோடிய சந்தேகத்தில் ஒருவரை விசாரணை செய்ய முற்பட்ட போது அவர் தப்பித்துச் சென்றுள்ள சம்பவம், கிளிநொச்சி பாரதிபுரத்தில் நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குதிரையோடிய சந்தேகத்தில் ஒருவர் >> 21

## ரணிலிடம் எழுத்துமூல ஆவணத்தைப் பெற்றால் தென்னிலங்கையின் எதிர்வினை எப்படியிருக்கும்?

### அதையும் சிந்தித்தே கருமமாற்ற வேண்டியுள்ளது என்கிறார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், டிசெ. 10

மகிந்த ராஜபக்சவிடம் எழுத்துமூலமான உறுதிப்பாட்டைக் கோரியதைப்போன்று ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டுப் பெற்றுக் கொண்டால், தென்னிலங்கையின் நிலமை எவ்வாறு இருக்கும் என்பதையும் சிந்திக்க வேண்டும். அப்படி பெற்றுக் கொள்ளவதென்றாலும் அதனைப் பகிரங்கமாகச் செய்யவேண்டிய அவசியமில்லை. ஆனால் அதற்கான தேவை எமக்கு >> 25

## நோயாளர் காவு வண்டியில் வந்து பரீட்சை எழுதும் மாணவி

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 10

டெங்கு நோய் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள மாணவி ஒருவர், நோயாளர் காவு வண்டியில் பரீட்சை மண்டபத்துக்கு வந்து பரீட்சை எழுதிச் செல்கின்றார்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நாடு முழுவதும் நடைபெற்று >> 25

## ஜனவரியில் சம்பளம் வழங்குவதற்கு எந்தத் தடையுமில்லை

### கூறுகிறது மகிந்த அணி

கொழும்பு, டிசெ. 10

அரச ஊழியர்களுக்குச் சம்பளம், ஓய்வூதியம் உள்ளிட்ட ஏனைய கொடுப்பனவுகளைக் கொடுப்பதில் எவ்வித சிக்கல் நிலையும் ஏற்படாது என்று மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை.

மைத்திரிபால நியமித்த >> 25

## இரணைமடுவில் குளித்த இளைஞன் நீரில்மூழ்கி சாவு

### வான் பாயும் பகுதியில் நேற்று சோகம்

கிளிநொச்சி, டிசெ. 10

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் வான் பாயும் பகுதிக்குள் குளித்துக் கொண்டிருக்கும் போது காணாமல் போன இளைஞன் சில மணி நேரத் தேடுதலின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி மீசாலையைச் சேர்ந்த என்.டிலக்சன் (வயது21) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை 4.30 மணியளவில் இரணைமடுக் >> 25





## இலங்கை அரசியல் நெருக்கடி: அமெரிக்கா – இந்தியா கவனம்

கொழும்பு, டிசெ. 10

இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் தனது அமெரிக்கப் பயணத்தின் போது இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடி தொடர்பில் மிகத் தீவிரமாக அமெரிக்காவுடன் ஆராய்ந்துள்ளதாகத் தகவல்கள் >> 25

## அரசியல் நெருக்கடியால் அடிபட்டுப் போகும் ஓ.எம்.பி.

### அதன் உறுப்பினரே தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 10

கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதியின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தின் (ஓ.எம்.பி.) செயற்பாடுகள் மந்த கதியை அடைந்திருப்பதாக, பணியகத்தின் உறுப்பினர் மிராக் ரஹீம் >> 25

## மைத்திரிபாலவை நேரில் சந்திக்க பங்காளிக் கட்சித் தலைவர்கள் முடிவு

கொழும்பு, டிசெ. 10

நாட்டில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடி தொடர்பாகவும், மகிந்த அணியான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடனான எதிர்காலக் கூட்டுத் தொடர்பாகவும் ஆராய்வதற்கு மகிந்த தலைமையில் கூடிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை அவர்கள் விரைவில் சந்தித்துப் பேச்சு நடத்துவார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார் .

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சித் தலைவர்கள், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் உறுப்பினர்கள், மகிந்த ராஜபக்ச இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் இரவு, மகிந்தவின் இல்லத்தில் நடைபெற்றது.

நீதிமன்றத் தீர்ப்பால் அமைச்சரவைச் செயற்பாடுகள் முடங்கியுள்ளமை தொடர்பில் பேசப்பட்டுள்ளது. நாடாளுமன்றக் கலைப்பு அரசிதழுக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்பு எப்படி வந்தாலும் அடுத்த கட்டமாக என்ன செய்வது என்பது தொடர்பிலும் சந்திப்பில் பேசப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் பேசி இறுதி முடிவு எடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. விரைவில் இந்தச் சந்திப்பு நடைபெறும் என்று கூறப்படுகின்றது. (5)

# பொதுத் தேர்தல் நடந்தால் நாங்களே கிரீடம் சூடுவோம்

## மகிந்த தெரிவிப்பு

கண்டி, டிசெ. 10

**நாம், பொதுத் தேர்தலில் சிறப்பான வெற்றியடைவோம் என்று நம்பிக்கையுள்ளது. மக்களுக்கு இந்த மூன்று ஆண்டுகள் கூட்டு அரசு மீது வெறுப்பு வந்துவிட்டது. இதிலிருந்து மக்களை மீட்க வேண்டும் என்றே நாம் செயற்படுகின்றோம். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.**

கண்டி தலதா மாளிகையில் நேற்று இடம்பெற்ற வழிபாடுகளைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினை அதிகாரப் பிரச்சினையல்ல. இந்தப் பிரச்சினையில் நீதிமன்றம் தலையிட்டமையினாலேயே சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன. தற்போதுள்ள நிலமை பாரதூரமானதாகும். எமது செயற்பாடுகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. பல பொருள்களின் விலைகள் குறைப்பது தொடர்பில் அமைச்சரவையில் தீர்மானம் கொண்டுவர இருந்தேன். இந்தப் பிரச்சினையால் அனைத்துச் செயற்பாடுகளும் தேக்கமடைந்துள்ளன.

தலைமை அமைச்சர் யார் என்பதை அரச தலைவரே தீர்மானிப்பார். நிறைவேற்று அதிகாரம் அவருக்குத்தான் இருக்கின்றது. இந்த நாடாளுமன்றம் எம்மைப் பொறுத்தவரையில் கலைக்கப்பட்ட நாடாளுமன்றம். இந்த நாடாளுமன்றத்து நாம் சென்று பலனில்லை.

நாம், பொதுத் தேர்தலில் சிறப்பான வெற்றியடைவோம் என்று நம்பிக்கையுள்ளது. மக்களுக்கு இந்த மூன்று வருடகால அரசு மீது வெறுப்பு வந்துவிட்டது. இதிலிருந்து மக்களை மீட்க வேண்டும் என்றே நாம் செயற்பட்டோம். நான் மக்களுக்கான சலுகைகளை வழங்கினேன். இது பரப்புரைக்காக மேற்கொண்ட செயற்பாடல்ல. மாறாக, விலைக் குறைப்புக்களை மேற்கொள்ள முடியும் என்று தெரிந்த காரணத்தினால் தான் அதனைச் செய்தோம்.

நாம் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்பார்த்துள்ளோம். உலகில் எந்தவொரு நீதிமன்றமும் இவ்வாறு இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பிக்கவில்லை. இதற்கெதிராகவே நாம் மேன்முறையீட்டு மனுத் தாக்கல் செய்துள்ளோம். மக்கள் எமக்கான ஆதரவை தொடர்ந்தும் வழங்க வேண்டும் - என்றார். (5)

## கூட்டமைப்பால் நாட்டின் பொருளாதாரம் சீரழிவு

### சீறுகிறது மகிந்த அணி

கொழும்பு, டிசெ. 10

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் எமது நாட்டின் பொருளாதாரம் சீரழியப் போகிறதென மகிந்த ராஜபக்சவின் ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் சிசிர ஜயக்கொடி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலக வரலாற்றில் அரசின் செயற்பாடுகளை முடக்கும் வகையில் எந்த நீதிமன்றமும் இடைக்காலக் கட்டளை வழங்கியிருக்கவில்லை. ஆனால், இலங்கையின் மேன்முறையீட்டு நீதிமன்றம் அரசின் செயற்பாடுகளை முடக்கும் வகையில் தீர்ப்பளித்துள்ளது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இன்று ஒட்டுமொத்த அரசும் முடங்கியுள்ளது..

அரசொன்றின் இயக்கம் இல்லாமையால் நாட்டில் திடீரென ஏதும் பேரிடர்கள் ஏற்பட்டால் பெரிய பிரச்சினைகளுக்கு நாம் முகம் கொடுக்க நேரிடும். பொருளாதார ரீதியாக பாரதூரமான நெருக்கடியை சந்திக்கவும் நேரிடும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்து வருகிறன. அதற்காகவே இவர்கள் இணைந்தும் உள்ளனர் - என்றார். (5,10)

## ஐ.நா. பொதுச் செயலர் குட்டரெஸ் ஜனவரியில் இலங்கை வரக்கூடும்

கொழும்பு, டிசெ. 10

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரெஸ் அடுத்த மாதம் இலங்கைக்கு வரக்கூடும் என்று கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி தொடர்பில் ஐ.நா. பிரதிநிதிகள் பல தரப்பட்ட அரசியல் சந்திப்புகளை முன்னெடுத்திருந்தனர். இந்தச் சந்திப்புக்கள் மற்றும் தற்போதைய நிலமை குறித்து ஐ.நா. தலைமையகத்துக்குத் தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

இதற்கு அமைவாக ஐ.நா. பொதுச் செயலரின் பிரதிநிதி கடந்த மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு பல தரப்பினரையும் சந்தித்திருந்தார். இதன் பின்னரும் அரசியல் நெருக்கடி நிலமை தணியவில்லை. இவ்வாறானதொரு நிலையிலேயே, ஐ.நா. பொதுச் செயலர் அடுத்த மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளக் கூடும் என்ற தகவல் வெளியாகியுள்ளது. (5,71)

## தீர்ப்பு வெளியானவுடன் அதிரடி காட்டும் ஐ.தே.க.

### சஜித் கூறுகின்றார்

கொழும்பு, டிசெ. 10



நாம் ஜனநாயக வழியில் நடப்பதால் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பும் எமக்குச் சாதகமாகவே அமையும். ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சியமைக்கும். தீர்ப்பு வெளியானவுடன் ஐக்கிய தேசியக் கட்சி சில அதிரடி நடவடிக்கைகளையும் காட்டும். அதை இப்போதைக்கு எம்மால் சொல்ல முடியாது. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது கட்சியின் ஒவ்வொரு நடவடிக்கையும் ஜனநாயக வழியில் இருக்கும். அது மக்கள் நலன் சார்ந்ததாக இருக்கும். பன்னாட்டுச் சமூகம் வரவேற்கின்ற நடவடிக்கையாகவும் அது இருக்கும்.

போலித் தலைமை அமைச்சராலும், போலி அமைச்சரவையாலும் எமது நாடு பொருளாதார நெருக்கடிக்குள் விழுந்துவிட்டது. நாட்டை நாம் மீட்டெடுக்க வேண்டிய நிலைமையில் உள்ளோம். மீண்டும் ஆட்சிப்பீடமேறி நாட்டை மீட்டெடுத்தே தீருவோம். பொருளாதாரத்தை நிமிர்த்துவோம்.

இனிவரும் நாள்கள் முக்கியவத்துவம் வாய்ந்த நாள்களாக உள்ளன. அதற்கேற்ற மாதிரி நாம் செயற்படுவோம் - என்றார். (5)

## நாமல் குமாரவின் அலைபேசியில்

# அழிக்கப்பட்ட குரல் பதிவுகளை மீளப் பெற ஹொங்ஹொங் விரைந்தனர் சி.ஐ.டியினர்

கொழும்பு, டிசெ. 10



மைத்திரி கொலைச் சதி தொடர்பான தகவல்களை வெளியிட்ட, நாமல் குமாரவின் அலைபேசியில் இருந்து அழிக்கப்பட்ட ஒலிப்பதிவுகளை மீளப் பெற்றுக்கொள்வதற்காகவும் அது தொடர்பில் ஆய்வு செய்வதற்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் மூவரடங்கிய குழுவொன்று ஹொங்கொங் சென்றுள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இந்தக் குழு ஹொங்கொங் நோக்கிச் சென்றுள்ளது. குழுவில் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் இருவர் உள்பட அரச இராசயனப் பகுப்பாய்வாளர் ஒருவருமாகச் சென்றுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாமல் குமாரவின் அலைபேசியுடன் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவையும் அவர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.

அரச தலைவர் மைத்திரிபால மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவை கொலை செய்ய பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா தலைமையிலான குழுவொன்று தம்மை வைத்துச் சதித்திட்டம் தீட்டியாக நாமல் குமார கடந்த காலங்களில் குற்றச்சாட்டுகளை முன்வைத்ததுடன், இந்தச் சதித்திட்டம் தொடர்பில் தன்னுடன் சிலர் பேசிய ஒலிப்பதிவுகளை ஆதாரமாகவும் வெளியிட்டிருந்தார். (5,10)

# நீதிமன்றத்தின் ஊடாக ஐ.தே.க. சண்டித்தனம்

## எதற்கும் அஞ்சமாட்டோம் என மகிந்த அணியினர் ஆவேசம்

கொழும்பு, டிசெ. 10

எமது பலத்தை எதிர்கொள்ள முடியாத ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினர் நீதிமன்றங்களில் எமக்கு எதிராக வழக்குகளைத் தொடுத்து சண்டித்தனம் காட்டி வருகின்றனர். இதற்கெல்லாம் நாம் அஞ்சமாட்டோம். இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன சிங்கள தொலைக்காட்சிக்குத் தெரிவித்துள்ளார்.

"உயர்நீமன்றத்தின் தீர்ப்பு எமக்குச் சாதகமாக அமைந்தால் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொண்டு நாம் மீண்டும் ஆட்சியமைப்போம். தீர்ப்பு எமக்குப் பாதகமாக அமைந்தால் பெரும்பான்மைப் பலத்தை நாடாளுமன்றத்தில் நிரூபித்துக் காட்டிவிட்டு ஆட்சியமைப்போம். உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம். அதுவரைக்கும் நாம் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்கமாட்டோம்" என்று தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார். (5)

## மனித உரிமைகள் தினமான இன்று பல்வேறு இடங்களிலும் கவனவீர்ப்பு

வவுனியா, டிசெ. 10
மனித உரிமை தினமான இன்று பல்வேறு இடங்களில்கவனவீர்ப்புப்போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன என்று வவுனியாவிலுள்ள 'அன்புக்கும் நட்புக்குமானஇளைஞர்வலையமைப்பு' தெரிவித்தது.
இந்த வலையமைப்புடன் இணைந்துஅந்தந்தஇடங்களின்இளையோரும்கவனவீர்ப்பில் ஈடுபடவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
வவுனியாவில்காணாமல் ஆக்கப்பட்டவர்கள்தொடர்பாகவவுனியாவில்உள்ள மனித உரிமைகள் அலுவலகம் இதுவரை எடுத்த நடவடிக்கை என்ன? என்பது பற்றி ஒரு தொகுதி இளையோர் அந்த அலுவலகம் முன்பாகக் கேள்வியெழுப்பிக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.
இதுவரைபொதுமக்களின் காணிகளைபடையினரிடமிருந்து விடுவிப்பதற்கு எடுத்தநடவடிக்கைகள் மற்றும் காணிப்பிணக்குகள் தொர்டர்பாக இதுவரை தீர்த்து வைக்கப்பட்டவிடயங்கள் தொடர்பாக கோரிக்கை விடுத்து மற்றொரு தொகுதியினர் வவுனியாமாவட்டச்செயலகம் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.
அதனையடுத்து லஞ்சம் ஊழலுக்கு எதிராக வவுனியா நகர்ப்புறத்தில் போராட்டமும்முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
இவ்வாறே, ஹட்டன் நகரில் அரசமைப்பைப் பாதுகாத்து அதனூடாக ஜனநாயகத்தைவலியுறுத்தியும், புதிய அரசமைப்புச் சீர்திருத்தத்தை விரைவில் கொண்டுவருமாறுவலியுறுத்தியும் கவனவீர்ப்புப் போராட்டம்நடைபெறவுள்ளது.
திருகோணமலை நகரில், போரால் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் அரசு இழப்பீடு வழங்கவேண்டும் என்பதை வலியுறுத்திக்கவனவீர்ப்புஇடம்பெறவுள்ளது.
கொழும்பில், 18 வயதுக்கு மேட்பட்ட சகலரதும் வாக்குரிமையை வலியுறுத்தி தேர்தல்ஆணையாளர் அலுவலகம்முன்பாகவும், வீதிப் போக்குவரத்துப் பொலிஸார்வாகனங்களுக்கான தண்டப்பணம் அறவிடுவதற்கான தடக்கோல் பத்திரம் தமிழ் மொழியிலும்சகலஇடங்களிலும் எழுதப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி பொலிஸ் ஆணைக்குழு முன்பாகக்கையெழுத்துப் போராட்டமும்,நாட்டில்ஜனநாயகம் மற்றும் நீதியை நிலைநாட்டுமாறு தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் முன்பாகவும் கவன வீர்ப்புப் போராட்டங்கள் இடம் பெறவுள்ளனஎன்றும்அந்த வலையமைப்பு மேலும் தெரிவித்தது. (4.402)

## பன்னாட்டு மனித உரிமைகள் தினம்

யாழ்ப்பாணம்,டிசெ.10
பன்னாட்டு மனித உரிமைகள் தினமான இன்று யாழ்ப்பாணம் மனித உரிமைகள் முதலுதவிச் சங்கத்தினர்,இலங்கைசமாதானப்பேரவையுடன் இணைந்துநிகழ்வுகளைஏற்பாடுசெய்துள்ளனர்.
யாழ்ப்பாணம்,நல்லூர்துர்க்காதேவிமணிமண்டபத்தில்காலை9.30மணிக்குநடைபெறவுள்ளது.
மனிதஉரிமைமுதலுதவிச்சங்கஉறுப்பினர்,முத்துக்குமாருஉதயசிறிதலைமையில்நடைபெறும் நிகழ்வுக்கு
முதன்மை விருந்தினர்களாக யாழ் மாநகர பிதா இம்மனுவல்ஆனோல்ட்,பேராசிரியர்ம.பெ.மூக்கையா,யாழ்பிராந்தியமனிதஉரிமைஆணைக்குழு ஆணையர் ரி.கனகராஜ்,பொலிஸ்அத்தியட்சகர் பி.யு.உடுகம,இலங்கை ஏதிலியர் மறுவாழ்வுக்கழகத் தலைவி சி.சூரியகுமாரி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

***

யாழ்ப்பாணம்,டிசெ.10
பன்னாட்டு மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் 70 ஆவது வருட நிறைவையொட்டி நாளை நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளது.
இந்த வருடத்திற்கான இந்த நிகழ்வு அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை கலை கலாசார நிகழ்வுக்கூடாக சமூகத்தின்பல்வேறுகுழுக்களுக்கு வெளிப்படுத்தும் விதமாக அமையவுள்ளது.
நாளை காலை 9.15 மணி தொடக்கம் 12.30 மணிவரையாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையரங்கத்தில், இடம்பெறவுள்ளது.




தொழிலாளர்களின்

# உரிமையை வலியுறுத்தி கவனவீர்ப்புப் போராட்டம்

கிளிநொச்சி,டிசெ.10
மனித உரிமை தினத்தை முன்னிட்டு கிளிநாச்சி மாவட்ட வர்த்தக தொழில், பொதுத்தொழிலாளர் சங்கத்தினரால் தொழில் புரியும் இடங்களில் ஆண் – பெண் தொழிலாளர்களின் உரிமையை வலியுறுத்தி கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டம் நேற்றுக் காலை10 மணியளவில்கிளிநொச்சி டிப்போச் சந்திக்கருகில்இடம்பெற்றது.
"தொழில்புரியும்இடங்களில் ஊழியர்கள் மீதான வன்முறையை நிறுத்து" எனும் தொனிப்பொருளில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
இதன்போது தொழிலாளர்கள்எதிர்கொள்ளும்உரிமைகள், பெண்கள் மீதான வன்முறை, வேலை நேரம் மற்றும் விடுமுறை நாட்களில் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துதல் உள்ளிட்ட விடயங்களை முன்னிறுத்தி குறித்த போராட்டம் இடம் பெற்றது.
(214)

## வனவளத் திணைக்களத்தின் உந்துருளி கடத்தல்

முல்லைத்தீவு மாவட்டத்தின்குமுழமுனைகிழக்குப் பகுதியில், சட்டவிரோத மரம் அறுப்பது தொடர்பில் கண்காணிக்கச் சென்ற வனவளத் திணைக்கள அலு வலர்களின் உந்துருளி கடத்தப்பட்டுள்ளது.
சம்பவம்கடந்த7ஆம்திகதி நடைபெற்றுள்ளது.
உந்துருளியில் சென்ற இரண்டு அலுவலர்கள் காட்டுப்பகுதியில் உந்துருளியினைவிட்டுவிட்டுமரம் அறுக்கப்பட்ட பகுதிக்கு சென்றுள்ளனர்.
மரம் அறுத்தவர்கள் அங்கிருந்துதப்பிஓடியுள்ளதுடன் அலுவலர்களின் உந்துருளி காணாமல் போயுள்ளது.
இதுதொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.
பொலிசார் சென்றுதேடுதல் நடத்தியுள்ளனர். வன திணைக்களத்தினரின்உந்துருளிகுமுளமுனைக்காட்டுக்குள் ஆறு ஒன்றுக்கு அப்பால்போடப்பட்டுள்ளது.
உந்துருளியினை மீட்ட பொலிஸார்சம்பவம்குறித்து விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகத்தெரிவித்தனர். (ரீ3)



## தொடர்விபத்துக்களை ஏற்படுத்தி மூன்று உயிர்களை காவு வாங்கிய சாரதி பொலிஸாரிடம் மாட்டினார்

கொழும்பு,டிசெ.10
கொழும்புகல்கிஸ்ஸநீதிமன்றத்துக்கும் இரத்மலானை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கும்அருகில்மதுபோதையில் இருந்த வாகன சாரதி ஒருவர்கவனயீனமாகவாகனத்தைச் செலுத்தி ஏற்படுத்திய விபத்துகளில், 3 பேர் பலியாகியதுடன்,8பேர்காயமடைந்தனர்.
நேற்றுக் காலை இந்த விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. விபத்தில் காயமடைந்த 8 பேர் களுபோவில மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
கொழும்பில் இருந்து காலி நோக்கிப் பயணித்த மகிழுந்துஒன்றுஎரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில்மோட்டார்வாகனம்ஒன்றுடனும், இரண்டு உந்துருளிகளுடனும் மோதியது.
இதில், உந்துருளி ஓட்டுநரும் மற்றொரு நபரும் உயிரிழந்தனர். இதேவேளை, கல்கிஸ்ஸ நீதிமன்றத்துக்கு அருகில் குறித்த சாரதி இரண்டுநபர்கள் மீது மோதியுள்ளார். அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்த விபத்தின் பின்னர் குறித்தசாரதி அந்த வாகனத்திலேயே தப்பிச் சென்றுள்ளார். அதோடு அவர் ஓட்டிய வாகனம் இரத்மலானை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குஅருகில்இன்னும்ஒரு மகிழுந்தின்மீதும்2உந்துருளிகள் மீதும் மோதியுள்ளது.
இந்த விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின்சாரதிதற்போது பொலிஸாரின் பாதுகாப்பில் களுபோவில மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

## ஆற்றில் மூழ்கி மூவர் பலி


கொழும்பு,டிசெ.10
நாவலப்பிட்டிமற்றும்இங்கிரிய ஆகிய பிரதேசங்களில் ஆற்றில் மூழ்கி 3 பேர் உயிரிழந்திருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர கூறியுள்ளார்.
நாவலபிட்டி மகாவலி கங்கைக்கு நீராடச் சென்ற இளைஞர்ஒருவர்சடலமாக மீட்கபட்டுள்ளதாக நாவலப்பிட்டிபொலிஸார்தெரிவித்தனர். இந்தச்சம்பவம்நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றதாக நாவலபிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:
குறித்த இளைஞனின் வீட்டுக்கு காலிப் பகுதியில் இருந்து வந்திருந்த உறவினர்களோடு மகாவலி கங்கைக்குஇரண்டுஇளைஞர்களும்ஒருசிறுமியும்நீராடச் சென்றுள்ளனர்.
இதன்போதுமூன்றுபேரும் நீரில் அடித்து செல்வதை கண்ட பொதுமக்கள் காலிப் பகுதியை சேர்ந்த சிறுமியையும் இளைஞனையும் உயிருடன்மீட்டெடுத்துள்ளனர்.
நாவலப்பிட்டி பலலேகம பகுதியைச் சேர்ந்த 20 வயதுடையரஞ்சித்குமார்என்ற இளைஞன் உயிரிழந்துள்ளார்.
இது தவிர இங்கிரிய பிரதேசத்தில்மாவக்ஓயாவில்மூழ்கியதில்இருபத்தொருவயதுடைய இரண்டுஇளைஞர்களும் உயிரிழந்துள்ளனர்.

## 42 அடி உயரமான நத்தார் மரம்

மட்டக்களப்பு,டிசெ.10
மட்டக்களப்பு புனித லூர்து மாதா ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள 42 அடி உயரமான கிறிஸ்மஸ் மரம் நேற்று முன்தினம் மாலை ஒளியூட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.



ஆலயத்தின்பங்குத்தந்தை அருட்தந்தை லோறன்ஸ் நிக்லஸ் அடிகளார் தலைமையில்இந்தநிகழ்வுநடைபெற்றது.
மூன்றாவது ஆண்டாகவும் யேசு பாலன் பிறப்பினைச் சிறப்பிக்கும் வகையில் இந்த கிறிஸ்மஸ் மரம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. காண்போரை வெகுவாக ஈர்க்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த கிறிஸ்மஸ் மரத்தினை பெருமளவான மக்கள் பார்வையிடுகின்றனர்.



## யாழ். பிராந்திய எஸ்.எஸ்.பி. ரி.ஐ.டி பணிப்பாளரானார்

யாழ்ப்பாணம், டிசெ. 10

யாழ்ப்பாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் வர்ண ஜயசுந்தர.

இலங்கைப் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் ஒருங்கிணைப்புப் பிரிவின் பணிப்பாளராகவும் அவர் நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகராக ஒரு வருடத்துக்கும் மேலாக அவர் கடமையாற்றி வந்தார். இந்த நிலையில் உடன்டியாக நடைமுறைக்குவரும் வகையில் அவர் குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (4,8)

## சாதாரணதரப் பரீட்சையில் நாளாந்தம் முறைகேடுகள்

*பரீட்சைகள் திணைக்களம் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ. 10

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை தொடர்பில், நாளாந்தம் 3 அல்லது 4 முறைப்பாடுகள் கிடைக்கின்றன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முறைப்பாடுகள் குறித்துப் பரிசீலிப்பதற்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பி பூஜித கூறியுள்ளார் என்று கொழும்பு தொலைக்காட்சி செய்தி வெளியிட்டது.

பரீட்சை தொடர்பில் இதுவரை 50 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அடையாளங் காணப்பட்டுள்ள 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பரீட்சை மத்திய நிலையங்களில் மேலதிகமாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அலைபேசியைப் பயன்படுத்தி பரீட்சையில் தோற்றிய மாணவர் மற்றும் அவருக்கு உதவிய ஆசிரியர் மீது விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. இந்த விடயம் குறித்து கல்வி அமைச்சுக்கு அறிவித்துள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இவை குறித்து விசாரணை செய்வதற்கு ஒழுக்காற்றுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.எம். ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

மாணவருக்கு உதவிய ஆசிரியரை வரவழைத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (4)

### நீதிமன்றில் வழக்கு இருந்தாலும்

# மகிந்தவைப் பதவியில் அமர்த்துவதில் மைத்திரிபால தீவிரமாகவே உள்ளார்

**கொழும்பு, டிசெ. 10**

**நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அரசதலைவரின் அரசிதழ் அறிவிப்புக்கு எதிரான அடிப்படை உரிமை மனுக்கள் மீதான நீதிமன்றத் தீர்ப்பு இந்தவாரம் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், மகிந்த ராஜபக்ச தலைமையில் மீண்டும் புதிய அரசை அமைப்பதற்கான மாற்று ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.**

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு, நாடாளுமன்ற கலைப்புக்கு சாதகமாக வந்தால், அடுத்த பொதுத்தேர்தல்வரை மகிந்த ராஜபச்சவை தலைமை அமைச்சராகக் கொண்ட புதிய இடைக்கால அரசை மைத்திரிபால சிறிசேன நியமிப்பார் என்று கூறப்படுகிறது.

அதேவேளை, அரசிதழ் அறிவிப்புக்கு எதிராக உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தால், அடுத்த ஒன்றரை ஆண்டுகளுக்கு, அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய அரசு ஒன்றை அமைப்பது குறித்தும் பல்வேறு மட்டங்களிலும் ஆலோசனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மைத்திரிபால சிறிசேன கடந்தவாரம், மகிந்த ராஜபக்ச மற்றும் ஐ.தே.க உள்ளிட்ட கட்சிகளுடன் ஆலோசனை நடத்தியிருந்தார்.

மகிந்த ராஜபக்சவும் கடந்த சில நாள்களாக எதிர்த்தரப்பைச் சேர்ந்த பலருடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குப் பின்னர் ஏதாவது ஒரு அரசை அமைத்து, தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தீர்க்க வேண்டிய நிலையில் அரசதலைவர் இருக்கிறார்.

இடைக்கால அரசை அல்லது, அனைத்துக் கட்சி அரசை அமைத்து இந்த நெருக்கடியைத்தீர்ப்பதிலேயே அவர் கவனம் செலுத்தி வருகிறார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உச்சநீதிமன்றத் தீர்ப்பு தமக்குச் சாதகமாக வந்தால், ரணில் விக்கிரமசிங்கவை தலை அமைச்சராக நியமிப்பதற்கு அழுத்தங்களைக் கொடுப்பதற்கு ஐ.தே.க தயாராகி வரும் நிலையிலேயே, அதற்கு மாறான திட்டங்களை மைத்திரிபால ஆலோசித்து வருகிறார் என்று கூறப்படுகிறது. (4)

## ஐ.தே.கவுக்கும் ரணிலுக்கும் தொடர்பாளர் சுமந்திரனே!

*சுசில் பிரேமஜயந்த குற்றச்சாட்டு*

கொழும்பு, டிசெ. 10

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இரகசிய தொடர்பாளராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் செயற்படுகின்றார்



என்று ஐ.ம்.சு. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த குற்றஞ்சாட்டி யுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களுடன் உரையாடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த நவம்பர் மாதம் 7 ஆம் திகதி அரசமைப்பில் திருத்தங்கள் கொண்டுவர ஐக்கிய தேசியக் கட்சி முயற்சி மேற்கொண்டது. அதை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு எதிர்த்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் அந்த ஆவணங்களை மொழிபெயர்த்து 7 ஆம் திகதி காலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார் என்றும் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இதேவேளை, மேற்கத்தைய நாடுகளைத் திருப்திப்படுத்தவே ஐக்கிய தேசியக் கட்சி இந்த முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் சுசில் பிரேமஜயந்த குற்றம் சாட்டியுள்ளார். (4)

## சிரந்தி பற்றிய செய்திகள் எதுவும் உண்மையுமில்லை

### நாமல் கீச்சகத்தில் பதிவு

கொழும்பு, டிசெ. 10

பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றம் தொடர்பில் சிரந்தி ராஜபக்சவே உத்தரவிட்டார் என்று சமூக வலைத்தளங்களில் வெளிவரும் செய்திகளில் எவ்வித உண்மையுமில்லையென்று நாமல் ராஜபக்ச தனது கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார்.

கடந்த 5ஆம் திகதி வீடொன்றிலிருந்து 5'நாள்கள் உணவு வழங்கப்படாமல் கட்டிவைக்கப்பட்டிருந்த நாயொன்று பெண்ணொருவரால் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் மீட்கப்பட்டதாகவும் இதனையடுத்துக் குறித்த வீட்டின் உரிமையாளர் சார்பில் முன்வந்த சிரந்தி ராஜபக்ச, நாயை மீட்டெடுத்த பொலிஸாரின் இடமாற்றம் தொடர்பில் அன்று மாலையே நடவடிக்கை எடுத்தாரென்று சர்மினி சேரசிங்க என்ற பெண் கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார்.

இதனையடுத்து சமூக வலைத்தளங்களில் சிரந்தி குறித்து அவதூறுகள் பரப்பப்படுகின்றன என்றும் அதில் எவ்வித உண்மையுமில்லையென்றும், தனது தாய் மிருகங்கள் மீது மிகுந்த இரக்கமுடையவரென்றும் நாமல் பதிவிட்டுள்ளார். (4)

# பிரிட்டன் நாடாளுமன்றில் இனப்படுகொலை மாநாடு

### இன்று பலரும் கருத்து முன்வைப்பர்

இலங்கையின் இறுதிப் போரில் நடைபெற்ற மனிதாபிமான சட்டங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் அரசின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தியும், சம்பந்தப்பட்டவர்களைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் முன்பாக நிறுத்தி நீதியை நிலைநாட்டவேண்டும் என்று கோரியும் பிரிட்டன் நாடாளுமன்றில் இனப்படுகொலை மாநாடு இன்று நடைபெறவுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

இந்த இனப்படுகொலை மாநாடு பிரிட்டன் வெஸ்ட்மினிஸ்டர் நாடாளுமன்றின் 10ஆம் இலக்கக் குழு அறையில் மாலை ஆறு மணிதொடக்கம் இரவு ஒன்பது மணிவரை (பிரிட்டன் நேரப்படி) 'தடுப்போம், தண்டிப்போம் எனக் கொடுத்த வாக்குறுதி எங்கே?' எனும் தொனிப் பொருளில் நடைபெறவுள்ளது.

இலங்கையில் அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஏற்கனவே இலங்கை அரசு இணக்கமளித்த விடயங்களை முழுமையாக முன்னெடுத்திருக்கவில்லை. எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் ம்னித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கை அரசின் பொறுப்புக்கூறலை எவ்வாறு வலியுறுத்துவது என்றும் இழைக்கப்பட்ட அநீதிகளுக்குத் தண்டனை அளிப்பதற்கான நடவடிக்கைளை எவ்வாறு நடைறைப்படுத்துவது என்றும் இலங்கையைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் முன்பாக நிறுத்துவதற்கான நடவடிக்கைளை நகர்த்திச் செல்வது தொடர்பாகவும் அமர்வில் கருத்துக்களை முன்வைக்கவுள்ளனர்.

பிரிட்டனின் மூத்த அரசியல்வாதியும் பரிஸ்டருமான பீற்றர் ஹேன்ஸ் இலங்கை தொடர்பான கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் குழுவின் முக்கியஸ்தர் ரிச்சட் ரோஜர்ஸ், உலகளாவிய விடாமுயற்சி மற்றும் பங்குதாரர் அமைப்பின் அலெக்ஸ் பிரசந்தி, மற்றும் நாடுகடந்த தமிழீழ அரசின் தலைமை அமைச்சர் வி.ருத்திரகுமாரன்(ஸ்கைப்தொழில் நுட்பத்தின் மூலம் நியூயோர்க்கிலிருந்து) முதன்மை உரைகளை நிகழ்த்தவுள்ளனர். இதேவேளை காணாமல் போனவர்களைக் கண்டறிவதற்கான அரசதலைவர் ஆணைக்குழுவின் முன்னாள் செயலாளர் எம்.சி.எம்.இக்பால், அரசியல் மற்றும் பன்னாட்டுக் கற்கைகள் பிரிவின் இணை ஒருங்கிணைப்பாளர் கலாநிதி சுதா நடராஜா, மனித உரிமை பரிஸ்டர் சிவாணி ஜெயராஜா, மனித உரிமை சட்டத்தரணி கிம் ரென்ஃபியூ, கலாநிதி பரமலிங்கம், அருண் கணநாதன், அம்பிகை சீவரட்ணம் ஆகியோர் இந்தநிகழ்வின் இரண்டாவது அமர்வில் கருத்துக்களை முன்வைக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் இலங்கையைப் பன்னாட்டுக் குற்றவியல் நிதிமன்றத்தின் முன்பாக நிறுத்தி நீதியைப் பெற்றுக்கொள்வதற்கான வலியுறுத்தலை பிரிட்டன் முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பெற்றுக் கொள்ளப்பட்ட 10 ஆயிரத்துக்கும் அதிகமான இணையவழிக் கையெழுத்துப் போராட்டம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# இலங்கை அரசுக்கு நிதி வழங்க நிதி நிறுவனங்கள் பின்னடிப்பு

## அரசியல் திருகுதாளமே காரணம் தீர்ப்புவரும்வரை காத்திருக்கின்றன

கொழும்பு, டிசெ. 10

**அரசியல் நெருக்கடிகளால், இலங்கைக்குக் கடன் வழங்க இணங்கிய பன்னாட்டு நிதி நிறுவனங்கள் பல, தமது முடிவுகளை இடைநிறுத்தி வைத்துள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. தற்போதைய அரசியல் இழுபறிகளால், சட்டரீதியான அரசு தொடர்பில் கேள்விகள் எழுந்துள்ள நிலையில் நிதி வழங்குவதை இடைநிறுத்தியுள்ளன.**

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியாகும் வரை, தமது கடன்கள் தொடர்பான முடிவுகள் எடுப்பதை அனைத்துலக நிதி நிறுவனங்கள் நிறுத்தி வைத்துள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு எதிர்வரும் ஜனவரி தொடக்கம் ஏப்ரல் மாதத்துக்கிடையில் 1.5 பில்லியன் டொலர் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளது.

இதில் ஒரு பில்லியன் டொலர் எதிர்வரும் ஜனவரி 15ஆம் திகதி செலுத்தப்பட வேண்டும். இதற்காக, சீன அபிவிருத்தி வங்கியிடம் 500 மில்லியன் டொலரைக் கடனாகப் பெறுவதற்கான பேச்சுக்கள் நடத்தப்பட்டிருந்தன.

ஆனால், அரசின் சட்டபூர்வ தன்மை தொடர்பான இழுபறியால், இந்தக் கடனை சீன அபிவிருத்தி வங்கி நிறுத்தி வைத்துள்ளது. ஏற்கனவே சீன அபிவிருத்தி வங்கியிலும் இலங்கை அரசு ஒரு பில்லியன் டொலரைக் கடனாகப் பெற்றுள்ளது.

சீனாவிடம் கடனைப் பெறுவதற்கு பேச்சு நடத்தினோம், நீதிமன்ற உத்தரவுகளுக்காக காத்திருக்கிறோம், என்று இலங்கை அரச அதிகாரி ஒருவர் கூறினார்.

"நீதிமன்ற தீர்ப்பு வரும்வரை, யாரும் எங்களுக்குக் கடன் கொடுக்கப்போவதில்லை. அவர்கள் அரசியல் சூழ்நிலை தெளிவாக உள்ளதா என்பதையே அவதானிக்க விரும்புகிறார்கள். அவர்கள் எங்களுக்குக் கடன் வழங்கமாட்டோம் என்று கூறவில்லை. ஆனால், முதலில் தெளிவுபடுத்துங்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள்" என்று அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசியல் நெருக்கடிகளால் அனைத்துலக நாணய நிதியமும், அடுத்த கடன் தவணைக்கான பேச்சுக்களை இடைநிறுத்திவைத்துள்ளது.

2016இல் அனைத்துலக நாணய நிதியம் இலங்கைக்கு 1.5 பில்லியன் டொலர் கடனை மூன்று ஆண்டுகளில் கட்டம் கட்டமாக வழங்க இணங்கியிருந்தது.

அதில் ஒரு பில்லியன் டொலர் இன்னமும் வழங்கப்படாத நிலையில், தெளிவான அரசு அமைக்கப்படும் வரை காத்திருப்பதாக அனைத்துலக நாணய நிதியம் அறிவித்துள்ளது.. (4)

## மகா சங்கத்தினர் அனைவருமே மைத்திரியை ஆசீர்வதிக்கின்றனர்



கொழும்பு, டிசெ. 10

தாய்நாட்டுக்காகத் தீர்மானங்களை மேற்கொண்டு தைரியமாகச் செயற்படும் அரசதலைவரை அனைத்து மகா சங்கத்தினரும் ஆசீர்வதிக்கின்றனர் என்று திம்புலாகலை தேவாலங்கார தேரர் தெரிவித்துள்ளார்.

மன்னம்பிட்டிய பாலத்துக்கு அருகில் சிறிவாலுகானதீ பௌத்த மத்திய நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையைத் திறந்துவைக்கும் நிகழ்வு அரசதலைவரின் பங்குபற்றலுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிலதரப்பினரின் நடவடிக்கைகளுக்கு மத்தியில் நாடு என்ற ரீதியில் சவால்களுக்கு முகம்கொடுத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் எப்போதும் நாட்டுக்காகவே தீர்மானங்களை மேற்கொண்டு தைரியமாகச் செயற்பட்டுவரும் மைத்திரிபால சிறிசேனவுக்கு மகாசங்கத்தினர் அனைவருடைய ஆசீர்வாதமும் உள்ளது.

மைத்திரிபால சிறிசேன தேசிய ரீதியாகப் பெரும் பணியொன்றை நிறைவேற்றிவருகிறார்.

அதைப் போன்றே சாசனத்தின் மேம்பாட்டுக்காகவும் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையிலான சேவையை வழங்கிவருகிறார் எனக்கூறினார். என்று அரசதலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (4)

## தூதரகங்களின் உதவியுடன் பதவிக்குவர ரணில் முயற்சி!

### குற்றஞ்சாட்டுகிறார் கோத்தபாய

கொழும்பு, டிசெ. 10

தூதரகங்களின் உதவியுடனும், புலம்பெயர் புலி அமைப்புகளின் உதவியுடனும் தலைமை அமைச்சராக வருவதற்கு ரணில் மேற்குலக நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்கின்றார். இதுவே ரணிலின் பலம் என்று பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

மொரட்டுவையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற எலிய அமைப்பின் கருத்தரங்கில் அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களால் நியமிக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசதலைவர் தற்போது சுதந்திரமாகச் செயற்பட முடியாத அளவுக்குப் பன்னாடுகளின் அழுத்தம் எழுந்துள்ளது.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ச ஆகியோருக்கு எதிராகவே மேற்குலக நாடுகளின் தூதுவர்கள் செயற்படுகின்றனர் என்றும் கோத்தபாய ராஜபக்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மைத்திரிபால, அரசதலைவருக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தியே புதிய தலைமை அமைச்சரையும், அரசையும் நியமித்தார். அதற்கு எதிராக மேற்குலக நாடுகளின் தூதுவர்கள் செயற்படுகின்றனர். தமக்குத் தேவையான அரசதலைவர், தலைமை அமைச்சரை நியமிக்கவே அவர்கள் முற்படுகின்றனர்.

2014 ஆம் ஆண்டு தலைதூக்கிய சக்திகள் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளன. அன்றுபோல் இன்றும் போலிப் பரப்புரைகள் முன்னெடுத்துவருகின்றன.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் முன்வைக்கப்பட்டபோது அதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் முழுமையாக வாசித்தார்களா தெரியவில்லை. அவ்வாறு வாசித்திருந்தால் அப்படியானதொரு சட்டமூலத்துக்கு அனுமதி வழங்கியிருக்கமாட்டார்கள் - என்று கோத்தபாய மேலும் கூறினார். (4)

## வவுணதீவுப் பொலிஸார் கொலை: விசாரணைகள் தொடர்கின்றன

### ஆயுதங்கள் மீட்கப்படவில்லை



கொழும்பு, டிசெ. 10

மட்டக்களப்பு வவுணதீவில் பொலிஸ் அலுவலர்கள் இருவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக, விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். கொலைகள் தொடர்பாக, கடந்த மாதம் 30ஆம் திகதி வட்டக்கச்சியைச் சேர்ந்த இராசநாயகம் சர்வானந்தன் மற்றும் கன்னக்குடாவைச் சேர்ந்த கதிரித்தம்பி இராஜகுமாரன் ஆகிய இரண்டு முன்னாள் போராளிகள் தடுத்துவைத்து விசாரிக்கப்படுகின்றனர்.

மாவீரர் நாளை நடத்துவது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைக்குப் பழிவாங்கும் நோக்கில் இந்தக் கொலைகள் இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் முன்னர் கூறியிருந்தனர்.

எனினும், இந்தக் கொலைகள் தொடர்பான விசாரணைகளில் எந்த முன்னேற்றங்களும் இதுவரை ஏற்படவில்லை என்றும், கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், கொல்லப்பட்ட பொலிஸாரிடம் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட கைத்துப்பாக்கிகள் இன்னமும் மீட்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளுக்கும் இந்தக் கொலைக்கும் தொடர்பு இருப்பதற்கான சாத்தியங்களை நிராகரிக்க முடியாது என்று குற்றப்புலனாய்வுப் பிரிவு கூறியுள்ளது. (4)

## அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் ஐ.தே.கவில் போட்டியிடவே விருப்பம்

### முன்னாள் அமைச்சர் மேர்வின் கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 10

பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட விரும்புகிறேன் என்று முன்னாள் அமைச்சரும், மக்கள் சேவைக் கட்சியின் தலைவருமான மேர்வின் சில்வா தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரணில் விக்கிரமசிங்க சிறந்த தலைவர். தூரநோக்குடன் செயற்படும் அரசியல்வாதி. அவர் தலைமையில் செயற்படுவதற்கு விரும்புகின்றேன். ஐக்கிய தேசியக்கட்சி வாய்ப்பளிக்குமானால் அடுத்த பொதுத்தேர்தலில் எந்தவொரு தொகுதியிலும் போட்டியிடுவதற்குத் தயாராகவே இருக்கின்றேன் - என்றார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினராக - அமைச்சராக் இருந்த மேர்வின் சில்வாவுக்கு கடந்தமுறை தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐ.ம.சு. முன்னணி வேட்புமனு வழங்கவில்லை. அதனால் ஐ.தே.கவும் வழங்காது என்று அந்தக் கட்சிக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்தனர். (4)



### பலஸ்தீனத்துக்கு எதிராக ஐ.நாவில்

## அமெரிக்கா தீர்மானம் முன்வைக்க அதிலிருந்து நழுவியது இலங்கை அரசு

கொழும்பு, டிசெ. 10

பலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்புக்கு எதிராக ஐ.நா பொதுச்சபையில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானவரைவுக்கு எதிராக வாக்களிக்காமல் இலங்கை அரசு நழுவியுள்ளது. ஹமாஸ் அமைப்புக்குக் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை ஐ.நா. பொதுச்சபையில் அமெரிக்கா கொண்டுவந்தது. இந்தத் தீர்மானம் போதிய ஆதரவு கிடைக்காததால் தோல்வியடைந்தது.

பொதுச்சபையின், 86 நாடுகள் தீர்மானத்தை ஆதரித்தன. 57 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. இந்தியா, இலங்கை உள்ளிட்ட 33 நாடுகள் வாக்களிக்காமல் நடுநிலை வகித்தன. இந்தத் தீர்மானத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் இல்லாததால் தோல்வியடைந்தது. பலஸ்தீனத்தை நட்புநாடு என்று இலங்கை கொண்டாடும் நிலையிலும், இந்தத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களிக்காமல் இலங்கை நழுவியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (4)



## தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு ஈருருளிகள்!

கொடிகாமம், டிசெ. 10

கொடிகாமம்திருநாவுக்கரசுஆரம்பப்பாடசாலையில்இருந்து ஐந்தாம்தரப்புலமைப்பரிசில்பரீட்சைக்குத்தோற்றிவெட்டுப் புள்ளிகளுக்கு மேல்பெற்ற 9 மாணவர்களுக்கு ஈருருளிகள் பரிசாக வழங்கப்பட்டன.

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையில் கடந்த மாதம் 19ஆம் திகதி நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சிக் கல்வி வலயக்கல்விநிர்வாகபிரதிக்கல்விப்பணிப்பாளர்த. கிருபாகரன் மாணவர்களுக்கு ஈருருளிகளை வழங்கினார். குறித்த ஈருருளிகள்கொடிகாமம்திருநாவுக்கரசுஆரம்பபாடசாலையின் பழைய மாணவனும் லண்டனில் வசிப்பவருமான சுப்பிரமணியம்சபேசனின்நிதிப்பங்களிப்புடன்கொள்வனவு செய்யப்பட்டன. (ம-159)

## யாழ்ப்பாணக் குடாநாட்டு

# வீட்டுத்திட்டத்தில் அரசியல்வாதிகளின் பரிந்துரைக்கு முன்னுரிமை ஏதுமில்லை

யாழ்ப்பாணம், டிசெ. 10

**யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான வீட்டுத் திட்டத்தில் அரசியல் வாதிகளின் பரிந்துரைகள் எதற்கும் முன்னுரிமை வழங்கப்பட மாட்டாது. தகுதியான, பாதிப்புற்ற குடும்பங்கள் என உறுதிசெய்யப்படும் குடும்பங்களுக்கு மட்டுமே வீடுகள் வழங்கப்படும் என்று தெரிவித்தார் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன்.**

யாழ்ப்பாணத்தில்அண்மைக்காலமாக சில அரசியல்கட்சிகளின் அலுவலகங்களில் வீட்டுத் திட்டம் தொடர்பில் பதிவு செய்யப்படுவதுடன், சில கட்சிகளால் தமக்கு வேண்டியவர்களுக்கு வீட்டுத் திட்டங்களை வழங்குவதற்கும் பரிந்துரைகள் செய்யப்படுகின்றன என்று அண்மைக்காலமாக தொடர்ந்து முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டு வருகின்றன். இதையடுத்துஇந்தவிவகாரம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா.வேதநாயகனைத் தொடர்புகொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணக்குடாநாட்டில்வீடுஇல்லாதவர்கள்வீட்டுத்திட்டங்கள்வாயிலாக தமக்கு வீடுகள் கோரி பிரதேச செயலகங்களில் பதிவு செய்கின்றனர். அவ்வாறு பதிவு செய்தவர்களின் விவரம் மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அதன் அடிப்படையில் மாவட்டத்துக்குக்கிடைக்கும்வீடுகளில் இருந்துதகைமையின்அடிப்படையில் மட்டுமேமுன்னுரிமைவழங்கப்படும். இதைவிடவேறுஎந்தநடைமுறைக்கும் நாம் முன்னுரிமை கொடுக்கவோ அல்லதுபணிந்துசெல்லப்போவதோஇல்லை. எந்தக் கட்சியானாலும் அல்லது எந்த அரசியல்வாதிகளிடம் சென்று பதிந்தாலும் அதனை நாம் கணக்கெடுப்பதில்லை. இனியும்அவ்வாறானநிலைப்பாடே தொடரும். கட்சிகள் ஏதேனும் சொல்லி மக்களின் விவரங்களைப் பதிவுசெய்தால் அது அவர்களின் அரசியல் செயற்பாடு. ஆனால் அதற்காகக் கட்சிகளின் பரிந்துரைகள் கணக்கில் எடுக்கப்படும்என்றுஎவரும்எள்ளளவும் சிந்திக்கத் தேவையில்லை - என்றார்.

கடந்த2015ஆம்ஆண்டுக்குமுன்னர், அதாவது முன்னாள் அரச தலைவர் மகிந்தராஜபக்சவின்ஆட்சிக்காலத்தில் வீட்டுத்திட்டங்கள்உள்ளிட்ட அரசஉதவிகள் சில கட்சிகளின் அலுவலகங்களில்பதிவுசெய்யும்நடைமுறைஇருந்தது. அதன்பின்னர்அரசதலைவர்மைத்திரிபால - முன்னாள்தலைமை அமைச்சர்ரணில்விக்கிரமசிங்கதலைமையிலான கூட்டு அரசில் இந்த நடைமுறை இல்லாதுஇருந்தது. கூட்டுஅரசின்ஆட்சி முடிவுக்கு வந்ததன் பின்னர் கடந்த ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதிக்குப் பின்னர் மீண்டும் 2015ஆம் ஆண்டுக்கு முன்னரான நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-105)

## 'மக்கள் ஆதரவு மையம்' எனும் அமைப்பு ஆரம்பம்

*சமூக சேவைகளுக்காக*



யாழ்ப்பாணம், டிசெ. 10

'மக்கள் ஆதரவு மையம்' எனும் சமூக சேவைகள் அமைப்பின் ஆரம்ப நிகழ்வும் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல்உபகரணங்கள்வழங்கும்நிகழ்வும்திருநெல்வேலியில் கடந்த மாதம் நடைபெற்றன.

மக்களின் ஆதரவு மையத்தின் தலைமைப் பணிப்பாளர் ச.சுரேந்திரனின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகதமிழ்த்துறையின்முன்னாள் தலைவரும்வாழ்நாள்பேராசிரியருமாகியக.சிவலிங்கராஜா கலந்துகொண்டுமேற்படிஅமைப்பின்செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தார். 'மக்கள் ஆதரவு மையம்' அமைப்பின் அறிமுக உரையை அதன் அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளர் ந.கஜேந்திரகுமார் வழங்கினார்.

சிறப்பு விருந்தினர்களாக கணக்காளர் ச.சஞ்சீவ்பாபு, யாழ்ப்பாணம்செங்குந்தா இந்துக்கல்லூரியின் அதிபர் இ.பாலச்சந்திரன், யாழ்ப்பாணம்தேசியகல்வியியல்கல்லூரியின்பீடாதிபதி சி.பத்மராஜா, யாழ்ப்பாண நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய அதிபர் ந.புஷ்பராஜா, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் சி.பரணிதரன், சட்டத்தரணி சுதாகஜேந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-8)



சாவகச்சேரிபிரதேசசெயலக உத்தியோகத்தர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட 100 மணித்தியாலய சிங்கள மொழி கற்கைநெறிப் பயிற்சியின் இறுதிநாள் நிகழ்வுகள் வரணி கலாசார மண்டபத்தில் கடந்த 7ஆம் திகதிபிற்பகல்2மணிக்கு நடைபெற்றன. இந்த நிகழ்வுகளில்முதன்மை விருந்தினராகச் சாவகச்சேரி பிரதேச செயலர் தேவெந்திரினிபாபுகலந்து கொண்டார். (ம-159)

## விபத்தில் இருவருக்கு காயங்கள்

சாவகச்சேரி, டிசெ. 10

மிருசுவில் உசன் சந்தியில் உந்துருளி மோதியதில் குடும்பத் தலைவருக்குக் கால் எலும்பு முறிந்தது. உந்துளியைச் செலுத்திவந்தவருக்குக் கை எலும்பு முறிந்தது.

கடந்த 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பளைப் பகுதியில் வேலைக்குச் சென்றுவிட்டு பட்டா ரக வாகனத்தில் வந்தவர் உசன் சந்தியில் இறங்கியபோது கையில் வைத்திருந்த தலைக்கவசம் கீழே வீழ்ந்ததால் அதனை எடுக்க முற்பட்ட வேளையில் அந்த வழியே வந்த உந்துருளி அவரை மோதித் தள்ளியது என்று விபத்தைப் பார்த்த சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். (ம-9,159)

## பால்நிலை வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனி யாழில்!

பால்நிலை வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனி யாழ்ப்பாணத்தில் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்றது.

'வேலைத்தளத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை இல்லாதொழிப்போம்' என்ற தொனிப்பொருளிலான மாநாடு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் கடந்த 7ஆம் திகதி காலை 10 மணிமுதல் நடைபெற்றது. இந்த மாநாட்டுக்கு முன்னதாக காலை 8 மணியளவில் குறித்த விழிப்புணர்வு நடைபவனி இடம்பெற்றது. யாழ்ப்பாணம் பேருந்துத்தரிப்பிடத்துக்குமுன்பாகவிழிப்புணர்வுஊர்வலம் ஆரம்பமாகிநல்லூர்நாவலர்கலாசாரமண்டபத்தில்நிறைவடைந்தது.

யாழ்ப்பாணம் சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் நிகழ்வுகள்நடைபெற்றன. முதன்மைவிருந்தினராகயாழ்ப்பாணப்பல்கலைக்கழகசட்டத்துறைவிரிவுரையாளர்திருமதி கோசலை மதன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் யாழ்ப்பாணப் பிராந்தியப் பொறுப்பதிகாரி வேலும்மயிலும் பிரபாகரன் கலந்து கொண்டார். (ம-7)






# அபிவிருத்தி அலுவலர்களுக்கான பத்து நாள்கள் அறிமுகப் பயிற்சி நெறி

கொடிகாமம், டிசெ. 10

வடக்கு மாகாண முகாமைத்துவப் பயிற்சி அலகால் புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களுக்கான 10 நாள்கள் அறிமுகப் பயிற்சி நெறி அண்மையில் நடைபெற்றது.

நல்லூர் பிரதேச சபையில் கடந்த மாதம் 15ஆம்திகதியில்இருந்து30ஆம்திகதிவரையிலேயே இந்தப்10 நாள் (கிழமை நாள்கள்) பயிற்சி நெறி நடைபெற்றது. வடமாகாண முகாமைத்துவ அமைப்பின் பணிப்பாளர் திருமதி த.உமா தலைமையில் இந்தப் பயிற்சி நெறிகள் முன்னெடுக்கப்பட்டன. 2017ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய அஞ்சல் தின விழாவில் முதலாம் இடத்தைப் பிடித்து அரச தலைவர் விருது வென்ற சாவகச்சேரி தபால் நிலையத்தை பயிற்சியின் ஒன்பதாம் நாளன்று புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அபிவிருத்தி அலுவலர்கள் பார்வையிட்டனர். (ம-159)

## யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள்

# ஆடு, மாடுகளை கைமாற்றும் நடைமுறை மேலும் இறுகியது

**யாழ்ப்பாணம், டிசெ. 10**
**யாழ்ப்பாண மாநகர சபையின் எல்லைக்குள் மாடுகள், ஆடுகளைக் கைமாற்றுபவர்களுக்குயாழ்ப்பாணமாநகரசபையால்விடுக்கப்பட்டஅறிவுறுத்தல் மேலும் இறுக்கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் ஆடுகள், மாடுகள் களவாடப்படுகின்றன. பலசயமங்களில்அவை இறைச்சியாக்கப்பட்டுவிற்பனைசெய்யப்படுகின்றன எனவும் குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில் ஆடுகள், மாடுகளை இறைச்சியாக்குவோருக்கு யாழ்ப்பாண மாநகர சபை பல்வேறு அறிவுறுத்தல்களை விடுத்திருந்தது.
யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில்ஆடுகள், மாடுகளைவிற்று, வாங்குவோர் அதைக் கொண்டு செல்லும் போது அந்தப் பிரிவு கிராம அலுவலரின்சான்றுப்பத்திரம்அல்லதுஅந்தப் பகுதிக்குப் பொறுப்பான சமாதான நீதிவானின் சான்றுப் பத்திரம் அல்லது மாநகர உறுப்பினர் ஒருவருடைய சான்றுப் பத்திரம் இருக்க வேண்டும் என்றுசபைஅறிவித்திருந்தது. கொண்டு செல்லப்படும். மாடுகள், ஆடுகள்யாருடையன என்பதை உறுதிப்படுத்திய பின்னரேஅவற்றைவெட்டவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில்இந்தநடைமுறைதற்போதுமேலும் இறுக்கமாக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாண மாநகரசபையின்சிறப்பு அமர்வுகடந்தவெள்ளிக்கிழமைஇடம் பெற்றது. அந்த அமர்வில் நிதிக்குழு பற்றியஅறிக்கைமுன்மொழிவுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டு அந்த அறிக்கையில் திருத்தங்களைமேற்கொள்ளும்போது ஆடுகள், மாடுகளைக்கைமாற்றுவதற்கு மாநகரசபைஉறுப்பினர்உறுதிப்படுத்தலாம் என்று குறிப்பிட்ட அனுமதியை நீக்குமாறுஉறுப்பினர்நசீர்கோரினார். இதனால் பக்கச் சார்பாகச் செயற்படுவதற்கும், துணை போவதற்கும் அதிக சந்தப்பங்கள் உள்ளன. அத்துடன் ஆடு, மாடுகளைக் கைமாற்றுபவர்களுடன் முரண்பட வேண்டிய சூழலும் ஏற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இதையடுத்துக் கருத்துத் தெரிவித்த உறுப்பினர் ரெமீடியஸ் சமாதானநீதிவான்கள்உறுதிப்படுத்தலாம் என்ற நிபந்தனையையும் நீக்குமாறு கோரினார். உறுப்பினர்களும்அதற்கு ஆமோதித்தனர்.
இதையடுத்துக் கருத்துத் தெரிவித்த மாநகர முதல்வர் இம்மனுவல் ஆனோல்ட், "மாடுகள், ஆடுகளைவெட்டுவோர் சிரமங்களுக்கு உட்படுகின்றனர் என்று கோரியதன் அடிப்படையிலும், அவர்கள் கிராம அலுவலரிடம் செல்லும்போது அவர் இல்லாத சந்தப்பத்தில் அந்த ஆடுகள், மாடுகளை கைமாற்ற பெரும் சிரமத்துக்கு உட்படுகின்றனர் என்று எனது கவனத்துக்குக் கொண்டுவந்ததன் அடிப்படையிலுமே நகரசபைஉறுப்பினர்களும், சமாதான நீதிவான்களும் இதற்கு அனுமதி வழங்கலாம் என்றுகுறிப்பிடப்பட்டது. இப்போதுநீங்கள்வேண்டாம்என்றால் அதை நீக்கி விடலாம்" - என்றார்.
இதன்படிஇனிவரும்காலங்களில்மாடுகள், ஆடுகளைக்கைமாற்றுவோர்கிராம அலுவலரிடம்அல்லதுஅரசஅங்கீகாரம் உள்ள ஒருவரிடம் மட்டுமே உறுதிப்படுத்தவேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. (ம-21)


## கலைவிழாவும் பரிசளிப்பும்

### அரும்புகள் முன்பள்ளி



நாவற்குழி அரும்புகள் முன்பள்ளியின் கலைவிழா சான்றோர் சனசமூக நிலைய பொது மண்டபத்தில் கடந்த 28ஆம்திகதிபுதன்கிழமைபிற்பகல்3மணிக்குமுன்பள்ளி ஆசிரியர் திருமதி மே. தர்மதுரையின் தலைமையில் நடைபெற்றது.
இந்த விழாவில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ம. பிரபாகரன் கலந்து கொண்டார். சிறப்புவிருந்தினர்களாகசாவகச்சேரிபிரதேச சபை உறுப்பினர் க. லூர்துமேரி, கைதடி நாவற்குழி அ. த. க. பாடசாலை அதிபர் ஞா. மரியநாயகம், நாவற்குழி முன்பள்ளிகளின் கோட்ட இணைப்பாளர் ர. தர்மிலா, நாவற்குழி முன்பள்ளியின் குடும்ப இணைப்பாளர் வி. சயந்தா ஆகியோர் கலந்து கொண்டனர். மதிப்புறு விருந்தினர்களாகசான்றோர்சனசமூகநிலையதலைவர் க. முத்தையா, சான்றோர்சனசமூகநிலையச்செயலாளர் அ. எட்வின் ஆகியோர் கலந்து கொண்டனர். சான்றோர் சனசமூக நிலைய அனுசரணையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

### வரணி வடக்கு அ.த.க



வரணி வடக்கு அ. த. க பாடசாலையின் பரிசளிப்பு விழா பாடசாலை மண்டபத்தில் கடந்த 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
வரணிவடக்குஅ. த. கபாடசாலையின்அதிபர்ந. வசந்தரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 70க்கும் மேல் புள்ளிகள் பெற்ற 9 மாணவர்களுக்கும்வாசிப்புமாதப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் வலயமட்ட போட்டிகளில்வெற்றிபெற்றமாணவர்களுக்கும்பரிசில்கள்வழங்கப்பட்டன.
விழாவுக்குமுதன்மைவிருந்தினராகதென்மராட்சிக்கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். திருக்குமரன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாகபாடசாலைஅபிவிருத்திக்குழுச்செயலாளர் செ. ஈஸ்வரநாதன், பழைய மாணவர் இ. கஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.


### சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இருந்து ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின்முதன்மைமண்டபத்தில்அதிபர்செ. பேரின்பநாதனின் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வுக்குமுதன்மைவிருந்தினராகதென்மராட்சிகல்வி வலய கல்வி அபிவிருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி. சிவநாதன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய தமிழ்ப் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வே. உதயகுமார் கலந்துகொண்டார். மதிப்புறுவிருந்தினராககல்லூரியின் பழைய மாணவனும் லண்டன் பழைய மாணவர் ஆசிரியர்சங்கப்பிரதிநிதியுமானகு. செல்வரத்தினம்கலந்து கொண்டார். (ம-159,7,8,9)



## கரவெட்டி செயலக பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், டிசெ. 10
கரவெட்டி பிரதேச செயலகம் நடத்தும் பண்பாட்டுப் பெருவிழாவும் 'திருவுடையாள்7' பிரதேச மலர் வெளியீட்டு நிகழ்வும்கரணவாய்மூத்தவிநாயகர் ஆலயதிருமணமண்டபத்தில் நாளை செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.
கரவெட்டிப் பிரதேச செயலர் ஈ. தவரூபனின் தலைமையில் நடைபெறும்இந்தநிகழ்வுகளுக்குமுதன்மைவிருந்தினராக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட கலாசார அலுவலர் மார்க்கண்டு அருள்சந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். மதிப்புறு விருந்தினராக சித்திரக் கலைஞரும் ஓய்வு பெற்ற ஆசிரியருமான சிவகுரு சிவதாசன் கலந்து கொள்ளவுள்ளார். வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், கலாசார பேரவை மற்றும் கலாசார அதிகார சபை ஆகியவற்றின் அனுசரணையுடன் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ம-422)



*செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் முருகன் திருக்கல்யாணம் கடந்த 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ம- 26)*

## சரஸ்வதி முன்பள்ளியினது கலைவிழாவும் பரிசளிப்பும்

கைதடி மேற்கு சரஸ்வதி முன்பள்ளியின் கலைவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும்கைதடிமேற்குசரஸ்வதி கலைஅரங்கில்நாளைசெவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளன.
முகாமைத்துவக் குழுத் தலைவி திருமதி கெங்கேஸ்தயார்ணிதலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. முதன்மை விருந்தினராகதென்மராட்சிவலயக் கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப்பணிப்பாளர் அ. பிறேமதாஸ் கலந்து கொள்ளவுள்ளார்.
சிறப்பு விருந்தினர்களாக கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலைய தலைவர் ஞா. கிருபதீஷன், மக்கள் நலன் பேணும் நட்புறவுக்கழகதலைவர் ப. செல்லத்துரை, தென்மராட்சி வலயக் கல்வி முன்பள்ளிகளின் உதவிக் கல்விப் பணிப்பாளர்திருமதிச. அரியநாயகம், கவிராஜ்பயிற்சிப் பாடசாலையின் அதிபர் கு. டசீபன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.
மதிப்புறுவிருந்தினர்களாக கைதடி மேற்கு சரஸ்வதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கதலைவர்திருமதிசுதர்சன் வினோதினி, யாழ்ப்பாண மாவட்ட லயன்ஸ் கழக வலயத் தலைவி திருமதி'லயன்சீமாட்டி'ம. நிர்மலாதேவி, கைதடி கலைவாணிவித்தியாலயஅதிபர் இ. சிவகுமார், பழைய மாணவி திருமதி துபிலன் கல்சியா, சரஸ்வதிமுன்பள்ளியின்நலன் விரும்பிதிருமதிஅருந்தவபாலன்உதயகலா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-159)



### அனலைதீவு

## சதாசிவ ம.வித்தியின் ஒளிவிழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 10
அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தின் ஒளிவிழா நிகழ்வுகள் வித்தியாலய மண்டபத்தில் கடந்த 29ஆம் திகதி நடைபெற்றன.
அதிபர்நா. இராதாகிருஷ்ணனின்தலைமையில்நடைபெற்ற நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக அனலைதீவு மருத்துவமனைப்பொறுப்பதிகாரிமருத்துவர்அ. நிஷாந்தன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை பிரதேச சபை உறுப்பினர் ஈ. ஜீ. லக்ஸ்மன், அனலைதீவுவடலூர்அ. த. க. பாடசாலையின்அதிபர்க. விக்னேஸ்வரி ஆகியோர்கலந்துகொண்டனர். வித்தியாலயஒளிவிழாவை முன்னிட்டுமரக்கன்றுகளும்வித்தியாலயவளாகத்தில்நடப்பட்டன. (ம-9,159)




## வவுணதீவுச் சம்பவம்:

# வடக்கு - கிழக்கில் தொடரும் கவனவீர்ப்புப் போரட்டங்கள்

மன்னார்,டிசெ.10

**கிழக்கு மாகாணம்,வவுணதீப் பிரதேசத்தில் இரண்டு பொலிஸார் இனந் தெரியாத நபர்களால் சுட்டு கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து, பொதுமக்களால் கண்டன ஆர்ப்பாட்டங்கள் பல இடங்களில் மேற்க் கொள்ளப்பட்டுள்ளன.**

நேற்று முன்தினம் காலை பத்து மணியளவில், அடம்பன் நெடுங் கண்டல் சந்தியில், மன்னார் மாந் தைப் பிரதேசத்தில் உள்ள பொது மக்கள் கலந்துகொண்ட கண்டன ஆர்ப்பாட்டப் பேரணி அடம்பன் பிரதேச செயலகம் வரை சென் றது.

சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டில், கல்குடாத் தொகுதி அமைப்பாளர் டி.எம்.சந்திரபால தலைமையில், எதிர் காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் நடை பெறக்கூடாது என்பதை வலியு றுத்தியும் சித்தாண்டி முச்சந்திப் பிள்ளையார் ஆலய முன்றலில் நேற்று ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில், கட்சி உறுப்பி னர்கள், சிறுவர்கள், பெண்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.




வவுனியா பழைய பேருந்து நிலையத் தில் ஆர்பாட்டப் பேரணி ஒன்று நேற்று மதியம் 1 மணிக்கு முன்னெடுக்கப் பட்டது.

பழையபேருந்து நிலையத்துக்கு முன் பாக ஆரம்பமாகிய பேரணி, கடைவீதி வழியாக இலுப்பையடிப் பகுதிவரை சென்று நிறைவுற்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கருத்துத் தெரி வித்த போது: வவுணதீவுக் கொலை யுடன் தொடர்புபட்டவர்களை அரசு யார், என அடையாளம் கண்டு சட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். ஆயுதங்களுடன் நின்றவர்களுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக ஆயுதங்கள் வைத் திருப்பவர்களை பொலிஸார் அடையாளம் காணவேண்டும். அந்தச் சம்பவத்தால் மூவினமக்க ளிடையேயும் ஒருவித அமைதி யின்மை ஏற்பட்டுள்ளது.

இன்று ஒற்றுமையான முறை யில் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களிடையே குழப்பங்களை ஏற்படுத்தசிலர் முனைகின்றார்கள். முப்பதுவருட போர் விளைவுகளே எமக்குப் போதும். சமாதானத்தை சீர்குலைக்கும் நடவடிக்கைகளை யாரும் மேற்கொள்ளக்கூடாது - என்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக் கான மக்கள் கலந்துகொண்டதுடன் வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகை களையும் ஏந்தியிருந்தனர்.

வவுணதீவு, வலையிறவுப் பாலத் திற்கு அருகில் உள்ள பொலிஸ் சோத னைச் சாவடியில் இரவு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இருபொலிஸ் அலுவலர்கள் இனந்தெரியாத ஆயுத தாரிகளால் கடந்த 29 ஆம் திகதி சுட் டுக்கொல்லப்பட்டனர். (46,110,213)

## மகிழங்குளம் மயானத்தின் குழாய்க்கிணறு சீரமைப்பு

வவுனியா,டிசெ.10

கடந்த மூன்று வருடங்களாக பழுதடைந்த நிலையில் காணப்பட்ட வவுனியா பத்தினியார் மகிழங்குளம் மயா னத்திற்குரிய குழாய்க்கிணறு வவுனியா நகர உப பிதா வின் நேரடிக்கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு சீரமைக் கப்பட்டுள்ளது.

இந்தக் குழாய்க்கிணற்றைத் திருத்தி அமைத்துத்தருமாறு பத்தினியார் மகிழங்குளம் இந்து மயான சங்கத்தின் தலை வர், கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் ஆகியோர் ஒன் றிணைந்து வவுனியா நகர உப பிதா சு. குமாரசாமியின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

அவர்களின் கோரிக்கையை ஏற்று சென்றுபார்வையிட்டு அதற்குத் தேவையான ஒழுங்குகள் உடனடியாக மேற் கொள்ளப்பட்டு, சீரமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் பாவ னைக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.



## மாற்றுத்திறனாளிகள் மதிப்பளிப்பு

முல்லைத்தீவு,டிசெ.10

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புக்குட்பட்ட மூங்கிலாறில் உள்ள மாற்றுத்திறனாளிகள் மற்றும் தரம் ஒன்றில் கல்வி கற்கவுள்ள மாணவர்களுக்கான மதிப்பளிக்கும் நிகழ்வு கடந்த 7ஆம் திகதி மாலை நடைபெற்றது.

தமிழ் மக்கள் மேம்பாட்டு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் எஸ்.கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், 140 மாணவர்களும்,42 மாற்றுத்திறனாளிக ளும் உதவி வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளனர்.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் நிறுவுனர் கணேஸ் வேலாயுதம், சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பி னர் எஸ்.ஜோன்சன், வல்வெட்டித்துறை நகரசபை உறுப் பினர் சதீஸ், நீர்பாசனத் திணைக்கள அலுவலர் நிரோஜ் ஆகியோர் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கிவைத்த னர். (ரி 3)



## நானாட்டான் பிரதேச வேலைத்திட்டங்களை நேரில்ச் சென்று பார்வையிட்ட சாள்ஸ் எம்.பி.

மன்னார்,டிசெ. 10

நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநா தனின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் நானாட் டான் பிரதேசத்தில் நடைபெறும் வேலைத்திட் டங்களை நேற்றுமுன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார்.

அச்சங்குளம் மற்றும் பரிகாரிகண்டல் ஆகிய இரு விளையாட்டு மைதானங்கள் தலா ஒரு மில்லியன் ரூபா செலவில் சீரமைப்புச் செய் யப்படுவதுடன், மடுரோட் பேருந்துத் தரிப்பு நிலையம், கற்கிடந்தகுளம் நெல் உலர்த்தும் தளத்திற்கான வேலைத்திட்டங்களும் இடம் பெறுகின்றன.

அந்தந்தக் கிராமத்து மக்களுடன், எதிர்காலத் தில் செய்யப்பட வேண்டிய அபிவிருத்திகள் தொடர்பாகவும், நாடாளுமன்ற உறுப்பினரால் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. (213)

## இயக்கச்சி விவசாயிகளுக்கு வாழ்வாதார உதவி வழங்கல்

கிளிநொச்சி, டிசெ. 10

இயக்கச்சி பகுதியில் உள்ள வறிய விவசாயிகளுக்கான வாழ்வாதார உதவிகளை பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன் வழங்கி வைத்தார்.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை யின், மாகாண குறித்தொதுக்கப்பட்ட 50 ஆயிரம் ரூபா நிதியிலிருந்து, பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர் த.றமேசின் வேண்டு கோளுக்கிணங்க, இயக்கச்சியில் உள்ள வறிய விவசாயிகளின் நன்மை கருதி வாழ்வாதார உதவிகளாக முட்கம்பிகளும், மண்வெட் டிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் மழைகாலத்தில் விவசாயக் குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாகவும், எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் தொடர்பாகவும் இந்தக் குழுவினரால் ஆராயப்பட்டன.

விவசாய உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்விலும், களஆய்வுப் பய ணத்திலும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைவர் சு.சுரேன், உப தவிசாளர் மு.கஜன், உறுப்பினர் த.றமேஸ் மற்றும் பயனாளிக ளும், ஊர் மக்களும் கலந்துகொண்டனர். (6)



## உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுக்குக் கருத்தரங்கு

கிளிநொச்சி, டிசெ.10

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி சுகாதார மருத் துவ அதிகாரி பணியகத்திற் குட்பட்ட உணவு கையா ளும் நிலையங்களின் உரிமையாளர்களுக்கான கருத்தரங்கு கடந்த 7 ஆம் திகதி கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பணி யக மண்டபத்தில் நடை பெற்றது.

சுகாதார மருத்துவ அதி காரி மருத்துவர் சுவேந்தி ரன் தலைமையில் நடை பெற்ற கருத்தரங்கில்,கிளி நொச்சி சுகாதார சேவை கள்பணிப்பாளர் மருத்துவர் சி.குமரவேல் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்று கையில் தெரிவித்ததாவது: மாவட்டத்தில் உள்ள பெரு மளவு மக்கள், அரச அலு வலர்கள், விவசாயிகள், மாணவர்கள் எனப்பலரும் உணவகங்களில் உண வருந்துவதை வழமையா கக் கொண்டுள்ளனர். இவர்களுக்குச்சுவையான, தரமான, போசாக்கான உணவுகளை வழங்க வேண்டியது உணவு கையாளும் நிலையங்க ளைச் சேர்ந்தவர்களையே சாரும். தரமற்ற உணவு வகைகளை தயாரிப்பது விற்பனை செய்வது தண் டனைக்குரிய குற்றமாகும். மாவட்டத்தில் சிறந்த உணவுகளை பொதுமக்க ளுக்கு வழங்க வேண்டு மென்பது சுகாதாரப் பகுதி யினரின் எதிர்பார்ப்பாகும் - என்றார்.

கருத்தரங்கில் மாவட்ட போசனையியலாளர் லாவண்யா பணியக மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர் தா.சிவனேச ராஜா ஏனைய பிரிவு களின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் 125க்கும்மேற்பட்ட உணவு கையாளும் நிலையங்க ளைச் சேர்ந்தோரும் கருத்தரங்கில் பங்குபற்றி னர். (9)



## அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் கற்கைநெறிகளை எப்படி தேர்ந்தெடுப்பது

### இளையோருக்கான வழிகாட்டல் செயலமர்வு

வவுனியா, டிசெ.10

தொழில்முறைக் கல்வியை வழங்கும் அரச நிறுவனங்களில் கற்கை முறைகளை எவ்வாறு தேர்ந்தெடுத்து தொடர்வது என்பது தொடர்பில் இளையோருக்கு வழிகாட்டும் செயலமர்வு நடத்தப்பட்டுள்ளது.

வவுனியா திருநாவற்குளத்தின் இளையோருக்காக, இலக்குகளை மேம்படுத்தும் செயலமர்வு நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் செயலர் கெர்சோன் கரிஸ் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் செயலமர்வில் வேலைவாய்ப்பின்மை, பொருளாதார நிலமைகளால் எதிர்காலத்தில் இளைஞர்கள் எதிர்நோக்கவுள்ள சவால்களும், அவற்றை எதிர்கொள்ளும் விதம் தொடர்பாகவும், பேசப்பட்டதோடு, இளைஞர்கள் ஒழுக்கமுள்ளவர்களாக இருப்பதற்கும், தவறான பாதைக்கு செல்லாமல் சமூகத்தில் வாழ்வதற்குமான விளக்கவுரைகளும், அனுபவப் பகிர்வுகளும் இடம்பெற்றன.

நிகழ்வின் வளவாளராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகப் பிரதிப் பதிவாளர் ஜெயக்குமார் கலந்து கொண்டு,கருத்துரையை வழங்கினார். (110)

# எஞ்சின் ஒயில் கொள்கலனில் சமையல் எண்ணெய் விநியோகம்

## ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான்

வவுனியா, டிசெ.10

**வவுனியாஓமந்தைப்பகுதிவியாபாரநிலையங்களுக்கு உணவுப்பொருள்கள்விநியோகம்செய்யும்பாரவூர்தியில்பரிசோதனைசெய்யப்பட்டதில்எஞ்சின்ஒயில்கொள்கலனில் சமையல் எண்ணெய் களஞ்சியப்படுத்தப்பட்டு விநியோகம் செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.**

எஞ்சின் ஒயில் அடைக்கப்பயன்படுத்தப்பட்ட 210 லீற்றர்பரல்மற்றும்துருப்பிடித்த 800 லீற்றர் கொள்கலன்களில் சமையல் எண்ணெயைக் களஞ்சியப்படுத்திவிற்பனைக்குஎடுத்துவரப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.




சுகாதாரமுறைகளை கடைப்பிடிக்காமல் உணவுப்பொருள்களை களஞ்சியப் படுத்தி விற்பனை செய்தவர்களுக்கு ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த விடயம்தொடர்பாகத் தெரியவருவதாவது:

கடந்த செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி ஓமந்தைப் பொதுச்சுகாதாரப்பரிசோதகர் க.சிவரஞ்சன் தனது வழமையான பரிசோதனைநடவடிக்கையினை மேற்கொண்டபோதே இந்தகொள்கலன்கள்கைப் பற்றப்பட்டன.

பாரவூர்தியில் சுட்டுத்துண்டு ஒழுங்கு விதிகளுக்கு முரணாக பொதி செய்யப்பட்டஉணவுப்பொருள்களும் கண்டுபிடிக்கப் பட்டதை அடுத்து விநியோகஸ்தர்மற்றும்உற்பத்தியாளருக்கு எதிராக வவுனியா நீதிவான்நீதிமன்றத்தில் 3 தனித்தனி வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

கடந்த 7 ஆம் திகதி வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளபட்டன.

எதிராளிகள் குற்றத்தை ஏற்றுக்கொண்டதற்கிணங்க3 வழக்குகளுக்கும் ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட பொருள்களை அழிப்பதற்கும் நீதிமன்றால் உத்தர விடப்பட்டது. (110)

## சிறுவர் இல்லங்களின் அதிகாரிகளுக்கு கருத்தரங்கு

கிளிநொச்சி,டிசெ.10

கிளிநொச்சி மாவட்டத்தீல் இயங்கும் சிறுவர் இல்லங்களின் பொறுப்பதிகாரிகளுக்கான கருத்தரங்கு கடந்த7ஆம்திகதிகாலை9 மணிக்குக் கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகக்கேட்போர்கூடத்தில்நடைபெற்றது.

பணிமனைமேற்பார்வைப் பொதுச்சுகாதாரப்பரிசோதகர் தா.சிவனேசராஜா தலைமையில்நடைபெற்ற கருத்தரங்கில், சிறுவர் இல்லங்களை எதிர்காலத்தில் சிறப்பாக வழிநடாத்துவது தொடர்பாக மாவட்ட போசனையியலாளர் லாவண்யா சிறப்பு கருத்துக்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் அனைத்துப்பணியகப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களும் கலந்து கொண்டனர். (9)



# இரவில் ஒளி பெற்றன நானாட்டான் பகுதிகள்

மன்னார், டிசெ.10

வடமாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியின் மூலம் நானாட்டான் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட கிராமங்களுக்கு தெருவிளக்குகள் பொருத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை தமது பகுதிகளில் தெரு விளக்குகள் பொருத்தப் படவில்லை என மக்கள் குறை கூறி வந்தனர்.முன்னுரிமை அடிப்படையில், மடுப் பிரதேச செயலகத்தின் நிர்வாகத்தில் உள்ள ஆறு கிராமங்கள், நானாட்டான் பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்திருப்பதால் அந்த கிராமங்களுக்கும், பூமலர்ந்தான் கிராம அலுவலர் பிரிவின் சோதிநகர், இரண்டாம் கட்டை ஆகிய கிராமங்களுக்கும் தெருவிளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்தப்பணி நேற்று முன்தினத்துடன் நிறைவு பெற்ற தாகத் தவிசாளர் தி.பரஞ்சோதி தெரிவித்தார். விளக்குப் பொருத்தும் பணிகளை வட்டார உறுப்பினர் மரியநாயகம் ஞானசீலன் நேரில் சென்று பார்வையிட்டார் . (213)



# இலவசச் சீருடைத்துணிகள் வழங்கப்படாமையால் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ள மாணவர்கள்

கிளிநொச்சி, டிசெ.10

இந்த வருடத்திற்கான இலவசச் சீருடைத்துணிகள் வழங்கப்படாமையினால் புதிய சீருடைகளை தைத்துக்கொள்வதில் பெற்றோர்கள் பெருமளவு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதோடு, மாணவர்களும் பெரும் மன உழைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர்.




வடக்கு மாகாணத்தில் மொத்தம் ஆயிரத்து 72 பாடசாலைகளில் 2 இலட்சத்து 43 ஆயிரத்து 600 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இதில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 81 பாடசாலைகளில் சுமார் 32 ஆயிரத்து 755 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

அதேபோல் வவுனியா தெற்குக் கல்வி வலயத்தில் 115 பாடசாலைகள் காணப் படுகின்றன,

மன்னார் மாவட்டத்தில் 89 பாடசாலைகளில் 22ஆயிரத்து 801 மாணவர்களும் கல்விபயில்கின்றனர். இவர்களின் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் வறுமைக் கோட்டுக்குள் வாழ்பவர்கள். இந்த மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் பாடசாலை சீருடைக்கு அரசினால் வழங்கப்படும் இலவச சீருடைத்துணியை நம்பியே இருக்கின்றனர்.

முன்னாள் கூட்டரசின் தீர்மானத்துக்கு அமைய 45 இலட்சம் சீருடைத்துணி வவுச்சர் பத்திரங்கள் அச்சிடப்பட்டிருந்தன, தற்போது வவுச்சருக்குப் பதிலாக சீருடைத் துணி வழங்க தீர்மானம் எடுக்கப்பட்டு மாணவர்களும்,பெற்றோரும் நிர்க்கதிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இலவச கல்வியைப்பெறும் மாணவர்களின் கல்வியில் சம நிலையை உறுதி செய்வதற்காக சுமார் 45 இலட்சம் மாணவர்களுக்கு பாடசாலை சீருடைக்கான துணியை வழங்குவதற்கு 1993 ஆம் ஆண்டில் இருந்து இதுவரையில் 25 வருடகாலமாக அரசினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்காக சமீபகாலம் முதல் கடைப்பிடிக்கப்பட்ட 'திலினபத்' என்ற நடைமுறைக்கு அமைவாக உள்ளூர் ஆடை தயாரிப்பாளர்களிடம் பாடசாலைச் சீருடைத் துணியைப் பெற்றுக் கொண்டு, முன்னர் இருந்த வகையில் சீருடைக்கான துணியை வழங்குவதால் நன்மை உள்ளது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையின் கீழ் 1 மீற்றர் துணிக்காக 50 ரூபாயை சேமிக்க முடியும் என்பதாலும், உள்ளூர் தயாரிப்பாளர்களிடம் இருந்து துணியை பெற்றுக்கொள்வதன் மூலம், வெளிநாட்டு செலவினத்தை சேமிக்க முடியும் என்பதையும் கருத்தில்க் கொண்டு 2019 ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்களுக்குச் சீருடைக்கானதுணியை வழங்கும் பொருட்டு கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ச சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இந்த செயற்பாடு தற்போதுவரை நடைமுறைக்கு வராமையால், சீருடை வழங்குவது தெடர்பில் எந்த வித நடவடிக்கையும் எடுக்க முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த இழுபறிகளால் மாணவர்களும், பெற்றோரும் பெரும் சிரமத்தினை எதிர்கொண்டுள்ளனர்.

பெரும்பாலும் நாட்டின் அனைத்துப் பகுதியிலும் வறுமைக்கோட்டுக்குள் வாழும் குடும்பங்களின் பெற்றோர் பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளதோடு,மாணவர்களும் மன உழைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர்.


குறிப்பாக போர் இடம் பெற்ற வடக்கு பகுதியைச் சேர்ந்த மாணவர்கள். பெரும் சிரமத்தை அடைந்துள்ளனர். இந்த நிலையில் இலவச சீருடை வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சி நகரின் பல பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (6,214)

# கல் உடைக்க எதிர்ப்புத் தெரிவித்து வவுனியாவில் மக்கள் ஆர்ப்பாட்டம்

## வதிவிடம், தொழில், சுகாதாரம், கல்வி என்பன பாதிக்கப்படுகின்றன என்று குமுறுகின்றனர்

**வவுனியா, டிசெ. 10**

**வவுனியா பெரியகோமரசங்குளம் யேசுபுரம் பகுதியில் உள்ள சிறிய மலைக் குன்றில் கல்லுடைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தமலையின் அருகில் வசிக்கும் பொதுமக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அந்தச் செயற்பாட்டால் சுகாதாரப் பிரச்சினை, கல்விப் பாதிப்பு உள்ளிட்ட பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்றும் அவர்கள் கூறுகின்றனர்.**



கல் உடைப்பதற்கு எதிராக அவர்கள் கோசங்களை எழுப்பினர். அவர்கள் தெரிவித்ததாவது:

"இந்தப் பகுதியில் கல் உடைப்பதால் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது. அருகில் உள்ள பொதுமக்களின் வீடுகளில் வெடிப்புகள் உருவாகின்றன. கல்லுடைப்பதற்குப் பயன்படும் வெடிபொருள்களிலிருந்து பரவுகின்ற நச்சுத்தன்மை குழந்தைகள் சுவாசிக்கும்போது அவர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றது. நாங்களும் அதை உணர்கிறோம். அதனால் நோய்கள் ஏற்படுகின்றன. வெடிவைத்து கற்களை உடைக்கும்போது ஏற்படும் அதிர்வுகளால் அருகிலுள்ள குளத்தின் வான்பகுதியில் வெடிப்பு ஏற்பட்டு நீர் வெளியேறும் நிலை காணப்படுகின்றது. இதனால் விவசாய நடவடிக்கைகளும் பாதிக்கபட்டுள்ளன. சிதறி வருகின்ற கற்கள் அந்தப் பகுதிகளில் மேச்சலில் ஈடுபடும் கால்நடைகள் மீது வீழ்ந்து காயங்களை ஏற்படுத்துகின்றன. சில மாடுகள் இறந்துள்ளன. உடைக்கப்பட்ட கற்களை வெளியில் கொண்டுசெல்வதற்காகப் பயன்படுத்தப்படும் வீதி குண்டும், குழியுமாகக் காட்சியளிக்கிறது. அந்த வீதியில் உள்ள இரண்டு பாலங்களில் உடைவு ஏற்பட்டுள்ளது. இரவில் வெடிச் சத்தங்கள் கேட்பதால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைள் பாதிக்கப்படுகின்றன.

முன்னரும் குறித்த பகுதியில் கல் உடைக்கப்பட்டது. நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் அது இடைநிறுத்தப்பட்டிருந்தது. தற்போது மீண்டும் கல் உடைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன" என்று அவர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் குறித்த வட்டாரத்தின் பிரதேச சபை உறுப்பினரான வி.உத்தரியநாதன் கடந்த சபை அமர்வின்போது சபையின் கவனத்துக்கும் கொண்டு சென்றிருந்தார். தவிசாளரிடம் கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டிருந்தன.

அதற்கமைவாகக் கடந்த மாதம் 27ஆம் திகதி பிரதேசசபைத் தலைவர் கல் உடைக்கும் பணிகளை நிறுத்துமாறு அதன் உரிமையாளருக்குக் கடிதம் அனுப்பியிருந்தேன் என்று தவிசாளர் கூறியிருந்தார் என்றும் எனினும் பணிகள் இடைநிறுத்தப்படவில்லை என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறினர்.

இந்த விடயம் தொடர்பாகத் தெற்குப் பிரதேச சபைத் தலைவர் து.நடராய சிங்கத்திடம் கேட்டபோது, கல் உடைக்கும் பணிகளை நிறுத்துமாறு கடிதம் அனுப்பியிருந்தேன் - என்று கூறினார்.

கல் உடைக்கும் நிறுவனத்தின் உரிமையாளருடன் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

அனைத்துத் திணைக்களங்களிலிருந்தும் சட்டரீதியான உரிய அனுமதிகளைப் பெற்ற பின்னரே கல் உடைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. ஒரு சிலர் சுயலாபத்துக்காகத் திட்டமிட்டு விசமத்தனமான பரப்புரைகளைச் செய்கின்றனர். பிரதேச சபை அனுப்பியதாகக் கூறப்படும் கடிதம் எதுவும் தனக்கு இன்னும் கிடைக்கவில்லை - என்றார்.

"அவர் அவ்வாறு கூற முடியாது. அந்த இடத்துக்கு நாளை (இன்று) சென்று அதனை நிறுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளேன்" என்று தவிசாளர் தெரிவித்தார். (4,110)

# மைத்திரி எரிமலையில் நடக்கிறார் எப்போது வெடிக்குமோ தெரியாது

*புத்திஜீவிகள் எச்சரிக்கின்றனர்*

*அரச ஊழியர்களின் சம்பளமும் ஊசலாடுகின்றது*

கொழும்பு. டிசெ. 10

இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் குழப்பங்கள் எல்லைமீறிச் செல்கின்றன. அரசதலைவர் பொறுப்பற்ற வகையில் எரிமலை மீது நடந்து செல்கிறார். விரைவில் அது வெடித்து நாடு முழுவதும் பெரும் பாதிப்பு ஏற்படவுள்ளது. அரச ஊழியர்களின் சம்பளமும் ஊசலாடுகின்றது என்று புத்திஜீவிகள் எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளதாவது:

மேன்முறையீட்டு நீதிமன்றால் மகிந்தவின் தலைமை அமைச்சர் பதவி மற்றும் அமைச்சரவை நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள்ளன. இதனால் அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத்திட்டத்தைச் சமர்ப்பித்து நிறைவேற்றுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அரசமைப்பின் 152ஆம் சரத்துக்கு அமைய அரச செலவுகளைச் செய்வதற்கான யோசனை அமைச்சரவை யில் சமர்ப்பிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் அனுமதி பெறப்பட வேண்டும்.

அமைச்சரவை இல்லை என்றாலும் நாட்டின் செயற்பாடுகள் உரிய முறையில் இடம்பெறுவதாக அரசதலைவர் கூறிவருகின்றார். எனினும் அவர் எரிமலை மீது நடந்துகொண்டிருக்கின்றார் என்பதை அவருக்கு நெருக்கமான ஆலோசகர்கள் அறிவுறுத்தவில்லை என்பதை தற்போதைய நடவடிக்கைகள் புலப்படுத்துகின்றன.

ஜனவரி மாதம் இந்த எரிமலை வெடிக்கும் எனவும், வெடித்தால் அது அரசதலைவருக்கு மாத்திரமின்றி முழு இலங்கைக்குமே பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் கூறியுள்ளனர்.

சிலர், கூட்டுநிதியை அரசதலைவரால் பயன்படுத்துவதற்கு வாய்ப்புகள் உள்ளது என்று கூறுகின்றனர். ஆனால் அரசமைப்புக்கு அமைய அது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அரசதலைவருக்குதான் நினைத்தது போல கூட்டுநிதியில் இருந்து பணம் செலவிடும் அதிகாரம் இல்லை. அவருக்குச் சில செலவுகளை ஏற்பதற்கு 2 சந்தர்ப்பங்களில் மாத்திரமே முடியும். அது நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட சந்தர்ப்பத்திலும், இதற்கு மேலதிகமான 151ஆம் சரத்துக்கு அமையவுமே. எனினும் அந்த நடவடிக்கை நிதி அமைச்சரால் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் அவசர நிலைமை நாட்டில் இல்லை.

இதுவரை அமைச்சரவையின் நடவடிக்கைகள் நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய டிசெம்பர் மாதம் இறுதிக்கு முன்னர் அரசதலைவர் அமைச்சரவையை நியமிக்க வேண்டியது கட்டாயம்.

அப்படிச் செய்யவில்லை என்றால் அரச ஊழியர்களின் சம்பளத்துக்கு அரசின் அனைத்துச் செலவுகளுக்கும் நிதி ஒதுக்கும் நடவடிக்கை சிக்கலாகும். அரசதலைவரின் உணவுக்கேனும் செலவிடுவதற்கு அரசில் பணம் பெறமுடியாமல் போய்விடும்.

இந்த நடவடிக்கை நீடித்தால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முழு நாட்டுக்குமே பெரும் ஆபத்து ஏற்படப்போகின்றது என்று அந்த ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. (4)

# பெண்கள் மீதான திணிப்பை வெளிப்படுத்தும் கண்காட்சி

கிளிநொச்சி, டிசெ.10

பெண்களுக்கு எதிராக இடம்பெறும் சமூக வன்முறைகளை வெளிப்படுத்தும் வகையிலும் கலாசாரத்தின் பெயரில் பெண்கள் மீது திணிக்கப்படும் வன்முறைகள் பற்றியும் வெளிப்படுத்தும் ஓவியக் கண்காட்சி கிளிநொச்சியில் இடம்பெறுகிறது. வன்முறையற்ற வாழ்வைக் கொண்டாடுவோம் எனும் தொனிப்பொருளில் கண்காட்சி ஒழுங்கமைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. இது இன்றும் நடைபெறுகிறது.

வன்முறையற்ற வாழ்வுக்கான ஓவியர்கள் குழுவினரான கமலா வாசுகி, ப.நிரஞ்சன், மு.தா.பா.ருக்சானா, கோ. மதீஸ்குமார், வெ.ஜதீஸ்குமார், த.வினோஜா, க.துஸா, அ.கீதாநந்தி, தி.திசாந்தினி, பா.மேரிநிருபா, ப. ராஜதிலகன், சு.நிர்மவாசன் ஆகிய ஓவியர்களின் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (214)



# எலிக்காய்ச்சல் தொற்று வவுனியாவில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.10

வவுனியா மாவட்டத்தில் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை முன்னைய மாதங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது. அதன்படி கடந்த மாதம் 13பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய்ப் பிரிவு தெரிவித்தது.

தொற்றுநோய்ப் பிரிவு வாராந்தம் வெளியிடும் அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எலிகள் அல்லது பாதிக்கப்பட்ட விலங்குகளின் சிறுநீர் மூலமாகவே லேப்டோஸ்பைரோசிஸ் எனப்படும் எலிக்காய்ச்சல் பரவுகிறது என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இது தொற்று நோய். ஆரோக்கியமான மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கும் இது பரவும். இலங்கையில் ஏனைய மாவட்டங்களில் இந்த நோயின் தாக்கம் பரவலாகக் காணப்பட்டாலும் வடக்கு மாகாணத்தில் சற்றுக் குறைவாகவே காணப்படுகிறது. எனினும் 2017ஆம் ஆண்டு எலிக்காய்ச்சலால் வடக்கு மாகாணத்தில் 108 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் 38பேரும், வவுனியாவில் 33பேரும், முல்லைத்தீவில் 28 பேரும், மன்னாரில் 3 பேரும், கிளிநொச்சியில் 6 பேரும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இலங்கையில் கடந்த ஆண்டு இரத்தினபுரி மாவட்டத்திலேயே அதிக நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அங்கு 618 பேர் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

நடப்பாண்டு நிறைவடையும் நிலையில் 82 பேர் வடக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டத்தில் இந்தத் தொற்று அதிகமாகக் காணப்படுகிறது. அங்கு 48 பேர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஜனவரி மாதம் 6 பேரும், பெப்ரவரியில் 4பேரும், மார்ச்சில் 3 பேரும், ஏப்ரலில் 4 பேரும், மேயில் 2 பேரும், ஜூன், ஜூலையில் தலா 5 பேரும், ஓகஸ்ட்டில் 2 பேரும் பாதிக்கப்பட்டிருந்தனர். செப்ரெம்பர் மாதம் எவரும் பாதிக்கப்படவில்லை. ஒக்ரோபர் மாதம் நால்வர் பாதிப்புக்கு உள்ளாகினர். அதுவே நவம்பர் மாதத்தில் 13பேராக அதிகரித்துள்ளது என்று தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு சுட்டிக்காட்டுகிறது.

இந்த எண்ணிக்கை கடந்த வருடத்தைக் காட்டிலும் அதிகரித்துள்ளது. எலிக்காய்ச்சலால் இந்த ஆண்டு நவம்பர் மாதம் வரையில் யாழ்ப்பாணத்தில் 4 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒருவர் அண்மையில் உயிரிழந்துள்ளார். கிளிநொச்சியில் 7 பேரும், முல்லைத்தீவில் 11 பேரும், மன்னாரில் ஒருவரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆண்டு இதுவரை எலிக்காய்ச்சலால் இலங்கை முழுவதும் 4ஆயிரத்து 476 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நடப்பு ஆண்டிலும் இரத்தினபுரி மாவட்டத்திலேயே அதிக நோயாளர்கள் எலிக்காய்ச்சல் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். களுத்துறையிலும் இதன் தாக்கம் அதிகரித்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (4,21)

# தேசிய உணவுப் பாதுகாப்பு வாரம் நாடு முழுவதிலும் இன்று ஆரம்பம்

*திடீர் சோதனைகள் இடம்பெறும் என்று அறிவிப்பு*

தென்மராட்சி, டிசெ.10

தேசிய உணவுப் பாதுகாப்பு வாரம் நாடு முழுவதும் இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கிறது.

பொதுமக்கள் தரமான சுகாதாரமான உணவுப் பொருள்களை வாங்குவதற்காக உணவு கையாளும் நிலையங்களை நடத்துவோர், நடமாடும் விற்பனை நிலையங்களை நடத்துவோர் உயர்ந்த மட்ட சுகாதார நடவடிக்கைகளைப் பேணவேண்டும். தவறின் சகிப்புத் தன்மையின்றி கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

போசாக்கு மற்றும் சுகாதாரமான உணவுகளைப் பொதுமக்களுக்கு வழங்கவேண்டும் என்ற நோக்கில் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு சுகாதார அமைச்சின் தேசிய உணவுக் கட்டுப்பாட்டு அலகினர் இதனை அறிவித்துள்ளனர்.

இந்த வாரத்தில் உணவுகள் தொடர்பாக மக்களின் நலனில் அக்கறை செலுத்தி உணவுப் பொருள்களை விற்பனை செய்ய வேண்டும். இந்த வாரத்தில் உணவு கையாளும் நிலையங்கள், நடமாடும் உணவுகளை விற்பனை செய்வோர், உணவு வகைகள் விற்பனை செய்வதற்கு உற்பத்தி நிலையம் அமைந்துள்ள பகுதியில் உள்ள உள்ளூராட்சி சபையில் வியாபார உரிமம் பெற்றிருக்க வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை தொடக்கம் தேசிய அளவில் உணவு பாதுகாப்பு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளதால் வடக்கு மாகாணத்தில் சகல மாவட்டங்களிலும் ஒவ்வொரு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலும் திடீர் சோதனைகள் நடத்தப்படலாம். குறைபாடுகள் இருப்பது கண்டறியப்படின் சட்ட நடவடிக்கையே அன்றி மாற்றுவழி இராது என்று எச்சரிக்கப்படுகின்றனர்.

பொதுமக்களின் நலன் கருதியதாகவே இவை அமைவதால் குறைபாடுகளைக் கண்டு எச்சரித்துச் செல்வதோ விட்டுக்கொடுப்புடன் நடக்கவோ எதுவுமே இராது. கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரத் தரப்பினர் கூறுகின்றனர்.

தென்மராட்சி பிரதேச உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் நடமாடும் உணவு விற்பனை வாகனங்களும் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளால் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன. உரிய சுகாதார முறைகளைக் கடைப்பிடித்து செயற்படுமாறும் உரிய வியாபார உரிமம் இன்றி உணவுப் பொருள்கள் விற்பனை செய்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவித்துள்ளனர். (4,9)

# 6 ஆயிரம் கிலோக்கிராம் களை நாசினி கொழும்புக்குக் கடத்தும்போது சிக்கியது

*வாகனத்துடன் இருவர் கைது*



வவுனியா, டிசெ. 10

தடைசெய்யப்பட்ட "கிளைபோசேட்" என்ற களைநாசினி மருந்துப் பொதிகள் பல கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றின் மொத்த நிறை 6 ஆயிரம் கிலாகிராம். அவற்றை வைத்திருந்தனர் என்று குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி நேற்றுமுன்தினம் பயணித்த சொகுசு வாகனத்தைச் செட்டிகுளம் நகர்ப் பகுதியில் வழிமறித்த பொலிஸார் சோதனை நடத்தினர். யூரியா உரம் பொதியிட்டு விற்பனைக்கு விடப்படும் பையில் குறித்த களைநாசினிப் பொதிகள் இருந்தமை கண்டறியப்பட்டன. அவை ஒவ்வொன்றும் 600 கிராம் நிறையுடையவை. அவற்றைக் கடத்திக் கொண்டு சென்றனர் என்று அந்த வாகனத்தில் பயணித்த இருவரும் கைது செய்யப்பட்டனர். வாகனத்தைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் நீர்கொழும்புப் பகுதியைச் சேர்ந்தவர்கள். பொதிகள் ஒவ்வொன்றும் 600 கிராம் நிறையுடையவை. மொத்த நிறை 6 ஆயிரம் கிலோகிராம். அவற்றின் பெறுமதி சுமார் 39 இலட்சம் ரூபா என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மருந்துப் பொதிகள் இந்தியாவிலிருந்து கடல்வழியாக இங்கு கடத்திவரப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கிறோம். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண மூத்த பொலிஸ்மா அதிபர் ரொசான் பெர்ணாண்டோவின் வழிகாட்டலில், வன்னி மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் அனுர அபயவிக்கிரமவின் மேற்பார்வையில் பொலிஸ் அத்தியட்சகர் தென்னக்கோனின் நெறிப்படுத்தலில் செட்டிகுளம் பொலிஸ்நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி காஞ்சன விமலவீரவின் தலைமையில் நடவடிக்கை இடம்பெற்றது என்று மேலும் தெரிவித்தனர். (4,110)

# பனை உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்த முடியவில்லை!

*மன்னார் உற்பத்தியாளர்கள் கவலை*
*அனைவரதும் ஆதரவை எதிர்பார்க்கின்றனர்*

மன்னார், டிசெ. 10

**மன்னார் மாவட்டத்தில் பனை உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அவை அழிந்துபோகும் நிலையில் உள்ளன. அதற்கு எவரும் இடமளித்துவிடக்கூடாது. ஒவ்வொருவரும் தம்மாலான உதவிகளைச் செய்யவேண்டும் என்று பனை கைத்தொழில் உற்பத்தி தொடர்பான ஆசிரியர் சொலமோன் சுபாஜினி கோரிக்கை விடுக்கிறார்.**





மன்னார் மாவட்டத்தில் அழிந்து வரும் பழமையான கைத்தொழில்கள் வரிசையில் பனை உற்பத்தியும் ஒன்றாகிவிட்டது. மன்னார் நறுவிலிக்குளம் கிராமத்தில் வசிக்கும் இவர், 'பல சிரமங்களுக்கும், சவால்களுக்கும் மத்தியில் பத்து வருடங்களுக்கு மேலாகப் பனை உற்பத்திப் பொருள்களைச் சிறு கைத்தொழிலாகச் செய்துவருகிறேன். தமிழரின் பாரம்பரியத் தொழில் அழிந்து விடக்கூடாது என்பதற்காக பனை உற்பத்திப் பொருள்களைச் செய்வதில் ஆர்வமுள்ள பெண்களுக்கு தொழில் நுணுக்கங்களைக் கற்றுக்கொடுக்கும் ஆசிரியையாகவும் செயற்பட்டு வருகிறேன்' என்றும் அவர் கூறுகிறார்.

மன்னார் மாவட்டத்தில் ஆரம்பத்தில் அதிக இடங்களில் பனை உற்பத்திப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. தற்போது ஐந்து இடங்களில் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டு வருகிறன.

பனை உற்பத்திப் பொருள்கள் மூலமாக மாதாந்தம் 10ஆயிரம் ரூபாவுக்கும் மேலதிகமாக வருமானத்தைப் பெற்றுக் கொள்ளமுடிகிறது. குடும்பப் பெண்களும் வயதானவர்களும் இதில் ஈடுபட்டு

வருமானத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

கணவன் இல்லாத பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு இந்தத் தொழில் பேருதவியாக உள்ளது. இந்தத் தொழிலைச் செய்ய அதிகமான பெண்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். எவ்வளவு பொருள்களையும் உற்பத்தி செய்யும் திறன் எம்மிடம் உள்ளது. ஆனால் அவற்றைச் சந்தைப்படுத்தி வியாபாராம் செய்ய முடிவதில்லை.

இவை உள்ளூர் உற்பத்திப் பொருள்கள். மாவட்டத்துக்குள் வியாபாரம் செய்து லாபம் சம்பாதிக்க முடியாது. கொழும்பு உட்பட வெளிமாவட்டங்களுக்கே அவற்றை அனுப்ப வேண்டும். கிராமங்களில் இருந்து வாகனப் போக்குவரத்துகள் இல்லை. பயணிகள் பேருந்துகளில் பொருள்களை ஏற்றமாட்டார்கள். வாடகைக்கு வாகனங்களைப் பிடித்துக்கொண்டு செல்லும் அளவுக்கு இவற்றால் அதிகம் இலாபம் கிடைப்பதில்லை.

அரச, தனியார் நிறுவனங்கள் தமது இடங்களுக்கு வந்து பொருள்களைக் கொள்வனவு செய்வார்களானால் விற்பனை தாராளமாக இடம்பெறும். அவற்றைச் செய்யும் குடும்பங்களும் முன்னேற்றமடைய வாய்ப்புள்ளது என்பது இந்த உற்பத்தியில் ஈடுபடும் பெண்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

"நான் உற்பத்தி செய்யும் பொருள்களையும் எமது குழுவில் உள்ள பெண்கள் செய்துதரும் பொருள்களையும் வைத்துப் பாதுகாத்துக் கொள்ள இடமில்லாமல் வீட்டுக்குள்ளேயே அவற்றை வைத்திருந்து வியாபாரத்துக்கு அனுப்பும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன்" என்று சுபாஜினி கூறுகிறார்.

சமூகத்தில் உள்ள அரச, தனியார் துறையினர் எமக்கு ஒத்துழைப்பையும் உற்சாகத்தையும் வழங்கும் பட்சத்தில் நவீன முறையில் வரும் மேற்கத்தைய வீட்டு பாவனைப் பொருள்களுக்கு நிகராக கைப்பை, பாடசாலைப் புத்தகப் பைகள், பூக்கூடைகள், சாப்பாட்டுத் தட்டுகள் உள்ளிட்ட இன்னும் ஏராளமான புதுவிதமான பனம் பொருள்களை உற்பத்தி செய்ய முடியும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

வெளிநாட்டிலிருந்து இறக்குதியாகும் பொருள்கள் உடல் உபாதைகளை வெகுவிரைவில் தரக் கூடியவை. பனை மூலமாகச் செய்யப்படும் பொருள்கள் அனைத்துமே நோயிலிருந்து உடல் நலத்தைத் தரக்கூடியவை. எனவே மனித சமூதாயத்துக்கு அதிக நலனைத் தரக்கூடியதும் பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தக் கூடியதுமாகவுள்ள பாரம்பரிய தொழில் அழிந்துவிடாமல் பாதுகாக்க அனைவரும் முன்வர வேண்டும் என்று பனை உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(4,213)

# சிறையிலுள்ளவருக்குக் ஹெரோய்ன் கொண்டு சென்றாரென தந்தை கைது

வவுனியா, டிசெ. 10

வுனியா சிறைச்சாலையில் உள்ளவரைப் பார்க்கச் சென்ற தந்தை ஒருவர் ஹெரோய்ன் போதைப் பொருள் வைத்திருந்தார் என்று சிறைச்சாலை அலுவலர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அவரிடமிருந்து 40 மில்லிக்கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டதாகக்கூறி அவர் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறைச்சாலையில் விளக்க மறியலில் உள்ளவரைப் பார்க்கச் சென்றிருந்த தந்தை ஒருவரிடமிருந்தே போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது என்று சிறை ச்சாலைத் தரப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அவர் சிறையிலுள்ள மகனுக்குத் தேவையான பொருள்களை எடுத்துக்கொண்டு சிறைச்சாலை க்கு நேற்றுமுன்தினம் பிற்பகல் சென்றுள்ளார்.

அவற்றைச் சிறைச்சாலை அலுவலர்கள் சோதனையிட்டனர். சவர்க்காரத்தில் நுணுக்கமாக மறைத்துவைக்கப்பட்ட நிலையில் ஹெரோய்ன் போதைப்பொருள் இருந்ததைச் சிறை அலுவலர்கள் அவதானித்தனர் என்றும் அதன்படி அவர் கைது செய்யப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த 70 வயதானவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் விசாரணையின் பின்னர் நீதிவானிடம் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(4,110)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரச தலைவர் முறையை ஒழிப்பதே நிரந்தரத் தீர்வு

மக்களாட்சியைப்பாதுகாப்பதற்காகத்தான்போராட்டம் நடத்துகின்றோம் என்கிறது ஐக்கிய தேசியக் கட்சி. அதனுடன் சேர்ந்து கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. என்பனவும் இதனையே சொல்கின்றன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் அரசமைப்பை மீறிச் செயற்பட்டதன் மூலம் மக்களாட்சி (ஜனநாயகம்) தத்துவம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது, அதனை மீட்டெடுத்து மக்களாட்சி மாண்பை மீண்டும் நிலைநாட்டுவதே எங்கள் நோக்கம் என்று இந்தக் கட்சிகள் கங்கணம் கட்டி நிற்கையில், அந்த மக்களாட்சியை, அதன் மாண்பை கேலிப் பொருளாக்கியே தீருவேன் என்று மறுபுறத்தில் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.


முதலில் நாடாளுமன்றத்தின் 225 உறுப்பினர்கள் வந்து கேட்டாலும் ரணில் விக்கிரமசிங்கவைத் தலைமை அமைச்சராக நியமிக்கமாட்டேன் என்று தெரிவித்தார். இதன் மூலம் மக்கள், அவர்களின் பிரதிநிதிகள், அதனூடான ஆட்சி என்கிற மக்களாட்சித் தத்துவத்தைத் தூக்கி எறிந்தார். நாடாளுமன்றத்தின் 225 உறுப்பினர்கள் என்போர் மக்களின் நேரடிப் பிரதிநிதிகள். தேர்தல் மூலம் மக்கள் தமது வாக்குகளைச் செலுத்தி அவர்களைத் தேர்ந்தெடுத்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். தமது சார்பில் முடிவுகளை எடுத்து சிறந்த தலைமைத்துவத்தை வழங்கி நாட்டையும் மக்களையும் வழிநடத்தும் முகமாகவே மக்களால் இந்த 225 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆக, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறுவதென்பது நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் கூறுவதற்கு ஒப்பானது. அதற்குப் பெயர்தான் மக்களாட்சி எனப்படுகின்றது. இந்தத் தத்துவத்தின் கீழ் ஒட்டுமொத்தமானவர்களும் அல்ல பெரும்பான்மையானவர்கள் கூறினாலேயே அதனை ஏற்றுச் செயற்படுத்தவேண்டும் என்பது நியதி. ஆனால், ஒட்டுமொத்த நாட்டு மக்களும் கூடிவந்து சொன்னாலும் அதனை ஏற்கவே மாட்டேன் என்று அரச தலைவர் கூறுவது மக்களாட்சியைக் கேவலப்படுத்துவதன்றி வேறென்ன?

அத்தோடு நின்றிருந்தால் பரவாயில்லை, அதற்கும் ஒரு படி மேலே சென்று, சிறந்த பௌத்தரான மைத்திரிபால சிறிசேன, கடவுளே வந்து ரணில் விக்கிரமசிங்கவைத் தலைமை அமைச்சராக நியமிக்கக் கேட்டாலும் நான் நியமிக்க மாட்டேன் என்று கூறியிருக்கிறார். இதன் மூலம் மக்களாட்சியை மட்டுமல் மகேசன் ஆட்சியையும் கேலிக்குள்ளாக்குகிறார் அரச தலைவர்.

இதற்கான துணிபும் அதிகாரமும் எப்படி வந்தது ? எங்கிருந்து வந்தது ? அதுவும் மக்களின் வாக்குப் பலத்தில் அரச தலைவரான ஒருவருக்கு இப்படிப்பட்ட தான்தோன்றித் தனம் எப்படி வந்தது ?

எல்லாம் நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையினால் வந்தது. வெறும் மைத்திரிபால சிறிசேனவை நிறைவேற்றதிகாரம் கொண்ட அரசதலைவராக மாற்றியதனால் வந்த வினை. ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுவதைத் தவிர மற்றெல்லாவற்றையும் செய்வதற்கான அதிகாரத்தைக் கொண்ட பதவி என்று முன்னாள் அரசதல்லைவர் ஜே.ஆர். ஜெவர்த்தன வர்ணித்த அரச தலைவர் பதவி மூலம் கிடைத்த அதிகாரங்களே மைத்திரிபால சிறிசேன இவ்வாறு நடந்து கொள்வதற்கான முக்கிய காரணம்.

எனவே இந்தப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வும் உண்மையான மக்களாட்சிக்கான போராட்டமும் நிறைவேற்று அதிகார முறையினை ஒழிப்பதன் மூலமே கிட்டமுடியும். அதனைச் செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சிஉள்ளிட்ட அனைத்துக்கட்சிகளும்முன்வரவேண்டியது அவசியம். ஜே.வி.பியின் பொதுச்செயலர்ரில்வின் சில்வா தெரிவித்திருக்கிறார். அதற்கான பிரேரணையையும் அந்தக் கட்சி ஏற்கனவே நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளது. அதனை நிறைவேற்றாது இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்த முடியாது.



# சலன மனதின் சொந்தக்காரன்!

செ.உமாசுதன்

'வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடமடி' என்பதைப் போன்று நமக்கு முன்னர் வாழ்ந்தவர்களின் வரலாறே நமக்குரிய வாழ்வியல் பாடமாகும். அந்தவகையிலே தமிழின விடுதலை குறித்துச் சிந்தித்த தமிழ் இளைஞர்களின் 'உரிமை மீட்பு' என்ற ஒன்றுகூடலின் பாத்திரமும், அது தந்துவிட்டு போயுள்ள ஆத்மார்த்தமான பலமும் அற்புதமான வரலாற்றுப் பாடம். விடுதலை என்ற அழிவற்ற அறிவுரை. அடக்கு முறைக்கு எதிராகப் போராடவும், உரித்துக்களைக் கேட்டு வாதாடவும் பணிக்கும் இராஜதந்திரம். யார்? எப்போது? எங்கு? எந்தக் காலத்தில்? எப்படித் துரோகம் செய்வார்கள் என்பது பற்றி காலக் கணக்கொடு பட்டவர்த்தனமாக இடித்துரைக்கும் ஆன்மங்களாக சிந்தனைகளில் ஒளிர்ந்து இவர்கள் தமிழ் மக்களை வழிநடத்துகின்றனர். இங்கு துரோகம் என்பதை, 'உள்ளிருந்தே ஊட்டியறுத்தல், குள்ளநரித்தனம், சிரித்துக் கொண்டே கழுத்தையறுத்தல், முதுகில் குத்துதல், நடித்தல்' என்பதாக அவ்வப்போது அடையாளப்படுத்தித் தமிழ் மக்களை விழிப்பூட்டுகின்றனர்.

**வஞ்சனையின் அடையாளம்!**

அந்த வரிசையில் மேற்குறித்த அத்தனை அடையாளத்துவங்களையும் உடைய 'பெரியவர்' ஒருவரும் வடமாகாண அரசியல் சூழமைவில் இருந்து இனங்கண்டுகொள்ளப்பட்டுள்ளார். அவர் வேறு யாருமல்லர் வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தான்.

பொதுவெளியில் ஆளுமையாக, நீதியரசராக, இவற்றில் இருந்தும் வேறுபட்டு வடக்கின் அரசியல் பிரமுகராக மதிப்புணர்வோடு நோக்கப்பட்ட அல்லது நோக்கப்படுகின்ற பெரியவரை இப்படிக் கூறுவது தகுமோ என நீங்கள் எண்ணுவது புரிகிறது! ஆனாலும் இதற்கான பதில் உண்மையை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதாகவே அமைந்து விடுகிறது. ஏனெனில் மனித வாழ்க்கையில் பல்வேறு நிகழ்வுகள் நிகழ்கின்றன. அந்த நிகழ்வுகள் இயல்பாக இருந்தால் நலம். ஆனால் அதுவே இயல்புக்கு மாறாக, நம்பியவர்களால் இடையில் மாற்றப்பட்டு இயற்கைக்கு முரணாக நடப்பின் அது குறித்து நாம் சிந்திக்க வேண்டுமல்லவா?

அதுவிதமே கால ஓட்டத்தில் வஞ்சனையின் அடையாளங்களும், நடைமுறைகளும் மாறுகின்றன. அந்தச் செயல்களுக்குக் காரணமானவர்கள் தங்களை நிறம் மாற்றிக் கொள்கின்றனர். இதையே வடக்கு மாகாண சபையின் கடந்து போன ஆட்சிக் காலம் தமிழ் மக்களுக்கு இடித்துரைத்திருக்கின்றது. ஆட்சியில் அமர்ந்த மூத்தவர்களான பெரியவர்கள் பல பாடங்களைக் கற்றுத் தந்துள்ளனர். குறிப்பாக, 'நம்பிக்கையின்றி வாழ்தல் கூடாது. பிறரை நம்பி நாம் மோசம் போய்விடக் கூடாது. ஒவ்வொருவரும் நம்பிக்கையால் வாழ்ந்து நம்பிக்கையாலேயே அழிகின்றார்கள்' என்பது தான் அந்த வேடங்கள் தந்த பாடம் எனலாம். தனித்துக் கூறுவதாயின் அந்த 'வேடதாரி' தமிழ் மக்களுக்குத் தந்த ஞான உபதேசமாகக் கொள்ளலாம்.

**பயனற்ற தலைமைத்துவம்!**

நான் நினைக்கிறேன் 2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தின் நடுப்பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குருநகர் பகுதியில் ஏற்பாடு செய்த வடமாகாண சபைக்கான இறுதித் தேர்தல் பரப்புரைக் கூட்டமாக அது அமைந்திருந்தது. விழா மேடையில் அப்போதைய வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளரும், இப்போதைய முன்னாள் முதலமைச்சருமான விக்னேஸ்வரன் நடுநாயகமாக அமர்ந்திருந்தார். வடக்கு மாகாண் சபையின் ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்து தமிழ் மக்களுக்குத் தீர்வைப் பெற்றுத் தரப்போகின்ற மனிதப் பிறவி இவர் தானோ என எண்ணிக் களித்து மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். கரகோசங்களைப் பலமாக எழுப்பினர். ஆனாலும் அந்த ஆரவாரங்களுக்கும், மகிழ்ச்சியின் செந்தளிப்பான தருணங்களுக்கும் கிடைத்த பலாபலன் என்பது பூச்சியமாகவே அமைந்துள்ளது.

"அன்புள்ள தமிழ்ச் சகோதர சகோதரிகளே! இத்தனை உயிர்ச் சேதம், பொருள் சேதம், மன வேதனை, உடல் ஊனம், வறுமை போன்றவற்றை நாம் அனுபவித்து இருக்கிறோம். இவ்வாறான துன்ப துயரங்களுக்கு மத்தியில் இவர்கள் கூறும் கதைகள் எமது பிரச்சினைக்குத் தீர்வாகி விடுமா? அரசு எம்மைப் பற்றி என்ன நினைத்துக்கொண்டிருக்கிறது? எந்த நாளும் தமிழ் மக்களை கிள்ளுக் கீரையாகப் பாவிக்க முடியும் என்றே எண்ணுகிறது போலும்!" என்று இடித்துரைத்து அந்தப் பரப்புரைக் கூட்டத்தில் முதலமைச்சர் வேட்பாளராக விக்னேஸ்வரன் குறிப்பிட்ட விடயங்கள் ஐந்தாண்டுகள் கடந்தும் மனதை உறுத்திக்கொண்டே இருக்கிறது. ஆளும் தரப்பை அச்சறுக்கைப்படுத்தி அவர் சுட்டிக்காட்டிய மேற்குறித்த விடயத்தை தமிழ் குடிமகனாக அந்தப் பெரியவரையே விழித்துத் திருப்பிக் கேட்கத் தோன்றுகிறது. அதில் தவறேதும் இல்லை!

**திட்டமிட்ட திறமான ஆட்சியமைப்பை தராத நிர்வாகவியல்!**

தவிர அந்தக் கூட்டத்தில், 'வடமாகாண சபைத் தேர்தலில் நாம் பங்குபற்றும் கடைசித் தேர்தல் பரப்புரைக்கூட்டம் இது. இதுவரை காலமும் வடமாகாணத்தின் பல மூலை முடுக்குகளிலும் சென்று மக்களைக் கண்டு வந்துள்ளேன். மன்னார், வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு என்ற ஐந்து மாவட்டங்களிலும் எமது சகோதர சகோதரிகளுடன் அளவளாவியுள்ளேன். அவர்களின் பிரச்சினைகளையும் இதன்போது அறிந்து கொள்ள முடிந்தது. அவற்றுள் சிலவற்றைப் பரப்புரைக் கூட்டங்களின் போது எடுத்துக்கூறக் கூடியதாக இருந்தது. பிரச்சினைகள் பலதரப்பட்டவை என்று அறிந்துகொண்டோம். எல்லோருடைய பிரச்சினைகளுக்கும் விடை காண்பதாயின் முதலில் பிரச்சினைகளின் தன்மையையும், ஆழத்தையும், அடிப்படைகளையும் ஆராய்ந்து அறிய வேண்

டும். அதன் பின்னரே நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். தீர்வுகளைக் கண்டுகொள்ள முடியும். மக்களின் துயரங்களை அகற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கருவூலம் எங்கள் மத்தியிலே உருவாகியுள்ளது. தற்போது வடக்கு மாகாண நிர்வாகம் தலைகீழாக உள்ளது என்றே கூற வேண்டும்." என்றும் குறிப்பிட்டார்.

இங்கும் பலவிதமான கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன. காலவதியாகிப் போயுள்ள வடக்கு மாகாண சபையின் ஆட்சிக் காலத்தில் எந்தவொரு பிரச்சினையும் முழுமையாகவும் ஆழமாகவும் அடிப்படையோடும் அறிந்துகொள்ளப்பட்டதா? அவற்றுக்கான நடவடிக்கை உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டதா? மக்கள் துன்பத்தை அகற்றுவதற்கான கருவூலம் உருக்கொண்டதா? தாங்கள் சென்று வந்த மூலை முடுக்குகள் ஒளி கொண்டு மக்கள் தீர்வுகண்டு செந்தளிப்போடு வாழ்கிறார்களா? தெரியவில்லை! மொத்தத்தில் முதலமைச்சர் என்ற 'நிர்வாகவியல்' திட்டமிட்ட திறமான ஆட்சியமைப்பைத் தரவில்லை என்பதை மக்கள் உணர்ந்துகொண்டுள்ளனர்.

தங்களுடைய சேவை என்பது சபையில் தனித்து ஆடம்பரமான அமர்வுகளோடு அமிழ்ந்து போனதையும், பிரேரணைகளை அவ்வப்போது தலையணையாக்கி நேரத்துக்கு உண்டு களித்து உறங்கியதையும், மக்கள் துன்பப்பட எங்களுக்குச் சம்பள உயர்வு வேண்டும் என்று கொந்தளித்ததையும், முதுகை நிமிர்த்தி உட்கார்ந்து சொகுசாகப் பயணிக்க வாகனங்கள் கொள்வனவு செய்ததையும் மக்கள் அறிந்துகொண்டுள்ளனர்.

**உண்மைக்குப் புறம்பான மேடைப் பிரசங்கி!**

இந்தச் சந்தர்ப்பத்திலே மேடைப் பிரசங்கியாக, அறிக்கைகளின் நாயகனாக, தன்மானச் சிங்கமாகப் பெரியவர் மீண்டும் வார்த்தைச் சுவாரஸ்யங்கள் மீது மையல்கொள்ளத் தொடங்கியுள்ளார். அண்மையில் வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துரைக்கும்போது சுட்டிக் காட்டிய விடயங்கள் தன்மானமுள்ள தமிழர்களைச் சீண்டிப் பார்க்கும் விதத்தில் அமைந்துள்ளன. குறிப்பாக, தமிழ் மக்களின் நீண்ட காலக் கொள்கைகளை எரித்துவிடாதீர்கள் என்று சுட்டுவதற்கு இவர் அருகதையற்றவர் என்றே தோன்றுகிறது. தவிர, "உண்மை பேசுபவர்களை அடக்கியாள முனைவதும், புளுகு மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டுபவர்களை உயரத் தூக்கி வைத்துக் கொண்டாடுவதுமான நிலையே இன்றைய அரசியலில் வலுப்பெற்றுள்ளது. தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளை அள்ளி வழங்குவதும் தேர்தல் முடிந்ததும் அவற்றையெல்லாம் காற்றில் பறக்க விட்டுத் தம்மை வளம்படுத்திக் கொள்கின்ற நடவடிக்கைகளிலேயே அரசியல் தலைவர்கள் பலரும் ஈடுபட்டு வருகின்றனர்."

என்று அவர் குறிப்பிட்ட விடயம் அப்பட்டமான உண்மை. அதற்குப் பெரியவரே சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்வதும் அதி உத்தமம். இதை எவரும் மறுத்துரைப்பதற்கில்லை.

**நகைப்புக்குரிய அரசியல் கதாநாயகன்!**

இதனிடையே நாடாளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாடுகள் கேலிக்கூத்தாக மாற்றம் பெற்றுள்ளமை பற்றிச் சுட்டிக் காட்டுவதற்கு முன்பாக, வடக்கின் உயரிய சபையான மாகாண சபையில் கடந்த காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடித் தெருக்கூத்துக்கள் பற்றி சுய விமர்சனம் செய்துகொள்ள வேண்டியது யார்? மாகாண சபை நகைப்புக்குரிய மன்றமாக மாற்றப்பட்ட போது மக்கள் சிலாகித்தும் உணர்ந்தும் கொண்ட வேதனைகள் எங்கே போயின? எப்படி அந்த வேதனைகள் தற்போதைய போதனைகளாக உருமாற்றம் கொண்டன? வடக்கு மாகாண சபையின் ஐந்துவருட ஆட்சிக் காலத்தில் 13ஆவது அரசமைப்பு திருத்தத்தின்





அனைத்து அம்சங்களும் முழுமையாக நிறைவேற்றப்படுவதற்கான அல்லது தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண்பதற்கான முயற்சிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

அரசியல் கைதிகள் விடயம், காணாமலாக்கப்பட்ட உறவுகள் விடயம் மற்றும் வடக்கின் எல்லைக் கிராமங்களில் இடம்பெற்று வருகின்ற சிங்களக் குடியேற்றங்கள், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் குறித்து அடிப்படையான கருத்தாடல்களோ அல்லது எதிர்ப்புக்களோ காத்திரமான முறையில் வெளிக் காட்டப்படவில்லை.

ஆனால், தமிழ் மக்களின் கொள்கைப் பிடிப்பில் இருந்து மாறிப் புதிய கட்சியைத் தொடங்கி தற்போது அரசமைப்பு ரீதியாக எமது மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரித்துக்களைப் பெற்றுக்கொடுப்பதே முதன்மையான நோக்கம் எனக் கூறி மக்களை ஏதுமறியாக் குழந்தைகளாகப் பாவனை செய்வது எந்தவிதத்தில் நியாயம்? இதில் அரசியல் அனுபவம் என்பது,

"உண்மைக்குப் புறம்பான விடயங்களை அவ்வப்போது மக்கள் நம்பக்கூடிய வகையில் உரத்துப் பேசி அவர்களை நம்ப வைக்கின்ற தன்மையே என்றால், போலிப் பித்தலாட்டம் ஆடுவதே அரசியல் அனுபவம் என்றால் அந்த அனுபவம் என்னிடம் இல்லை என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன்." என எப்படிப் பொய் கூற முடிகிறது? இவையனைத்தும் நகைப்புக்கிடமான விடயங்களாகத் தெரியவில்லையா? இத்தனைக்கும் அரங்க பாவமின்றி ஒவ்வொரு மேடைகளையும் சூழ்ந்திருந்து உணர்வற்றுக் கரகோசம் எழுப்புகின்ற படித்த மனிதப் பிறவிகளை எந்த வகைப்பாட்டினுள் சேர்த்துக் கொள்வது?

**எந்தக் காரணங் கொண்டும் 'நான்' என்ற கர்வத்தை அணிந்து கொண்டு, தற்பெருமைத் தளைகளைத் துளிர்க்க விட்டுத் திரிகின்ற மேற்போந்த 'உம்மாண்டிகள்' குறித்து அவதானமாக இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.**

**தமிழ் மக்கள் கிள்ளுக்கீரைகள் அல்லர்!**

ஆக, தமிழ் மக்கள் கிள்ளுக்கீரைகள் அல்லர்! தெளிவான புரிதலோடே உள்ளனர். பணிவில் இருப்பவன் மட்டுமே பணியில் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டுள்ளனர். தலைவன் என்பவன் பணியாளனாக இருக்க வேண்டும் என்பதையும் தமது தியாகப் பணி மூலம் எடுத்துக்காட்டிய வீர மறவர்களின் ஆன்மா ஒளியால் கண்டடைந்து மக்கள் விழிப்படைந்து வருகின்றனர்.

எந்தக் காரணங் கொண்டும் 'நான்' என்ற கர்வத்தை அணிந்து கொண்டு, தற்பெருமைத் தளைகளைத் துளிர்க்க விட்டுத் திரிகின்ற மேற்போந்த 'உம்மாண்டிகள்' குறித்து அவதானமாக இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

## ஆசிரியருக்கான கடிதம்

# வாகனங்களின் ஒளி விளக்குகளில் கவனம் தேவை

இரவு நேரத்தில் பயணிக்கின்ற வாகனங்கள் சிலவற்றுக்கு மின் விளக்குகள் இல்லாமலிருப்பது வீதிகளில் பயணிக்கின்ற ஏனையவர்களையும் சிரமப்படுத்து கின்றது.

குறிப்பாக லாண்ட் மாஸ்ரர்கள் எனப்படும் சிறிய ரக உழவு இயந்திரங்கள், மற்றும் உழவு இயந்திரங்கள் என்பன இந்தப் பிரச்சினைக்குரிய முதன்மையான வாகனங்களாக இருக்கின்றன. குறிப்பாக இவற்றின் பின் பகுதிகளில் எவ்வித மின் விளக்குகளும், ஒளித்தெறிப்புச் செய்யும் வசதிகளும் ஏற்படுத்தப்படாமல் இரவு நேரத்தில் வீதிகளில் பயணிக்கின்றன.

மற்றைய வாகனங்களுடன் ஒப்பிடுகையில் வேகம் குறைந்தவையாகக் காணப்படும் இவை இப்படியாகப் பின் பகுதி மின்விளக்குகள் இல்லாமல் வீதியில் ஊர்ந்து செல்லும்போது பின்னால் வருகின்ற வாகனத்தினர் இவற்றுடன் முட்டுப்பட்டு விபத்துக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்கள் அதிகமாகவுள்ளன.

ஆகவே இதுகுறித்துக் குறித்த வகை வாகனங்களை வைத்திருக்கின்ற சாரதிகள், உரிமையாளர்கள் கவனமெடுத்துச் செயற்படுவது சிறந்தது.

*சீலன் – கிளிநொச்சி*

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.



## 'மிஸ் வேர்ள்ட்' 2018 மெக்சிக்கோ அழகிக்கு மகுடம்

பீஜிங்.டிசெ.10
சீனாவில்நடைபெற்றஉலகஅழகிப்போட்டியில்மெக்சிக்கோவைச் சேர்ந்த வனிசா போன்ஸ் டி லியோன் என்பவர் 2018ஆம்ஆண்டின்'மிஸ்வேர்ள்ட்'பட்டத்தைவென்றுள்ளார். சீனாவின் சான்யா நகரில் 68ஆவது உலக அழகிப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றிருந்தது. கடந்தாண்டு உலக அழகிப் பட்டத்தை வென்ற இந்தியாவைச் சேர்ந்த மனுஷி சில்லர், இந்த முறை இந்தப் பட்டத்தை வென்ற வனிசாவுக்கு உலக அழகிக்கான கீரீடத்தைச் சூட்டினார்.

## ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் மீது தாக்குதல்

### *14 தலிபான்கள் சாவு - 15பேர் கைது*

காபூல்.டிசெ.10
ஆப்கானிஸ்தான் நாட்டின் கஸ்னி மாவட்டத்தில் தலிபான்களின் பதுங்குமிடம் மீது அரச படைகள் நடத்திய தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் கைதாகியுள்ளனர்.
ஆப்கானிஸ்தான்நாட்டில்சுமார்45சதவீதம்பகுதிகளில்ஆதிக்கம் செலுத்திவரும்தலிபான்ஆயுததாரிகளைக்நோக்கத்தில்ஆப்கான் இராணுவமும், விமானப் படையும் தாக்குதல் நடத்தி வருகின்றன.
இந்தநிலையில், கஸ்னிமாகாணத்தில்உள்ளதேஹ்யாக்மாவட்டத்துக்குட்பட்ட சுலிமன்ஸாய் கிராமத்தில் தலிபான்கள் இரகசியமாக கூடி ஆலோசனைக் கூட்டம் நடத்துவதாக இராணுவ உயரதிகாரிகளுக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.
இதையடுத்து, அந்த கிராமத்துக்குள் விரைந்த இராணுவத்தினருக்கும் தலிபான்களுக்கும் இடையில் துப்பாக்கிச் சண்டையில் நடந்தது. இதில் 14 தலிபான்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



# பிரான்சில் சூடுபிடித்தது

## போராட்டக்காரர்கள் மீது புகை

பாரீஸ்.டிசெ.10
**பிரான்சில்பெட்ரோல்விலைஉயர்வுக்குஎதிர்ப்புத்தெரிவித்துநேற்றுமுன்தினம் நடைபெற்ற மஞ்சள் அங்கி அணிந்துபலரும்ஒன்றுதிரண்டிருந்தஆர்ப்பாட்டத்தில்போராட்டக்காரர்கள் மீது பொலிசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசித் தாக்கியுள்ளனர்.**



நேற்றையதினம்பிரான்சின்தலைநகர்பாரீசில்திரண்டஆயிரத்து500க்குமேற்பட்டபோராட்டக்காரர்கள்அரசுக்குஎதிரான கோஷங்களை எழுப்பினர்.
இதைத்தொடர்ந்து அங்கு குவிக்கப்பட்டிருந்த பொலிசார் மீது அவர்களில்சிலர்தாக்குதல்நடத்தினர். இதனால்அவர்களை அங்கிருந்து கலைப்பதற்காகப்பொலிசார்கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர். இதன்போது போராட்டக்காரர்கள்127 பேரைப் பொலிசார் கைது செய்தனர். பிரான்ஸ் முழுவதும் போராட்டக்காரர்கள் இதேபோல், போலீசார் கைது செய்யப்பட்டு வருகின்றனர். பிரான்சில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்கள்இன்றுமூடப்பட்டுள்ளநிலையிலும், அங்குபாதுகாப்புப்பணிக்காகப்பொலிசார்குவிக்கப்பட்டுஉள்ளனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

**பின்னணி**
பிரான்ஸ் நாட்டில் பெட்ரோல் விலை அண்மைக் காலமாக உயர்த்தப்பட்டு வந்தது. 1.24 யூரோவாக இருந்த ஒரு லீற்றர் பெற்ரோல், 1.53 யூரோ வரை உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டில்23சதவீதம்வரைஅதன்விலைஉயர்த்தப்பட்டிருக்கிறது. இதைஎதிர்த்துக்கடந்த3வாரங்களாகப்பொதுமக்கள்போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்கள் ஆங்காங்கே வன்முறையிலும் ஈடுபட்டனர். இதனால் பிரான்ஸ் நாட்டில் இதுவரை இல்லாதஅளவுக்குப்போராட்டம்தொடர்ந்துவன்முறைகள் நிகழ்ந்தன.
எனவே பெட்ரோல் விலை உயர்த்துவதை 6 மாதங்களுக்கு இடைநிறுத்தி வைப்பதற்கு முடிவு செய்தது பிரான்ஸ் அரவு. இதனால் போராட்டம் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்த்தது. ஆனாலும் போராட்டம் தொடர்ந்தது.
மஞ்சள் அங்கிகளை அணிந்து போராட்டக்காரர்கள் இதில் பங்கேற்பதை வழக்கமாக கொண்டு வந்தனர். எனவே





# "அமெரிக்காவின் பொருளாதாரத் தீவிர

### *ஈரான் அதிபர் ஹசன் ரவ்ஹானி கொதிப்பு*


தெஹ்ரான்.டிசெ.10
"அமெரிக்கா எங்கள் மீது தொடுப்பது பொருளாதாரத் தீவிரவாதம்" என்று ஈரான் அதிபர் ஹசன் ரவ்ஹானி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அந்த நாட்டின் அரச தொலைக்காட்சியில் ஹசன் ரவ்ஹானி பேசும்போது, "எங்கள் நாட்டின்மீதுபொருளாதாரத்தடைவிதிக்கும் நாட்டை எச்சரிக்கிறேன்.
அமெரிக்கா எங்கள் மீது விதிக்கும் இந்தப் பொருளாதாரத் தடைகளால் போதைப்பொருள்கள்மற்றும்தீவிரவாதத்துக்குஎதிரானஎங்களதுதிறன்பாதிப்படைகிறது. இந்தத்தடைகள்ஈரானைப் பலவீனப்படுத்துகிறது. இதனால் உங்களுக்கும்தான் ஆபத்து. அமெரிக்கா பொருளாதாரத் தீவிரவாதத்தை நடத்திக்கொண்டிருக்கிறது"என்றுதெரிவித்துள்ளார்.
"எங்களது கச்சா எண்ணெய் ஏற்றுமதியை அமெரிக்காநிறுத்தினால், வேறு எந்தவளைகுடாநாடுகளும்கச்சாஎண்ணெயை ஏற்றுமதி செய்ய முடியாது" என்றுஈரான்சிலநாள்களுக்குமுன்னர் மிரட்டல் விடுத்திருந்தது குறிப்பி டத்தக்கது.

**பின்னணி**
அமெரிக்கா - ஈரானிடையயே அணு சக்தி ஒப்பந்தம் ஒன்று இருந்துவந்தது. அமெரிக்க அதிபராக டொனால்ட்ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்தை முறிப்பேன் என்றும் ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தம்பைத்தியக்காரத்தனமானது



என்றும் கடுமையாக விமர்சித்தார். இதனைத் தொடர்ந்து ஈரானுடனான ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகி


# து போராட்டம்
# கைக்குண்டு வீச்சு




இதற்கு மஞ்சள் அங்கிப் போராட்டம் என்று பெயர் சூட்டி இருக்கிறார்கள். இதனால் பிரான்சில் மிகப்பெரிய கலவரம் ஏற்படலாம் என்ற அச்சம் உருவாகி இருக்கிறது.

இதன் காரணமாகப் பிரான்ஸ் முழுவதும் பல்லாயிரக்கணக்கான பொலிசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். தலைநகரம் பாரீசில் மட்டும் 8 ஆயிரம் பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள்.


இவர்களுடன் இராணுவத்தினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆங்காங்கே இராணுவ வாகனம் நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



# ிரவாதம் இது"



யது. ஆனால் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்த பிற நாடுகள் ஈரானுக்கு ஆதரவு தெரிவித்தன. ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்துவெளியேறியவுடன் அந்த நாட்டின் மீது பொருளாதரத்தடைகளை அமெரிக்காவிதித்து வருகிறது. இதனால், அமெரிக்கா-ஈரன் இடையே முரண் நிலை ஏற்பட்டு வருகிறது.



# நிலவின் மறுபக்கத்தை ஆய்வு செய்கிறது சீனா!

பீஜிங்.டிசெ.10

நிலவின் மறுபக்கத்தை ஆய்வு செய்து. அங்கு பயிரிடும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் வகையில், புதிய லூனார் ரோவரைச் சீனா நிலவுக்கு அனுப்பி உள்ளது. நிலவு மற்றும் செவ்வாய் போன்ற பகுதிகளுக்கு மனிதனை அனுப்புவதற்கு முன்னர் அங்கு தாவரங்கள் மற்றும் பிற உயிரினங்களை அனுப்பி அவை எப்படி அங்குள்ள சூழலுக்குத் தாக்குப்பிடிக்கின்றன மற்றும் அவற்றுக்கு எந்தவிதமான பாதிப்புகள் ஏற்படுகின்றனஎன்றுகண்டறிந்துஆவணப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதுசீனாவின்சாங்இ(Changle Program)திட்டம்.

இந்தத்திட்டத்தின்ஒருபகுதியாக'சாங்இ 4 மிஷன்' எனும் திட்டத்தைச் சீனா செயற்படுத்தி உள்ளது. பூமியை நோக்கியில்லாமல், பார்வைப் புலத்துக்கு எட்டாத, நிலவின் மறுபாதியாகக் கருதப்படும்வோன்கர்மான்என்னும்பகுதியில் 'சாங் இ4' என்னும் இந்தச் செயற்கைக்கோள் தரையிறங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனாவிலுள்ள ஷிசாங் விண்வெளி நிலையத்திலிருந்துலோங்மார்ச்3பிஎன்னும் ரொக்கெட்டில் இந்த விண்கலம், நிலவை நோக்கிச் செலுத்தப்பட்டது.

இந்த முயற்சியின் மூலம் நிலவிலுள்ள பாறைகள், மண் ஆகியவற்றைப் பூமிக்குக்கொண்டுவந்து மேலதிக ஆராய்ச்சிகளை செய்வதற்குச் சீனா திட்ட மிட்டுள்ளது.

ஜனவரிமாதத்தின்ஆரம்பப்பகுதிவரை இந்த செயற்கைக்கோள் நிலவில் தரையிறங்காது. ஆனால், குறிப்பிட்ட காலம் முடிவு செய்யப்பட்ட பிறகு செயற்கைக் கோள் நிலவின் வேறொரு மூலையிலுள்ள கரடுமுரடான பகுதியில் தரையிறங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது சீனாவினால் ஏவப்பட்டுள்ள செயற்கைக்கோள் இதுவரை ஆராய்ச்சிகளே மேற்கொள்ளப்படாத நிலவின் தென் துருவப் பகுதியின் புவியியல் அமைப்புகுறித்ததகவல்களைச்சேமிப்பதோடுஅங்கிருந்துபாறைதுண்டுகள், மண்மாதிரிகளைப்பூமிக்குக்கொண்டு வரும். Tidal locking அல்லது ஓதப் பூட்டல் என்ற விளைவின் காரணமாகப் பூமியிலுள்ள மனிதர்களால்; நிலவின் ஒருபகுதியைமட்டுமேபார்க்கமுடிகிறது. ஏனெனில், நிலவைச் சுற்றி வருவதற்குத் தான் எடுத்துக் கொள்ளும் அதே காலத்தைதன்னைத்தானே சுற்றிவருவதற்கும் நிலவு எடுத்துக் கொள்கிறது.

பொதுவாக நிலவின் 'இருண்ட பக்கம்' என்றழைக்கப்படும் இந்த இடத்திலும் சூரியவெளிச்சம்காணப்பட்டாலும், பூமியிலிருந்து இந்த இடத்தைப் பார்க்க முடியாது என்பதால்தான் இதை அவ்வாறு அழைக்கின்றனர்.

இந்தச் செயற்கைக்கோள் மூலமாக இனி நிலவின் மறுபாதி பற்றிய பல தகவல்கள்எட்டப்படும்என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.




# விஜய் மல்லையாவை நாடு கடத்தும் விவகாரம் இந்திய அதிகாரிகள் லண்டனுக்கு விரைந்தனர்

லண்டன்.டிசெ.10

இந்தியவங்கிகளில்9ஆயிரம் கோடி ரூபாக்கள்வரை கடன் பெற்றுவிட்டுத் தலைமறைவாக இருக்கும் தொழிலதிபர் விஜய் மல்லயாவை இந்தியாவிடம்ஒப்படைக்கும்வழக்கில் இன்று தீர்ப்பு வெளியாகிறது.

இந்திய அரசுக்குச் சொந்தமான வங்கிகள் மற்றும் பல்வேறு தனியார் வங்கிகளில் சுமார்9ஆயிரம்கோடிரூபாய் அளவுக்குக் கடன் பெற்று மோசடி செய்துள்ள பிரபல தொழில் அதிபர் விஜய் மல்லையாவுக்கு எதிராக நாடு முழுவதும் பல்வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்று வருகின்றன.

இதுதொடர்பாக அவருக்குக் கைது உத்தரவுகளும், கைது செய்யப்பட்டபின்னர் பிணையில் வெளிவர முடியாத உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டு உள்ளன. இந்தக்கடன்மோசடி தொடர்பாக இந்தியக் குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். லண்டனில் தஞ்சம் அடைந்துள்ள விஜய் மல்லையாவை இந்தியாவுக்கு நாடு கடத்தும் வரும் நடவடிக்கையில் இந்திய அரசு ஈடுபட்டு வருகிறது. விஜய் மல்லையாவை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும்என்பதுதொடர்பாகஇந்திய அரசு லண்டன் வெஸ்ட் மின்ஸ்ட்டர் மாஜிஸ்திரேட் நீதிமன்றில் தொடர்ந்துள்ள வழக்கு விசாரணையின் இறுதிகட்டம் இன்று முடிந்து தீர்ப்பளிக்கப்படும் எனவும், நாளைய தீர்ப்பு இந்திய அரசுக்கு சாதகமாக அமையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.


இந்த நிலையிலேயே இந்திய அரசின்உயரதிகாரிகள்அடங்கிய குழுவினர் லண்டனுக்கு விரைந்துள்ளனர்.


# இத்தாலியில் 'இரவு விடுதியில்' தீ 6 பேர்சாவு – 100பேர்காயம்


உரோம்.டிசெ.10

இத்தாலியில் இரவு விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில்6பேர்சாவடைந்துள்ளனர்.12பேர் தீயால் காயமடைந்துள்ளனர். இந்த நெரிசலில் சிக்கி 100பேர் காயமடைந்துள்ளனர். இத்தாலியில் உள்ள காரினால்டோ நகரத்தில் உள்ள இரவு விடுதியில் நள்ளிரவு வேளைதீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீப்பிடித்தவுடன் விடுதியில் இருந்த மக்கள் அங்கும் இங்குமாக ஓடத் தொடங்கினர். இதில் தீயில சிக்கி 6 பேர் சாவடைந்தனர். 100க்கும்மேற்பட்டவர்கள்காயம்அடைந்தனர். காயமடைந்த்வர்கள்மருத்துவமனைகளில்அனுமதிக்கப்பட்டுள்ளனர். தீவிபத்து ஏற்பட்ட விடுதியில், சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கூடியிருந்ததாகத்தெரிவிக்கப்படுகிறது. விபத்துஏற்பட்ட காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.







# புதிய படத்தில் முதல்வராக நடிக்கும் ரஜினிகாந்த்

ஷங்கர் இயக்கத்தில் ரஜினி நடித்த 2.0 படம் வெளியாகி வசூலை குவித்து வருகிறது. முதல் வாரத்திலே படத்தின் வசூல் ரூ.500 கோடியைத் தாண்டியிருப்பதால் படக்குழு மகிழ்ச்சியில் உள்ளது.

இந்த நிலையில் ரஜினி நடிப்பில் அடுத்ததாக 'பேட்ட' படம் வெளியாகத் தயாராகி இருக்கிறது. படத்தைப் பொங்கலுக்கு வெளியிடுவதில் படக்குழு முயற்சி செய்து வருகிறது.

பேட்ட படத்துக்குப் பிறகு ரஜினி முழு நேர் அரசியலில் ஈடுபடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவர் அடுத்ததாக முருகதாஸ் இயக்கத்தில் நடிப்பது உறுதியாகி இருக்கிறது. இந்தப் படம் முருகதாசின் கத்தி, சர்கார் படங்களைப் போலவே அரசியல் படமாகத் தான் இருக்கும் என்கிறார்கள்.

ரஜினியும் அரசியலில் இறங்கியிருக்கும் நிலையில், இது அவரது அரசியலுக்கு ஏற்ற வகையில் உருவாக இருப்பதாகக் கூறப்படுகிறது. அந்த வகையில் ரஜினி படத்துக்கு 'நாற்காலி' என்று பெயர் வைப்பதற்கான ஆலோசனைகள் நடப்பதாகக் கூறப்படுகிறது. முருகதாஸ் படங்களின் பெயர்கள் எப்போதுமே பரபரப்பை ஏற்படுத்தும். 'நாற்காலி' என்று தலைப்பு வைக்கும் பட்சத்தில் படத்தின் மீதான எதிர்பார்ப்பும் அதிகரிக்கும். படத்தில் ரஜினி முதல்வராக நடிப்பதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகிறது.







Aafir Ahamed @AafirAhamed93



ஜனநாயகம் மனிதர்களின் மனநிலையையும் தன்மையையும் பொறுத்து மாறுமடும்.

உள்ளூராட்டக்காரன்@shivaas



ரஜினிகாந்தின் அடுத்த படத்துக்கு 'நாற்காலி' என பெயர் சூட்டப்பட்டுள்ளதாக தகவல்!
இப்படி புடிச்சா தான் உண்டு, நாற்காலியை..!




## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | | | 9 | 2 | 6 | |
| | | | | 1 | | | | 8 |
| 8 | | | | | 4 | 3 | | 1 |
| | | | 8 | | 2 | 7 | | 6 |
| | 7 | | | | | | 3 | |
| 5 | | 3 | 7 | | 6 | | | |
| 4 | | 8 | 9 | | | | | 7 |
| 9 | | | | 5 | | | | |
| | 5 | 2 | 4 | | | 6 | | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 4 | 1 | 2 | 3 | 5 | 9 | 7 | 6 |
| 9 | 3 | 7 | 6 | 8 | 4 | 1 | 5 | 2 |
| 5 | 2 | 6 | 9 | 1 | 7 | 3 | 4 | 8 |
| 1 | 7 | 2 | 3 | 4 | 8 | 6 | 9 | 5 |
| 4 | 8 | 5 | 1 | 6 | 9 | 2 | 3 | 7 |
| 3 | 6 | 9 | 5 | 7 | 2 | 8 | 1 | 4 |
| 7 | 9 | 4 | 8 | 2 | 1 | 5 | 6 | 3 |
| 2 | 1 | 3 | 7 | 5 | 6 | 4 | 8 | 9 |
| 6 | 5 | 8 | 4 | 9 | 3 | 7 | 2 | 1 |

## முடியாது முடியவே முடியாது....!

நீங்க சொன்னமாதிரி 7 நாளைக்குள்ள முடிவுக்கு வரமாட்டிங்கள் பேசிக் கொள்கிறார்கள்
**பேசிக் கொள்ளட்டும்!**

நீங்கள் மாறி மாறிப் பேசுறதா பரவலாகக் கதை அடிபடுது...!
**அடிபடட்டும்!**

வெளிநாட்டுக் காரங்கள் இந்த நாட்டைப் பார்த்துச் சிரிக்கிறாங்களாம்.
**சிரிக்கட்டும்!**

இப்பிடியே போய் கொண்டிருந்தா நாடு சோமாலியா, எதியோப்பியா மாதிரி ஆகிடுமாம்...
**ஆகட்டும்!**

நாட்டில கட்டுக் கோப்புக் குலைஞ்சு சீரழிஞ்சு போகுமாம்...
**போகட்டும்!**

ஒரு கட்டத்துக்கப்பால் நாட்டு மக்கள் தெருவுக்கு வந்துடுவாங்களாம்..
**வரட்டும்!**


அப்படி வந்தால் பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுமாம்...
**ஏற்படட்டும்!**

யாரையும் கட்டுப்படுத்த ஏலாத நிலை வருவதற்கு வாய்ப்பு உண்டாகுமாம்...
**உண்டாகட்டும்!**

உங்களுக்குத் தலை பழுதாகிட்டு எண்டு நீதிமன்றத்துக்குப் போய்ச் சொல்லப் போறாங்களாம்.."
**சொல்லட்டும்...**

**என்ன நடந்தாலும் ரணிலைத் தலைமை அமைச்சராக்க மாட்டேன்!"**

## அடேய் ....





## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** சிலரது பேச்சு சங்கடப்படுத்தலாம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாரான அளவில் இருக்கும். புதிய இனங்களில் செலவு அதிகரிக்கும்.



**இடபம்:** முக்கிய பணி ஒன்றை மறந்திடுவீர்கள். குடும்ப உறுப்பினர் நினைவுப்படுத்தி உதவுவர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை ஏற்படும்.



**மிதுனம்:** மனதில் ஆன்மிக நம்பிக்கை வளரும். தொழில், வியாபாரத்தில் தாராள முன்னேற்றம் உருவாகும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.



**கடகம்:** புதிய திட்டமிடுவீர்கள். நண்பரின் ஆலோசனை ஊக்கம் தரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். வெகுநாள் வாங்க நினைத்த பொருள் வாங்குவீர்கள்.



**சிங்கம்:** சிலரது பேச்சு மனதில் சங்கடம் உருவாக்கலாம். போட்டி பந்தயங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும்.



**கன்னி:** வழக்கத்திற்கு மாறான பணி உருவாகி தொந்தரவு தரலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கலாம். நிலுவைப்பணம் கூடுதல் முயற்சியால் கிடைக்கும்.



**துலாம்:** பூர்வபுண்ணிய நற்பலனால் முக்கியமான செயல் நிறைவேறும். தொழில், வியாபாரம் வியத்தகு வளர்ச்சி பெறும். மேலதிக வருமானம் வந்து சேரும்.



**விருச்சிகம்:** பிறரை நம்பி எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். இதனால் அவப்பெயர் வராமல் தவிர்க்கலாம். சராசரி பணவரவு கிடைக்கும்.



**தனுசு:** தொல்லை கொடுத்தவர்கள் இடம் மாறிப் போகிற சூழ்நிலை ஏற்படும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.



**மகரம்:** இரக்க குணத்தினால் மாறுபட்ட சூழல் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் வருகிற இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வது நல்லது.



**கும்பம்:** குடும்பத்தில் சுபநிகழ்வு உருவாகும். தொழில், வியாபாரம் செழித்து சமூகத்தில் புகழ்பெறுவீர்கள். பணவரவு அதிகரித்து வாழ்க்கைத்தரம் உயரும்.



**மீனம்:** நண்பரின் உதவி கிடைக்கும். செயல்களில் பொறுப்புணர்வுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய வளர்ச்சி உருவாகும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

# பேராசை பெருங்கேடு



"ஆசையே துன்பத்துக்குக் காரணம்" என்றார் புத்தர். ஆனால் அசையிலும் நம்பிக்கையிலும் தான் மனித வாழ்க்கையே ஓடிக் கொண்டிருக்கிறது. அதே சமயம் ஆசைதான் தவறுகளுக்கெல்லாம் காரணமாகின்றது.

வேண்டும் வேண்டும். என்று மனம் விரிவடைந்து கொண்டே போகிறதே தவிர போதும் என்ற எண்ணம் வருவதே இல்லை. ஆசைப்படும் ஒன்று கிடைத்துவிட்டால் மனம் வேறொன்றுக்குத் தாவுகின்றது. ஆசை என்பது வளர்ந்து கொண்டே போகிறதே தவிர குறைவதே இல்லை. ஆசை என்பது தீமைக்குக் காரணமாக இல்லாத வரை அந்த ஆசை இருப்பதில் தவறில்லை. ஆசை பேராசையாகும் போதுதான் பாவம் நிகழ்கின்றது. மனித மனம் திருப்தியடைவதேயில்லை. கோடி ரூபாய் சம்பாதித்தாலும் ஓர் ஆயிரம் ரூபாய் கிடைக்கிறதென்றால் ஓடுகிறான் மனிதன். அதுதான் பேராசை. இருப்பது போதும், வருவது வரட்டும், போவது போகட்டும், மிஞ்சுவது மிஞ்சட்டும் என்ற மனப்பக்குவம் இருந்தால் துன்பம் இல்லை.

சிருஞ்ஜன் என்றோர் அரசன் இருந்தான். அவனுக்கு வாரிசுகள் இல்லாததால் மிகவும் மனம் வருந்தினான்.

அவனுக்குப் பொன்னாசை மிகவும் அதிகம் என்பது நடறிந்த விடயம். பொன்னைச் சேர்த்துக் கஜானாவை நிரப்புவது அவனது வழக்கம். குபேரன் போல பெருஞ்செல்வம் அவனுக்கு இருந்தது. எனினும் அவனக்கு ஆசை அடங்கவில்லை. அவன் தனக்கொரு வாரிசு வேண்டும் என்பதற்காக இறைவனை உள்ளமுருக வேண்டினான். இறைவன் அவன் பிரார்த்தனைக்கு மனமிரங்கி அவன் முன் தோன்றினார்.

"மன்னா உன் பிரார்த்தனைக்குச் செவிசாய்த்தோம். உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்றார் இறைவன். அரசன் மிக மகிழ்ந்து "இறைவா எனக்கொரு பிள்ளையைத் தந்தருள வேண்டும்" என்றான்.

இறைவன் "மன்னா உனக்கு எப்படிப் பட்ட பிள்ளை வேண்டும் என்று விரும்புகிறாய்?" என்று கேட்க, மன்னனுக்குப் பேராசை எழுந்தது. உடனே மன்னன் "இறைவா எனக்கு மிகவும் அழகானதோர் ஆண் பிள்ளை வேண்டும். அவன் மலம், சிறுநீர், எச்சில் கண்ணீர் என அனைத்தும் தங்கமாக மாற வேண்டும்" என்று கேட்டான்.

இறைவனும் அப்படியே ஆகட்டும் என்று வரம் வழங்கினார். அரசனுக்கு இறைவன் தந்த வரத்தின்படி ஓர் ஆண் மகவு பிறந்தது. குழந்தை அழுதால் கண்ணீரிலிருந்து பொன்மணிகளாய் கொட்டின. வாயிலிருந்து எச்சில் வழிந்தால் பொன்னாக மாறியது. அதுபோல மலம், சிறுநீர் தங்கமாக மாறின. அரசனுக்கு ஏக சந்தோசம். அவன் அரண்மனையைத் தங்கத்தாலேயே அலங்கரித்தான். இந்த விடயம் நாடு முழுவதும் பரவியது. இதை அந்த நாட்டிலுள்ள கொள்ளைக்காரர்களும் அறிந்தனர்.

அவர்கள் இளவரசனைக் கடத்தத் திட்டமிட்டனர். ஒருநாள் கொள்ளையர்கள் இளவரசனைக் கடத்திச் சென்று தங்கள் இடத்தில் மறைத்து வைத்தனர். இளவரசனைக் காணாமல் தன் படை வீரர்களை ஏவி அவனைத் தேடிக் கண்டுபிடிக்குமாறு கூறினான் அரசன். வீரர்கள் பல இடங்கள் தேடியும் இளவரசன் கிடைக்கவில்லை. வீரர்கள் கொள்ளையர்களைக் கண்டுபிடித்து அரசன் முன்பு கொண்டு வந்து வந்து நிறுத்தினர்.

அவர்கள் இளவரசனைக் கொன்றுவிட்டதாகக் கூறினர். அரசன் மீளாத் துயரமடைந்தான். தவமிருந்து பெற்ற மகனைத் தன் பேராசையால் இழந்ததை நினைத்து வருந்தினான் அரசன்.

கொள்ளையர்களை சிரச்சேதம் செய்ய உத்தரவிட்டான். பேராசையால் மன்னன் மகனை இழந்தான். கொள்ளையர்கள் உயிரை இழந்தனர். பேராசையால் வந்த பேரழிவு இது என்பதை அரசன் உணர்ந்து கொண்டான்.

# மூதுரை



ஔவையார் இயற்றிய நீதி நூல்களில் ஒன்று மூதுரையாகும்.

இதிலே கடவுள் வாழத்துத் தவிர்ந்த முப்பத்தொரு பாடல்கள் உள்ளன. இந்தப் பாடல்கள் வெண்பாக்களால் ஆனவை. நாம் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல ஒழுக்க நெறிகள் பல இந்த நூல்களில் கூறப்பட்டுள்ளன. ஔவையார் தான் கூற வந்த அறநெறிக் கருத்துக்களை படிப்போர் மனதில் இலகுவாகப் பதியும் வண்ணம் இலகுவான உவமையணிகளைக் கையாண்டு கூறியுள்ளார். கடவுள் வாழ்த்துப் பாடல் 'வாக்குண்டாம்' என்று ஆரம்பிப்பதால் மூதுரையை வாக்குண்டாம் என்றும் பெயர் கூறுவது வழக்கம்.

*1. நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி*
*என்று தருங்கொல் என வேண்டா- நின்று*
*தளரா வளர்தெங்கு தாள் எண்ட நீரைத்*
*தாலையாலேதான் தருதலால்*

**பொருள்:** நாம் தென்னைக்கு நீர் ஊற்றி வளர்க்கின்றோம். அது வளர்ந்த பின் நாம் அடியில் ஊற்றிய நீரை நன்றியாக அதன் தலைப்பகுதியால் இளநீராகத் தருகின்றது. அதுபோலவே நாம் மற்றவர்களிடத்தில் இருந்து பெற்ற உதவியை தக்க தருணத்தில் திருப்பி அவர்களுக்கு செய்துவிட வேண்டும்.

*2. நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம் கல்மேல்*
*எழுத்தப் போல் காணுமே- அல்லாத*
*ஈரமிலா நெஞ்சத்தார்க்கு எந்த உபகாரம்*
*நீர் மேல் எழுதுக்கு நேர்*

**பொருள்:** கல்மேற் பொறிக்கப்பட்ட எழுத்து அழியாமலிருக்கும். அதைப்போல நல்லவர்களுக்கு செய்த உதவியும் மறக்கப்படாமல் நிலைத்து நிற்கும். நீர் மேல் எழுதும் எழுத்து உடனே அழிந்துவிடும். அதுபோல இரக்கமனமற்றவர்களுக்குச் செய்த உதவியும் உடனே மறக்கப்பட்டு அழிந்துவிடும்.







## வர்ணம் தீட்டுவோம்





# பறந்து செல்லும் மீன்!


இந்த மீன் 'எக்ஸோகோடைடே' (Exocoetidae) குடும்பத்தைச் சேர்ந்தது. இதை 'பறக்கும் மீன்' என்றே அழைக்கிறார்கள். அத்திலாந்திக், பசுபிக், இந்தியப் பெருங்கடல்களில் இவை அதிகம் காணப்படுகின்றன. மீன் நீந்த அதன் துடுப்புகளைப் பயன்படுத்தும் அல்லவா? இந்த மீன் அதைப் பறக்கவும் பயன்படுத்திக் கொள்கிறது. இதன் துடுப்புகள் மற்ற மீன்களுக்கு உள்ளது போல் இல்லை. கொஞ்சம் பெரியதாகவும், பறவைகளின் இறகுகள் போலவும் உள்ளன.

அதனால், கடல் மட்டத்திலிருந்து சற்று உயரே எழுந்து இதனால் பறக்க முடிகிறது. இதன் வால் நிமிடத்துக்குச் சுமார் 70 முறை வேகமாக ஆடக்கூடியது. அதனால் வாலையும் துடுப்பையும் சமநிலையில் வைத்துகொண்டு துடுப்பை நன்றாக விரித்துப் பறக்கிறது. அப்படிப் பறக்கும்போது டால்பின் போலத் தண்ணீரிலிருந்து மேலே எழும்பிப் பறக்கிறது. சுமார் 400 மீற்றர் தூரம் வரை இந்த மீனால் பறக்க முடியும். மீண்டும் தண்ணீருக்குள் செல்லும்போது துடுப்புகளைச் சுருக்கிக் கொண்டு உள்ளே சென்றுவிடும்.

# உகாண்டா

1. கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள நாடு. கிழக்கில் கென்யாவும், வடக்கில் சூடானும், மேற்கில் காங்கோவும், தெற்கில் தான்சானியாவும் இதன் எல்லைகளாக உள்ளன.
2. இதன் தலைநகரம் கம்பாலா.
3. 1962ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இங்கிலாந்திடமிருந்து சுதந்திரம் பெற்றது.
4. அதிக அளவில் மலை கொரில்லாக்கள் இங்கேதான் இருக்கின்றன.
5. 'ஆபிரிக்காவின் முத்து' என்று வர்ணிக்கப்படுகிறது.
6. உலகின் இளமையான நாடு என்று கருதப்படுகிறது. இங்கு வசிப்பவர்களில் பாதிப் பேர் பதினைந்து வயதுக்குக் குறைவானவர்கள்.
7. இந்த நாட்டின் முக்கிய ஏற்றுமதி கோப்பி.
8. இந்த நாட்டின் கொடியில் அதன் தேசியப் பறவையான மாகேம் (ஒரு வகைக் கொக்கு) இடம்பெற்றுள்ளது.
9. உலகின் இரண்டாவது மிகப் பெரிய நன்னீர் ஏரியான விக்டோரியாவின் ஒரு பகுதி இந்த நாட்டில் இருக்கிறது.
10. இடி அமீன் ஆட்சி செய்த நாடு.

# இயற்கையின் சமனிலையைப் பேணுவோம்!



■ ச.சிவமைந்தன்

ஐம்பூதங்கள் என்று குறிப்பிடப்படும், 'நிலம், நீர், நெருப்பு, வானம், காற்று' ஆகிய இயற்கை கொண்ட சக்திகளால் ஆனது நாம் வாழும் பூமி. "பூமியைச் சூழ்ந்து படையாக அல்லது போர்வையாகக் காணப்படும் மண், பாறை, நீர், வளி உள்ளடங்கலாக, உயிரிகளைக் கொண்டிருந்து அவற்றைத் தாங்கும் அனைத்தும் ஒன்றிணைந்து உயிரி மண்டலம்" என இலக்கணப்படுத்தப்படுகிறது.

இந்த உயிரின மண்டலத்தின் உப பிரிவுகளாக சூழல் தொகுதிகள் அமைந்துள்ளன. அவை உயிருள்ள மற்றும் உயிரற்ற காரணிகளைக் கொண்டுள்ளன. இந்தக் காரணிகளுக்கு இடையேயான இடைத் தாக்கத்தின் மூலமாக, தொடர்ந்தும் பேணப்படுகின்ற அல்லது இயங்கிக் கொண்டிருக்கின்ற தொகுதியை சூழல் தொகுதியாகக் கருதலாம்.

**உயிருள்ள காரணிகள்!**

சூழல் தொகுதியில் காணப்படுகின்ற தாவரங்கள், விலங்குகள், நுண்ணங்கிகள் என அனைத்தும் ஒருமித்து உயிருள்ள காரணிகள் என அழைக்கப்படுகின்றன. உயிரற்ற காரணிகள் பௌதீக மற்றும் இரசாயனக் காரணிகளாக வகுக்கப்படுகின்றன. சுற்றாடலில் காணப்படும் ஒளிச்செறிவு, அமுக்கம், சாரீரப்பதன்,வெப்பநிலை போன்றவை பௌதீகக் காரணிகளாக அமைந்துள்ளன. கரைந்துள்ள வாயுக்கள், அமில மற்றும் காரத் தன்மை கொண்டுள்ள இரசாயனப் பதார்த்தங்கள் இரசாயனக் காரணிகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

**தங்கி வாழ்தல்**

ஏனைய உயிரங்கிகளைப் போன்று. மனிதனும் சுற்றாடலை அல்லது சூழல் தொகுதியை உருவாக்கும் திறனுடைய முதன்மை உயிரிக் கூறாக விளங்குகிறான். மனிதன் தனித்து தனியனாக அல்லது அங்கியாக சுற்றாடலில் வாழ முடியாது. ஒரு உயிரி, அதே இன அங்கியில் அல்லது பிறிதொரு வகை உயிரியில் பின்வரும் ஏதோ ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட காரணத்துக்காக தங்கி வாழ்கிறது.

- உணவு
- வாழிடம்
- பாதுகாப்பு
- இடப்பெயர்ச்சி
- இனப்பெருக்கம்

**இயற்கை கொள்ளும் சமனிலை**

சாதாரண நிபந்தனைகளின் கீழ் ஒரு சூழல் தொகுதியின் ஆக்கக் கூறுகள் ஒன்றுடன் ஒன்று ஒரு சமனிலையில் காணப்படும். இந்தச் சமநிலை இயற்கைச் சமனிலை எனப்படுகிறது.

இயற்கைச் சூழல் தொகுதி தன்னைத் தானே தொடர்ந்து பேணக்கூடிய தன்மையைக் கொண்டுள்ளதால், அங்கு இயற்கைச் சமனிலை தொடர்ந்தும் பேணப்படுகிறது. ஆனாலும் செயற்கைச் சூழல் தொகுதி மனிதனால் உருவாக்கப்பட்டு, காலத்துக்குக் காலம் மாற்றியமைக்கப்படுவதன் விளைவாக சூழலியற் காரணிகள் குழப்பமடைகின்றன. தன்னைத் தானே தொடர்ந்தும் பேண முடியாத தன்மையை நோக்கி நகர்வுறுகின்றன.

இயற்கைச்சமனிலை ஏதாவது ஒரு காரணத்தால் குழப்பமடையும் போது. அது சூழல் தொகுதியில் அல்லது சுற்றாடலில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். இயற்கைச் சமனிலையைப் பேணி சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டிய முக்கிய கடமையை மனிதன் ஆற்ற வேண்டும். ஏனெனில் இயற்கைச் சமனிலையைக் குழப்பும் முக்கிய செயலுயிரியாக மனிதன் விளங்குகிறான்.

> செல்வந்த நாடுகளினால் ஏற்படுத்தப்படும் காபனீரொச்சைட்டின் வெளியேற்றம், வளி மண்டல ஓசோனின் இழப்பு, அமில மழை, தீங்கிழைக்கும் கழிவுகள் என்பனவும் அச்சுறுத்தலாக உள்ளன. கைத்தொழிலில் வளர்ச்சியடைந்த நாடுகள் தாம் எதிர்கொள்ளும் சொந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியிருப்பதுடன் வளர்முக நாடுகளின் சூழலை மேம்படுத்துவதற்கான உதவியை வழங்குவதில் முதன்மைப் பங்காற்றுகின்றன.

**சூழல் மாசுறல்!**

சூழல் தொகுதியில் மனிதன் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படுத்தும் விரும்பத்தகாத அல்லது பாதகமான விளைவுகள் ஆபத்திலிருந்து மீளமுடியாத நிலையை உருவாக்கும் தன்மையை சூழல் மாசடைதல் என்கிறோம்.

சூழல் மாசடைதலுக்குரிய முதன்மைக் காரணங்களுள் ஒன்றாக அதிகரித்து வரும் உலக சனத்தொகைப் பெருக்கம் முதன்மை இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது. இதன் காரணமாக அதன் தேவையை ஈடுசெய்ய பின்வரும் செயற்பாடுகளில் மனிதன் ஈடுபடுகிறான். அதன் காரணம் கொண்டு சூழலில் பல நேரடியான அல்லது மறைமுகமான பாதக விளைவுகள் ஏற்படுகின்றன.

- உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய விளைநிலங்கள் அதிகரிக்கப்படல்.
- வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் குடியேற்றத் திட்டங்கள் அமுலாக்கப்படுதல்.
- நீர்ப்பாசனத்திட்டங்கள், போக்குவரத்து நெடுஞ்சாலைகள் உருவாக்கப்படுதல்.
- தொழிற்சாலைகள், கைத்தொழில் பேட்டைகள் அதிகப்படுதல்.



**சூழலை மாசுபடுத்தும் காரணிகள்!**

பொதுவாக பின்வரும் செயற்பாடுகள் அல்லது மாசாக்கிகள் சூழல் மாசடைதலில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

- இரசாயன வளமாக்கிகளும், விவசாய இரசாயனப் பொருள்களும்.
- உயிர்ச் சுவட்டு எரிபொருள்களின் பாவனை.
- வாகனங்களிலிருந்து வெளியேறும் மாசாக்கிகள்.
- தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் மாசாக்கிகள்.
- கனிய வளங்கள் அகழ்ந்தெடுக்கப்படுதல்.
- எண்ணெய் சிந்துதல்.
- கதிர் வீச்சு பொருள்களின் பாவனை

**வளங்கள்**

இயற்கை வளங்கள் என்பது பொதுவாக, 'நீர்வளம், நிலவளம், காட்டுவளம், மழை வளம்,ஆற்றல் வளம்' என அமைவு பெறுகிறது. இந்த வளங்களை இரு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம்.

- புதுப்பிக்கக்கூடிய வளம்.
- புதுப்பிக்க இயலாத வளங்கள்.

**இயற்கைச் சமனிலைக் குலைவு தரும் தாக்கம்**

விலங்குகளையும் பறவைகளையும் போற்றும் பண்பும், அவைகளை வழிபடும் பழக்கமும் தமிழர்களுடைய பண்பாட்டில் தொன்று தொட்டு இருந்து வருகிறது. ஆதிகாலத்திலிருந்து உலகில் மக்கள் இயற்கையை வழிபட்டும், இயற்கையை விரும்பிப் பாதுகாத்தும் வாழ்கின்றனர். மனிதன் இயற்கைச் சமனிலையைப் பாதுகாப்பதன் மூலமே மகிழ்ச்சியான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும்.

வளர்முக நாடுகள் மாசடைதல் மற்றும் சூழல் சீர்கேடுகளால் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. செல்வந்த நாடுகளைப் போலன்றி அவை நீர்மாசடைதல், அசுத்தமடையும் வளி, மண்ணரிப்பு, காடழிப்பு ஆகியவற்றிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்கு இயலாத நிலையில் இன்றும் உள்ளன. சூழல் வளங்களின் இத்தகைய இழப்பு, வறுமை நிலையிலுள்ள மக்களை மிகவும் பாதிக்கிறது. வளர்முக நாடுகள் சுகாதாரப் பற்றாக்குறை, அசுத்தமான நீர், மண்ணரிப்பு, கரும்புகைகளின் வெளியேற்றம் போன்ற மிக முக்கியமான சூழல் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றன.

அத்துடன் செல்வந்த நாடுகளினால் ஏற்படுத்தப்படும் காபனீரொச்சைட்டின் வெளியேற்றம், வளிமண்டல ஓசோனின் இழப்பு. அமில மழை. தீங்கிழைக்கும் கழிவுகள் என்பனவும் அச்சுறுத்தலாக உள்ளன. கைத்தொழிலில் வளர்ச்சியடைந்த நாடுகள் தாம் எதிர்கொள்ளும் சொந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியிருப்பதுடன் வளர்முக நாடுகளின் சூழலை மேம்படுத்துவதற்கான உதவியை வழங்குவதில் முதன்மைப் பங்காற்றுகின்றன.

1980ஆம் ஆண்டுகளின் பின்னர் உலக அளவில் 1.3 மில்லியன் மக்கள் நகரங்களில் காணப்பட்டனர். அதனால் கடுமையான சுவாசித்தல் ஒழுங்கின்மை மற்றும் புற்று நோய்களால் நகரமக்கள் அதிகம் பாதிக்கப்பட்டனர்.

வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் புகையில் காணப்படும். அதிகளவான ஈயம் பெரிய சூழல் அபாயத்தைத் தோற்றுவிக்கக்கூடியது என வளர்முக நாடுகளின் பெரிய நகரங்களின் போக்கு அறியத்தந்துள்ளது.

**இயற்கைப் பாதுகாப்பு அவசியம்!**

இயற்கைக்கும் மனித சனத்தொகைக்குமிடையில் காணப்படும் சமூக, பொருளாதார சூழல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் தீர்வுகளிலேயே இன்றைய எதிர்காலத் தலைமுறையினரின் முன்னேற்றமும், நலனும் தங்கியுள்ளன. கடந்த இரு நூற்றாண்டுகளாக இயற்கை வளங்கள் அதிகமாகச் சுரண்டப்பட்டுள்ளன. தாவரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. மண் கழுவிச் செல்லப்பட்டுள்ளது. வளி, நீர் மற்றும் நிலம் மாசடைந்துள்ளன. உயிர்க்கோளத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மனித சுகாதா ரத்தை மிகமோசமாகப் பாதித்துள்ளன.

இவ்வாறாக புவி வெப்பமடைதல், கடுமையான முறையில் காட்டுநிலங்கள் அழிவு, ஓசோன் படைத் துவாரம், வளங்களின் அதி உச்சப் பயன்பாடு போன்ற செயல்நிலைகளை கடந்த நூற்றாண்டுகளிலிருந்து நாம் அறிந்து வருகிறோம். சூழல் பாதுகாப்பு, வளங்கள் பாதுகாப்பு என்பன குறித்து எல்லா நாடுகளும் கரிசனை கொள்ள வேண்டும். அது குறித்தான விடயங்களைக் கையாள வேண்டும். காடுகள் வளர்ப்பு, மிருகங்கள் வளர்ப்பு, இயற்கை முறையான பயிர்ச் செய்கை கழிவுகள், மீள்சுழற்சி, நீர் நிலைகளில் கடல் உயிரினங்கள், மீன்கள் வளர்ப்பு போன்ற செயற்கரிய காரியங்களை மனிதகுலம் மேற்கொள்ள வேண்டும். இனி வருங்காலத்தில் இயற்கைச் சூழல் பேணப்பட்டு, நற்சமுதாயமான மனிதம் வளரவேண்டும். ■

## சாவகச்சேரி நகராட்சிமன்றம்
## 2019 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்றமானது 2019 ஆம் ஆண்டிற்கான கீழ் குறிப்பிட்ட வழங்கு பொருள்கள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் **வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள்,வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள்** ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது. விண்ணப்பப்படிவங்கள் எமது அலுவலகத்தில் **பதிவுக்கட்டணம் ரூபா.1000** செலுத்திபெற்றுக் கொள்ளமுடியும். விண்ணப்பங்கள் யாவும் **28.12.2018 ஆம் திகதிவரையும்** எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும்.

**தொகுதிகள்**

தொகுதி "A"- பொருள்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B" - சேவைகள் / வேலை
தொகுதி "C" – வாகனத் திருத்தமும் சேவிஸ் செய்தலும்

**பொருள்கள்**

| தொகுதி இல. | பொருள்கள் வழங்குதல் பொது |
|---|---|
| A - 01 | காகிதாதிகள் எழுதுபொருள்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள் |
| A - 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/ இரும்பு/ உருக்கு ஏனையவை) |
| A - 03 | கணினிகள், கணினியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள் நிப்பன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள். |
| A - 04 | யன்னல், திரைச்சீலைகள் சீருடைகள் மற்றும் துணிவகைகள். |
| A - 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள் கல் வகைகள் நீர் வழங்கலுக்கான பொருள்கள் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள். |
| A - 06 | கட்டட இரும்புப் பொருள்கள், பெயின்ற், வாணிஸ், மற்றும் சகல ஹாட்வெயார் பொருள்கள். |
| A - 07 | மின்சாரப் பொருள்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின் இணைப்பிற்கான பொருள்கள், மின் மோட்டர்கள், மின்சார பல்புகள், மின் விசிறிகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள். |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர், மற்றும் ஏனையவை. |
| A - 09 | அழுக்குநீக்கும் பவுடர்கள், விம், ஹாபிக் மற்றும் கிருமி நாசினிகள் ஏனையவை. |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள் துணைப் பொருள்கள் ரயர், ரியூப் மற்றும் ஏனையவை. |
| A - 11 | தோல் உற்பத்திப் பொருள்கள், கம், சப்பாத்துக்கள். |
| A - 12 | எரிபொருள்கள்,உராய்வு நீக்கிகள். |
| A - 13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A - 14 | இரும்புப் பொருள்கள் |
| A - 15 | கற்கள் மணல் வகைகள். |
| A - 16 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A - 17 | பனைமரங்கள், சலாகைகள். |
| A - 18 | பாதணிகள், தோற் பொருள்கள் |
| A - 19 | அலங்காரப் பொருள்கள் |
| A - 20 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப் பொருள்கள். |

| தொகுதி இல | வேலைகள் விவரம் |
|---|---|
| B – 01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும் தொழில்நுட்ப ஆலோசனையும் வழங்கல். |
| B – 02 | உருக்குமரத் தளபாடங்கள் திருத்தம். |
| B – 03 | மின் உபகரணங்கள் திருத்தம், சேவிஸ் செய்தல் (காற்றுக் குளிராக்கி, நிழற்பட பிரதி இயந்திரம், கணினி விரல் அடையாளத்தைப் பதிவுசெய்யும் இயந்திரம்.) |
| B – 04 | மின் மோட்டர்கள்,நீர் இறைக்கும் இயந்திரங்கள்.மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும் மீளமுறுக்குதலும். |
| B – 05 | பதிப்பக வேலை சகலவித படிவங்கள், ஏனையவை. |
| B – 06 | கட்டட அமைப்பும் திருத்த வேலையும் |
| B – 07 | உள்ளக தொலைபேசி இணைப்பும் பராமரித்தலும் |
| B - 08 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B – 09 | கோலவுடைதைத்தல். |
| B - 10 | இறப்பர் முத்திரை வகைகள் தயாரித்து வழங்கல். |

**நியந்தனைகள்**

1. வழங்கல்கள் / சேவைகள் 2019 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியாகும்.
2. திருப்திகரமற்ற வழங்கல்கள் / சேவைகள் நிராகரிக்கும் உரிமை செயலாளருக்கு உண்டு.
3. பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை செயலாளருக்கு உண்டு.மேலதிக விவரங்களை அலுவலகநேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொகுதி இல | வாகனதிருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| C-01 | சகல விதமான வாகனதிருத்தமும், மின்சாரவேலை, வாகன உட்பக்கம், சீற் என்பவற்றுக்கான குசன் வேலை. |
| C-02 | சகலவிதமானவாகன சுத்திகரிப்பு |
| C-03 | வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல், உலோகவேலைகள். |

**இ.சிவமங்கை, தவிசாளர்,**
**நகராட்சிமன்றம், சாவகச்சேரி.**

(C/8630)(11,17)

உ

## அகில இலங்கை இந்து மாமன்றம்
## பணிநிலை வேண்டுகை

**நிர்வாக அலுவலர் - திருமுறிகண்டி பிராந்திய நிலையம்**

திருமுறிகண்டியிலமைந்துள்ள, அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பிராந்திய நிலையத்திற்கு "நிர்வாக அலுவலர்" பணி நிலைக்கு, சமயப்பற்றுள்ள தகுதியானவர்களிடமிருந்து (இளைப்பாறியவர்களும்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிதி, நிர்வாக அலுவலர் - தலைமையகம், கொழும்பு**

கொழும்பு 02ல் அமைந்துள்ள, அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைமையகத்திற்கு **"நிதி, நிர்வாக அலுவலர்"** பணி நிலைக்கு, சமயப்பற்றுள்ள தகுதியானவர்களிடமிருந்து (இளைப்பாறியவர்களும்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களை **25-12-2018** ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கும் வண்ணம் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

**திரு.வே.கந்தசாமி (பொதுச் செயலாளர்),**
**அகில இலங்கை இந்து மாமன்றம்**
**91/5, சே.சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு 02.**

## வலி.கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளுக்கான வாக்களிக்கத் தகுதியுடைய வாக்காளர் பட்டியல் தொடர்பான அறிவித்தல்

வலி.கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளுக்கான 30.09.2018 ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்பட்ட வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர்களின் பெயர், விவரம் அடங்கிய அங்கத்தவர் பட்டியல் இயங்குகின்ற கிளைகளிலும் கீழ்வரும் இயங்காத கிளைகளுக்கான பட்டியல்கள் சங்கத்தின் தலைமைக் காரியாலயம் மற்றும் கீழ்க்குறிப்பிட்ட இடங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்பதனை அறியத்தருகின்றோம்.

| கிளை இலக்கம் | காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடம் |
|---|---|
| கிளை - 07 | கிளை இல - 11. கரந்தன் இராசவீதி |
| கிளை - 10 | கிளை இல - 09. நீர்வேலி கந்தசாமி கோயிலடி |
| கிளை - 13 | கிளை இல - 12. கோப்பாய் சந்தி |
| கிளை - 20 | கிளை இல - 34. இருபாலை கிழக்கு |
| கிளை - 31 | கிளை இல - 30. ஊரெழு |

இவ் அங்கத்தவர் பட்டியல்கள் **10.12.2018 ஆம் திகதி தொடக்கம்** எதிர் **வரும் 25.12.2018 ஆம் திகதி வரை** காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் என்பதுடன் மேற்படி அங்கத்தவர் பட்டியல் தொடர்பான திருத்தங்கள், ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 26.12.2018 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் சங்கத்தின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம். பின்னர் வரும் ஆட்சேபனைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**பதில் செயலாளர்,**
**10.12.2018** **வலி.கிழக்குதென்பகுதி ப.நோ.கூ.சங்கம் (வ-து)**

(N/8648)(11,17)

## கண்ணீர் அஞ்சலி



யா/கொக்குவில் ஸ்ரீஇராமகிருஷ்ண வித்தியாசாலை ஆசிரியை திருமதி சி.ரேணுகா அவர்களின் அன்புக் கணவர்

**சோமசுந்தரம் சிவராசா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.**

(CS 2171B) (4,17)

## மரண அறிவித்தல்



## மயில்வாகனம் சிறிதரன்

சாரதா வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை சேர்ந்த மயில்வாகனம் சிறிதரன் நேற்று (09.12.2018) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும், யோகராசா காலஞ்சென்ற பரமேஸ்வரிஅம்மா தம்பதியரின் மருமகனும், விஜயலஷ்மியின் அன்புக் கணவரும், திலீபன் (சுவிஸ்), கார்த்தீபன், திவ்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும், செந்தூரியின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2018) திங்கட்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(c 8650) (13.17)

ES Printers
2019 இற்கான அனைத்து வகையான கலண்டர்களையும் குறைந்த விலையில் செய்து பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com

வாடகைக்கு

இசுஸ் பிறீஸர் (ISUZU FREEZER) ரக வாகனம் வாடகைக்கு உண்டு.
தொடர்பு - 077 398 7102
(CS 21720/15/17)

**பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை**
**நோயாளர் நலன்புரிசங்கம்**

## சிற்றுண்டிச்சாலை, துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம்

## கேள்வி கோரல்

2019 ஆம் ஆண்டு மேற்படி சிற்றுண்டிச்சாலையையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையத்தையும் நடத்துவதற்கு குத்தகைக்கு விடப்படவுள்ளது. இதற்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

விண்ணப்படிவங்களை ஆதார வைத்தியசாலையில் காரியாலயத்தில் மீளளிக் கப்படாத தொகை ரூபா 1000/= செலுத்தி விண்ணப்பபடிவங்களை இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம். 23.12.2018 காலை 10 மணிக்கு முன்னர் மூடப்பட்ட உறையில் வைக்கப்பட்டு விண்ணப்பங்கள் நேரடியாக கையளிக்கப்பட வேண்டும். அன்றைய தினமே காலை 10.30 மணிக்கு விண்ணப்பங்கள் திறக் கப்பட்டு பரிசீலனை செய்யப்படும்.

**தலைவர்,**
**நோயாளர் நலன்புரிசங்கம், ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை.**

உதயன் விளம்பரத்தொடர்புகளுக்கு advt@uthayan.com, 0214931111

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் வேலாயுதபிள்ளை

(ஓய்வுநிலை புகையிரத நிலைய அதிபர் - S.M நடேஸ், மீசாலை)


உதிப்பு 27.11.1936 உதிர்வு 08.12.2018

மீசாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வேலாயுதபிள்ளை 08.12.2018 சனிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜ பூபதியின் அன்புக் கணவரும். சுகந்தன் (லண்டன்). சுகர்ணன் (கனடா). சுகுணன் (கனடா). சுகிர்தன் (லண்டன்) ஆகியோ-ரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.12.2018 புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை

(IN/8642)(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா தர்மராசா



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கலப்பனாலோடை, அளவெட்டி வடக்கு, அளவெட்டியைவசிப்பிடமாகவும்கொண்ட கந்தையா தர்மராசா நேற்று (09.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் நாகராசா காலஞ்சென்றவர்களான புவ னேஸ்வரி, பரமேஸ்வரி மற்றும் செல்வராசா, தங்கராசா, லலிதாதேவி, பத்மநாதன், பானுமதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர் களான தாயுமானவர், சகுந்தலாதேவி ஆகியோரின் மைத்துனரும் சாமினியின் (ஆசிரியை - யா/ சீனங்கலட்டி, ஞானோதயா வித்தியாலயம்) பாசமிகு தந்தையும் பிரதீபனின் (சிரேஷ்ட தொழில் அலுவலர் தொழில் திணைக்களம், கிளிநொச்சி) அன்பு மாமனாரும் ஆதிரை ஆருத்திரா, அரங்கன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2018) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி, கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"சக்திஅகம்"**
**அளவெட்டி வடக்கு, அளவெட்டி.**

(J 578/13/17)

தகவல்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



அமரர்

### அந்தோனிமுத்து திரேசம்மா

பிறப்பு 10.06.1925 இறப்பு 09.11.2018

' உமது இல்லத்தில் தங்கியிருப்போர் நற்பேறு பெற்றோர் அவர்கள் எந்நாளும் உம்மை புகழ்ந்து கொண்டே இருப்பார்கள் '

அன்பும் புகலிடமான இறைவா ! உமது இரக்கத்தின் ஆழத்தை சுவைத்து அதில் அமைதிகாண உம் திருப்பாதம் வந்துள்ள எம் தாயார் அமரர் அந்தோனிமுத்து திரேசம்மாவை உம் திருக்கரத்தில் ஏற்று அவர் விரும்பும் நித்திய வாழ்வை அளித்து அவர் என்றும் உம் ராச்சியத்தில் இன்புற்றிருக்க அருள் செய்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

**உள்ளத்தின் ஆழத்தில் இருந்து நன்றி நவில்கின்றோம்**

இறைவா உமது அளவு கடந்த அன்பிற்கு எமது நன்றிகள் எமது பாசமிகு தாயார் அமரர் அந்தோனிமுத்து திரேசம்மா அவர்களின் மரணச்செய்தி கேட்டு எமக்கு ஆறுதல் கூறியதோடு இறுதி இரங்கல் திருப்பலியிலும் கலந்து கொண்டு எமது தாயாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக செபித்து இறுதி வழிபாட்டை முன்னெடுத்து எமது தாயாரின் பூதவுடலை ஆசீர் வதித்த யாழ் மறை மாவட்ட ஆயர் ஆண்டகை அவர்களுக்கும் எமது இல்லம் வந்து ஆறுதல் கூறியதோடு பலிப்பூசையிலும் இணைந்து செபித்த அன்புக்குரிய குருமுதல்வர் அவர்களுடன் இணைந்து பலிப்பூசை ஒப்புக்கொடுத்து செபித்த அனைத்து மறை மாவட்ட குருக்களுக்கும் ஏனைய துறவறசபை குருக்கள் அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகளுக்கும் மற்றும் பலசிரமங்களுக்கு மத்தியிலும் வருகை தந்த மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் மறைமாவட்ட குருக்கள் அனைத்து துறவுசபைக்குருக்கள் மற்றும் அருட்சகோதரிகளுக்கும் எமது உள்ளத்தின் ஆழத்தில் இருந்து நன்றிகள். மேலும் பெரிய குருமட அதிபர் மற்றும் மாணவர்களுக்கும் மன்னார் மறை மாவட்ட அரசாங்க அதிபர் (GA), வைத்தியர்கள். சட்டத்தரணிகளுக்கும் விசேட நன்றிகள் இறைதியான இல்லப்பணி யாளர்கள், பலபங்குகளிலிருந்து வருகை தந்த பக்திச்சபையினர், இறை மக்கள், இந்து சகோதரர்கள். உறவுகள் யாவருக்கும் மனம் நிறைந்த நன்றிகள்.

மேலும் வெளிநாடுகளில் பணிபுரியும் அருட்தந்தையர்கள். உறவுகள், தொலைபேசி, முகப்புத்தகம், குறுந்தகவல் ஊடாகவும் வெளிநாடுகளிலும் எமது நாட்டிலிருந்தும் ஆறுதல் தெரிவித்தோருக்கும் எமது நன்றிகள்.

விசேடமாக அம்மா நோயுற்றிருந்த வேளையில் அம்மாவை பராமரித்த திருச்சிலுவை அருட்சகோதரிகளுக்கும். வைத்தியர்கள், தாதியர்கள், உதவியாளர்கள் அனைவருக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிகள்.

அம்மாவின் ஆன்மீகத்தில் விசேடமாக அக்கறை காட்டிய திருக்குடும்ப சபையைச் சேர்ந்த அருட்சகோதரிக்கும் அம்மாவின் வயோதிப நேரத்தில் அதிக அக்கறையோடு உதவி புரிந்த சகோதரிக்கும் நன்றியினை கூறுவதோடு

இரங்கல் திருப்பலி தொடர்பான அனைத்து ஒழுங்கினையும் மேற்கொண்ட பேராலய பங்குத்தந்தை உதவிப்பங்குத்தந்தையர்களுக்கும் நன்றிகள். உறவுகளை நாம் மறக்க வில்லை பல உதவிகளை விரைந்து உண்மை அன்போடும் அக்கறையோடும் அம்மா வுக்கு உதவி செய்த அனைவருக்கும் நன்றிகள்.

**என்றுமே மறக்கமுடியாத நினைவாக**
**நன்றி கூறி நிற்கும்.**

**அருட்தந்தை அ.லோறன்ஸ் 077 256 6029**
**அ.போல் 077 967 2764**
**அ.லடிஸ்லோஸ்**
**அருட்சகோதரி அ.அமல்பேர்கா (தி.சி)**
**21, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.**

(CS 21719) (14.17)













## நல்லூர் பிரதேச சபையின் வரவு செலவு திட்டம் மக்கள் பார்வைக்கு

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட நல்லூர் பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இதனை கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் 10.12.2018 ஆம் திகதியிலிருந்து 23.12.2018 ஆம் திகதி வரை பார்வையிடலாம்.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் | - கருவப்புலம் வீதி, கொக்குவில். |
| நல்லூர் உப அலுவலகம் | - கலாசாலை வீதி, திருநெல்வேலி. |
| கொக்குவில் உபஅலுவலகம் | - பிறவுண் வீதி, கொக்குவில். |
| பொதுநூலகம் கோண்டாவில் | - ஆஸ்பத்திரி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். |
| பொது நூலகம் கொக்குவில் | - பிறவுண் வீதி, கொக்குவில். |
| பொது நூலகம் நல்லூர் | - கருவப்புலம் வீதி, கொக்குவில். |

**திரு.தா.தியாகமூர்த்தி,**
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை திருநெல்வேலி.**
**10.12.2018** (in.8649) (13.17)

MASSIVE VEHICLES AUCTION SALE

All Types Of Vehicles Including Two Wheel Tractors, Four Wheel Tractors, Harvesters, Motor Bikes, Trucks, Three Wheelers In Excellent Condition

11th of December

LOLC Vehicle Facility Centre
STATION ROAD, VAIRAVAPULIYANKULAM,
VAVUNIYA

Thimothi - 0766 58 23 29
Nelum - 0245 11 81 81

On View - 08th ,09th & 10th December
(Please refer the Udayan On 06th of December 2018 For the Full List Of Vehicles)

LOLC FINANCE

SCHOKMAN & SAMERAWICKREME
One Country. One Auctioneer. Celebrating 126 Years of Service Excellence.

Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593,
Fax: 081 2224371
Email: schokmankandy@sltnet.lk

City Office & Showroom:
No.6A, Fairfield Gardens, Colombo 8.
Tel: 011 2502680, 2585408,
Tel / Fax: 011 2588176
Email: schokman@samera1892.com
Web: www.sandslanka.com
D.ads

# வவுனியா சிவன் கோவிலில் உண்டியல் உடைத்து திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ 10

வவுனியா சிவன் கோவிலில் உண்டியல்கள் உடைக்கப்பட்டுத் திருடப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. உண்டிலில் எவ்வளவு பணம் இருந்தது என்று தெரியவரவில்லை.

வவுனியா, கோவில்குளம் சிவன்கோவில் மற்றும் ஆலயத்தின் சிறுவர் விடுதி ஆகியவற்றில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வவுனியா தலைமைப் பொலிஸ் நிலயகுற்றத்தடுப்புபிரிவில்முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது. ஆலயத்தை மூடிவிட்டு சென்ற நிர்வாகத்தினர் மறுநாள் பூசைவழிபாடுகளுக்காகநேற்றுக்காலைமீண்டும்வந்து பார்த்த போது உண்டியல்கள் திருட்டுபோயுள்ளமை தெரியவந்துள்ளது.

வவுனியா பொலிசாருக்கு தகவல் தெரியபடுத்தபட்டது. சம்பவஇடத்துக்கு மோப்பநாய்கள்சகிதம்விரைந்தபொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

ஆலயத்தின் வெளிவீதியில் அமைந்துள்ள பிள்ளையார் சிலைக்கு முன்பாகஇருந்தஉண்டியலும் ஆலயத்திற்குள் வைக்கபட்டிருந்தமற்றுமொருஉண்டியலுமேஉடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளன. அருகில் உள்ள ஆலயத்தின் சிறுவர் இல்லத்தில் இருந்துபுதிய ஆடைகளும்திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

திருடப்பட்ட இரண்டு உண்டியல்களும் உடைக்கபட்டு அதில் இருந்து பணம் எடுக்கபட்ட நிலையில் ஆலயத்திற்கு அருகே காணப்படும் கேணியடியில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. திருடப்பட்ட புதிய ஆடைகளில் சிலவும் அதே இடத்தில்போடப்பட்டிருந்தன. இரண்டுஉண்டியல்களும் கடந்த 6 மாதமாக திறந்து பணம் எடுக்கப்படாமல் இருந்ததாகஆலயநிர்வாகத்தனர்தெரிவித்தனர். சம்பவம்தொடர்பான விசாரணைகளை வவுனியா குற்றத் தடுப்புப்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ.7.110)



## ஓ.எல். பரீட்சையில்...

கைதுசெய்யப்பட்டுநீதிமன்றத்தால்பிணையில்விடுவிக்கப்பட்டிருந்தார். இவ்வாறானதொரு நிலையில் கிளிநொச்சியில் அதேபோன்றதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரதிபுரத்தில் பாடசாலை பரீட்சை மண்டபத்தில் 43 வயதான தனியார் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை எழுதுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. முதல் நாள் சமய பாடத்துக்கு அவர் பரீட்சைக்குத் தோற்றவில்லை. மறு நாள் தமிழ் பாடப் பரீட்சைக்கு பரீட்சார்த்தி ஒருவர் சமூகமளித்திருந்தார். அவரது தோற்றம் 43 வயதை ஒத்ததாக இல்லை. முதல் பகுதி பரீட்சை வினாத்தாள் விநியோகிக்கப்பட்டது.

அதன்பின்னர்அவரதுஅடையாளத்தைஉறுதிப்படுத்தும் ஆவணங்கள் உள்ளிட்டன, பரீட்சை மேற்பார்வையாளரால்பெற்றுக்கொள்ளப்பட்டன. மாவட்டபரீட்சைமேற்பார்வையாளருக்கு அது தொடர்பில் அறிவிக்கப்பட்டது. அவர்கள் விசாரணை செய்வதற்காக பரீட்சை மண்டபத்துக்கு வந்தபோது, பரீட்சார்த்திஇரண்டாம்பகுதிவினாத்தாளுக்கு விடையளிக்காமலே அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

இருப்பினும்இந்தச்சம்பவம்தொடர்பில்கல்வித்திணைக்கள அதிகாரிகள் தொடர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (5.105)

## நிலமையைக்...

தீர்ப்பைவழங்கினாலும்அதனைஏற்றுக்கொண்டுசெயற்படுத்துவேன். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவையில்நேற்றுக்காலைஇடம்பெற்றநிகழ்வொன்றில்கலந்துகொண்டுஉரையாற்றும்போதேஅரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றுஅனைவரும்நீதிமன்றத்தின்தீர்ப்பைஎதிர்பார்த்திருக்கின்றனர். தலைமைஅமைச்சர்மற்றும்அமைச்சுகள் உள்ளபோதிலும்அமைச்சுகள்செயற்படமுடியாதுள்ளன. நாட்டின்நிர்வாகப்பொறுப்புதனிஒருவராகஅரசதலைவருக்குவழங்கப்பட்டுள்ளது. ஆனால், அதுதொடர்பில்நான் ஒருபோதும் மகிழ்ச்சியடையவில்லை.

ஜனநாயகத்தை சக்திமிக்கதாக மாற்றும் நாட்டில், தனியொருவரின் நிர்வாகம் நாட்டுக்கு அவசியமில்லை. தலைமைஅமைச்சர்மற்றும்அமைச்சர்களின்நிர்வாகம் இன்றிநான்மிகவும்பொறுப்புடன், பொறுமையாகநடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றேன். நீதிமன்றம் இந்த நிலைமையைப்புரிந்துகொண்டு, ஜனநாயகத்தை சக்திமிக்கதாக மாற்றுவதற்கும் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் வரவுசெலவு திட்டத்தை சமர்ப்பிபதற்கும் ஏதுவான தீர்ப்பொன்றை வழங்கும் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

நீதிமன்றத்தின் எந்தவொரு தீர்ப்பையும் நான் ஏற்றுக் கொள்வேன். தீர்ப்புக்கு அமைய எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுப்பேன். அமைச்சுகளின்செயற்பாடுகள் நிறுத்தப்பட்டாலும், முப்படையினர் தமது சேவையை சிறப்பாக முன்னெடுக்கின்றனர் - என்றார்.

அரச தலைவர் நாடாளுமன்றத்தைக் கலைத்து வெளியிட்ட அரசிதழ்அறிவிப்புக்குஎதிராகதாக்கல்செய்யப்பட்ட மனுக்கள்மீதானவிசாரணைமுடிவடைந்துள்ளது. உயர் நீதிமன்றம் தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்துள்ளது. இவ்வாறானதொரு நிலையிலேயே அரச தலைவர் மைத்திரிபால மேற்கண்டவாறு கூறியுள்ளார். (5)

## பைத்தியக்காரனை...

அந்த நிலமைக்குப் போய்விட்டார் என்பதை நினைத்து, அவருக்குவாக்களித்தமக்கள்ஏமாற்றம்அடைந்துள்ளார்கள். மக்கள் இன்று கடும் கொதிப்பில் இருக்கின்றார்கள். அவர்களே, மைத்திரிபாலவை ஓட ஓட விரட்டியடிக்கும் காலம்நெருங்கிவிட்டது. இவ்வாறு ஐக்கியதேசியமுன்னணியின்நியமனநாடாளுமன்றஉறுப்பினர்பீல்ட்மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

'பொதுவெளியிலும், நாட்டின்அதியுயர்சபையான நாடாளுமன்றத்திலும் வைத்து அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேன மனநோயாளி என்று கூறியுள்ளீர்களே! இது சரியா?' என்று வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றின் இலங்கைசெய்தியாளர்சரத்பொன்சேகாவிடம் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சர்வாதிகாரி. இதை அவர் இன்று வெளிப்படையாகவே நிரூபித்துக் காட்டுகின்றார். அவரின் அராஜகச் செயல்கள் விரைவில் அடங்கும். அவர் அண்மையில் ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களிடம் கூறியது போன்று தனது அரச தலைவர் பதவியைத் துறந்து விட்டு சொந்தஊரானபொலனறுவைக்குச்சென்று விவசாயம் செய்வதே பொருத்தமானதாக இருக்கும். அந்த நிலைமையை அவரே இன்று உருவாக்கியுள்ளார். அவருக்கு மன்னிப்புவழங்கநாமும்நாட்டுமக்களும்தயாராக இல்லை" என்றார் பொன்சேகா. (5)



# கஜேந்திரகுமாரை சமாளித்து தமிழ் பேரவைக்குள் ஈபிஆர்எல்எவ், புளொட்டை தக்க வைக்க முயற்சி

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தைச் சமாளித்து ஈபிஆர்எல்எவ், புளொட் அமைப்புக்களை தமிழ் மக்கள் பேரவையில் தக்கவைத்துக் கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து கஜேந்திரகுமாருடன் பேசுவதற்கு ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் பேரவையில் இருந்து ஈபிஆர் எல்எவ், புளொட் கட்சிகளை வெளியேற்ற வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார் கஜேந்திரகுமார். அதற்கு அந்த இருகட்சிகளின் தலைவர்களும் பதில் கடிதங்களையும் பேரவையிடம் வழங்கியிருந்தனர். நேற்று நடந்த பேரவைக் கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப்பட்டது. அதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரான சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் மக்கள் பேரவையில் புளொட் மற்றும் ஈபிஆர்எல்எப் ஆகியன அங்கம் வகிக்கும் அதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை - என்றார்.

தமிழ் மக்கள் பேரவையின் 14ஆவது கூட்டம் யாழ்ப்பாணம் கந்தர்மடச் சந்தியில் உள்ள அதனது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் பேரவைக்குள் இத்தனை நாள்களாக இருந்துவந்த கருத்துவேறுபாடுகள் மிக விரைவில் நீங்கும் என நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அதாவது எழுத்துமூலமாக பேரவையின் கொள்கை, யாப்பு எதுவும் இல்லாத படியால் அடுத்த கூட்டத்துக்கு முன்னர் அவற்றை ஆவணமாக்க தீர்மானித்துள்ளோம். பேரவையில் உள்ளவர்களுக்கு என பொதுவான கொள்கை ஒன்றை உருவாக்குவது என யோசித்துள்ளோம். மேலும் தமிழ் மக்கள் பேரவையில் புளொட் மற்றும் ஈபிஆர்எல்எப் ஆகியன அங்கம் வகிக்கும் அதில் எந்த மாற்றமும் வராது - என்றார்.

"தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொடுத்த முறைப்பாட்டுக்கு ஈபிஆர்எல்எவ் மற்றும் புளொட் இரண்டு தரப்புக்களும் விளக்கங்களை கொடுத்திருந்தன. எமது விளக்கங்களை ஏற்று இந்த பிரச்சினை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும் என்ற முடிவு எட்டப்பட்டுள்ளது" என்றார் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

முன்னதாக, இந்த விவகாரம் பேரவையில் விவாதிக்கப்பட்டபோது, கஜேந்திரகுமார் தெரிவித்த குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலாக சுரேஸ் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் முன்னணியின் செயலாளர் கஜேந்திரன் தனது சகோதரனை விடுவிக்க கோத்தபாய ராஜபக்சவுடன் நெருக்கமான உறவைப் பேணினார் என்பதற்கு ஆதாரம் இல்லாதபோதும் ஏனைய பல குற்றச் சாட்டுகள் நம்பகத் தன்மையானவையாகவே உள்ளன. அதேபோன்று சித்தார்த்தன் வழங்கிய பதிலும் உண்மையாகவே உள்ளது. ஆராய்ந்தால் தவறுகள் சகல பக்கத்திலும் உள்ளன. இதனால் நடந்து முடிந்ததைத் தவிர்த்து பேரவைக்கு என்று தனியான யாப்பு ஒன்றை உருவாக்கி அதன் மூலம் செயல்படுவதே சிறந்தது. இதனால் பேரவை தொடர்ந்தும் யாப்பின்றி செயல்படாது யாப்புத் தயாரிக்க வேண்டும் எனத் தெரிவித்தார் விக்னேஸ்வரன்.

இருந்தாலும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குழு ஒன்றை அமைத்து விசாரிக்க வேண்டும் என்று பேரவை உறுப்பினர்கள் சிலரும் வெளிநாடுகளில் இருந்து ஸ்கைப் ஊடாகப் பேசியவர்கள் சிலரும் வலியுறுத்தினார்கள்.

சுரேஸ்பிரேமச்சந்திரன் தனது கருத்தில், இந்த விடயத்தில் விக்னேஸ்வரன் தெரிவித்த பதிலுக்குத் தாம் இணங்குவார் எனவும். அல்லது குழு ஒன்றை நியமித்து தொடர்ந்தும் ஆராய்வதுதான் முடிவு என்றால் அதனையும் ஏற்பதாகவும் கூறினார். ஆனால், கூட்டமைப்பு தவறு விடுகின்றது, மக்கள் சார் பணிகள் எவ்வளவோ இருக்கும் நிலையில் அதனை நிறைவேற்றாது தேவை அற்ற விடயங்களில் கவனம் செலுத்துகின்றது. எனவே கூட டமைப்புக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலும் மக்கள் பிரச்சிணையை உடனுக்குட்ன் உரிய இடத்துக்குக்கொண்டுசெல்வதற்காகவும் எனத் தெரிவித்தே பேரவை உருவாக்கப்பட்டது.

ஆனால் தற்போது குழுவை நியமித்து பேரவையில் இருப்போர் எதனைச் செய்யவில்லை. இதில் யார் விட்டது தவறு என்பதனைக் கண்டறிவதில்தான் எமது காலம் போகப்போகின்றது என்றால் அதற்கும் நாம் மறுப்பில்லை. என் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

(உ-8,105)



# புதுமாத்தளன் கடற்கரையில் கரை ஒதுங்கியது திமிங்கலம்

முல்லைத்தீவு புதுமாத்தளன் கடற்கரையில் உயிரிழந்த திமிங்கலம் ஒன்றின் சிதைந்த உடல் நேற்றுக் கரையொதுங்கியது.

சுமார் 30 அடி நீளம் கொண்ட திமிங்கலத்தின் உடலில் அடிபட்ட காயம் காணப்படுவதாக அதனை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். சரக்குக் கப்பல்களுடன் மோதுண்டு காயமடைந்தமையால் அது இறந்திருக்கலாம் என்று அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

பொலிஸார் திமிங்கலத்தைப் பார்வையிட்டு அதனைப் புதைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

திமிங்கலத்தின் உடல் உருக்குலைந்து, சிதைந்துபோயிருப்பதாலும் துர்நாற்றம் வருவதாலும் அருகில் சென்று அதனைப் பார்க்க முடியவில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

(உ-ரி3)

# சபரீசஐயப்பனுக்கு நேற்றுத் தேர்



*கோண்டாவில் ஈழத்துச் சபரிமலை சபரீசஐயப்பன் கோவில் தேர்த் திருவிழா நேற்று சிறப்பாக நடைபெற்றது. ஐயப்பன் விரதம் தற்போது கடைபிடிக்கப்படுவதால், பக்தர்களுக்கு இந்த தேர்த் திருவிழா சிறப்பானதாக அமைகிறது. நேற்று நடைபெற்ற தேர்த்திருவிழாவில் அதிகளவான பக்தர்கள் கலந்து கொண்டனர். (7)*

# தன் அலுவலகத்திலிருந்து வெளியேறினார் ராஜபக்ச

கொழும்பு,டிசெ.10

தலைமை அமைச்சர் செயலகத்திலிருந்து மகிந்த ராஜபக்ச வெளியேறிவிட்டார் என்று கூட்டு எதிரணி அறிவித்துள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட மகிந்தவும், புதிய அமைச்சரவையும் செயற்படுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்களால் தாக்கல்செய்யப்பட்ட மனுக்களை விசாரணைக்குஎடுத்த பின்னரே இவ்வாறு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.


நீதிமன்ற தீர்ப்புக்கு மதிப்பளிக்கும் வகையில் தலைமை அமைச்சர் செயலகத்திலிருந்து மகிந்த வெளியேறினார் என்றும் ஆனால் ரணில் விக்ரமசிங்க தற்போதும் தலைமை அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகையில் தங்கியிருக்கிறார், இது பற்றி எவரும் கண்டுகொள்வதில்லை என்றும் கூட்டு எதிரணி உறுப்பினர்கள் தெரிவித்தனர். நாட்டின் சட்டத்தை ரணில் மதிப்பாரானால் அலரிமாளிகையைவிட்டு ரணில் விக்கிரமசிங்க உடன் வெளியேறவேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர். (உ-ரி)

# வீதி சீரமைக்கும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ10

அராலி மத்தி கணவத்தை வீதியைச் சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. நீண்டகாலமாக சீரமைக்கப்படாமல் இருந்த 400 மீட்டர் நீளமான இந்த வீதியை, தார் வீதியாக மாற்றுவதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது. 2 மில்லியன் ரூபா செலவில் இந்த வீதி சீரமைக்கப்படவுள்ளது. நேற்று நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வலிகாமம் மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் த.நடனேந்திரன், சபை உறுப்பினர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (7)





# தினம் ஒரு டம்ளர் திராட்சைப் பானம் குடிப்பதால் கிடைக்கும் நன்மைகள்!

அனைவரும் விரும்பிச் சாப்பிடும் திராட்சை பழத்தை பழமாகச் சாப்பிடுவதை விடப் பானமாக்கிக் குடித்தால், இந்தப் பழத்தின் முழுச் சத்துக்களையும் பெறலாம்.

தினமும் காலையில் ஒரு டம்ளர் திராட்சை பழப் பானத்தைக் குடிப்பதனால் கிடைக்கும் நன்மைகளை இப்போது காண்போம்.

**நோய்_எதிர்ப்பு சக்தி**

திராட்சையில் விற்றமின் C இருப்பதால், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்கிறது.

**மாரடைப்பு**

தினமும் திராட்சைப் பானத்தைக் குடிப்பதால், இதயத்தில் ஏற்படும் அடைப்பை தடுத்து, மாரடைப்பு வர விடாமல் பாதுகாக்கிறது.

**மெட்டாபாலிசம்**

சிவப்பு திராட்சைப் பானம் குடிப்பதால், உடலின் மெட்டாபாலிசம் பன்மடங்கு அதிகரிக்கச் செய்கிறது.

**குருதி அழுத்தம்**

திராட்சையில் உள்ள ப்ளேவோனாய்டுகள், ஆன்டிஆக்ஸிடன்டுகள் போன்றவைகள் ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தி, குருதி ஓட்டத்தை சீராக்குகிறது. மேலும் குருதியில் உள்ள டாக்ஸின்களை வெளியேற்றி, குருதியைச் சுத்தப்படுத்துகிறது.

**உடல் எடை**

தினமும் உடற்பயிற்சி செய்து முடித்த பின், ஒரு டம்ளர் திராட்சை ஜூஸை குடித்து வந்தால், கலோரிகள் மற்றும் கொழுப்புகள் கரைக்கப்பட்டு உடல் எடையை குறையும்.

**ஒற்றைத்தலைவலி**

திராட்சைப்பானத்தில் சீனி சேர்க்காமல் குடித்து வந்தால் ஒற்றைத்தலைவலி காணாமல் போய்விடும்



**இது புதுசு**

பெண்களுக்காகப் புதிதாக கைப்பைகள் அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 399 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.



# மாதுளை

மாதுளை வயதான தோற்றத்துக்கான பண்புகளை, தோலின் உட்புறமும், வெளிப்புறமும் புத்துணர்ச்சி ஊட்டுவதின் மூலம் எதிர்க்கிறது.

சூரிய ஒளியில் எமது உடலின் தொடர்ந்து வெளிப்படுவதன் காரணமாக ஏற்படும் வயதான தோற்றாத்திற்கான அறிகுறிகளைக் குறைப்பதன் மூலம் முன்கூட்டிய வயதான தோற்றத்திலிருந்து எம்மை நல்ல உணவுகள் பாதுகாக்கின்றன.

மாதுளை சருமத்துக்கு அழகு சேர்க்கும் கொலஜனைப் பராமரிக்க உதவுகிறது. மேலும் எம்முடைய சருமத்தை நீண்ட காலத்துக்கு ஆரோக்கியமாக வைக்கிறது.

# கொத்தமல்லி இலையின் நன்மைகள்

☆ கொத்தமல்லி இலைகள் பல்வேறு உணவுவகைகளில், பயன்படுத்தப்படுவது மட்டுமன்றி, உடல் நலத்துக்குத் தேவையான அனைத்து சத்துக்களும் அடங்கியுள்ளன. மேலும், மாச்சத்து, புரதச்சத்து, கொழுப்புச்சத்து, நார்ச்சத்து மற்றும் நீர்ச்சத்துக்கள் போன்றவற்றையும் இது உள்ளடக்கியுள்ளது.

☆ புதிய கொத்தமல்லி இலைகளில் விற்றமின் சி, விற்றமின் ஏ, ஆன்டிஆக்ஸிடன்ட்டுகள் மற்றும் பாஸ்பரஸ் போன்ற கனிமச் சத்துக்கள் நிறைந்துள்ளன. இவை கண் சம்மந்தப்பட்ட நோய்களை குணமாக்கும் தன்மை உடையவை.


☆ கொத்தமல்லி இலைகளை நன்கு அரைத்து, தண்ணீரில் கொதிக்கவிட்டு, அதனை மெல்லிய சுத்தமான துணியால் வடிகட்டி வைத்துக் கொண்டு, இந்த நீரின் சில சொட்டுக்களை கண்களில் விடுவதால், கண் எரிச்சல், கண் உறுத்தல், கண் வலி ஆகியவை குணப்படுவதோடு, கண்களில் நீர் வடிதலும் நிற்கும்.


☆ கொத்தமல்லி இலையில் நிறைந்துள்ள வாசனை எண்ணெயான சிட்ரோநெல்லோல், சிறப்பான கிருமிநாசினித் தன்மை கொண்டுள்ளது. எனவே இது வாயிலுள்ள புண்களை ஆற்றுவதோடு, அது வராமலும் தடுக்கும்.

☆ கொத்தமல்லி இலைகளுக்கு பூஞ்சைகளை நீக்கும் சக்தியும், நச்சுக்களை நீக்கும் ஆற்றலும், தொற்றுக்களை நீக்கும் ஆற்றலும் உண்டு. சிறந்த கிருமி நாசினியாகவும் பயன்படுகிறது. இதன் காரணமாக சில சரும நோய்களை நீக்குவதில் இது மிகவும் உதவிகரமாக உள்ளது. மாதவிடாய் காலத்தில் பெண்களுக்கு உண்டாகும் வலியை குறைக்கிறது. முறையான மாதவிடாய் சுழற்சி உண்டாக உதவுகிறது.

☆ கொத்தமல்லி இலைகள் நரம்புகளை ஊக்குவிக்கும் ஒரு நல்ல மருந்தாக உள்ளது. இது மறதியை கட்டுபடுத்தி நினைவாற்றலை அதிகரிக்க செய்கிறது. கொத்தமல்லி இலைகள் வாயிலுள்ள புண்களை ஆற்றுவதோடு, அது வராமலும் தடுக்கும். மேலும் சுவாசத்தை ஃப்ரெஷ் ஆக்குவதோடு, வாய்ப் புண்களை நன்கு குணப்படுத்தும் தன்மைகொண்டது.

☆ உயர் குருதி அழுத்தம் உள்ளவர்கள், கொத்தமல்லி இலைகளை உணவில் சேர்த்துகொள்வதால், குருதி அழுத்தம் குறைவதாக நிரூப்பிக்கப்பட்டுள்ளது. கொத்தமல்லியை ஜூஸ் போட்டு குடிப்பதால், உடம்பிலுள்ள தேவையற்ற கெட்ட கொழுப்புகளை நீக்கி உடல் எடையை குறைக்க உதவுகிறது.





# கணினி விசைப்பலகையும் கிருமிகளும்...

சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும், கழிவறையைப் பயன்படுத்திய பிறகு, குப்பைகளைச் சுத்தம் செய்த பிறகு எனத் தேர்ந்தெடுத்த சில வேலைகளைச் செய்யும்போது மட்டும் சுத்தமாக இருக்க வேண்டுமென எதிர்பார்த்து இப்படி செய்கிறோம். அதே நேரம் கணினியையோ, கைபேசியையோ பயன்படுத்திய பிறகு நாம் கைகளை கழுவுகிறோமா? அதற்கும் சுத்தத்துக்கும் என்ன சம்பந்தம்? என்று நினைக்கலாம்.

ஆனால், கழிப்பறையைவிட ஆறு மடங்கு அதிகமான கிருமிகள் நாம் தினசரி பயன்படுத்தும் கணினியிலும் கைபேசியிலும் இருப்பதாக ஆராய்ச்சிகள் சொல்கின்றன. கணினி விசைப்பலகைப் பாக்டீரியா இருப்பதே தெரியாமல், நாமும் அதன்மீது விரல்களை நடனமாட விடுவோம். பிறகு அதே கையுடன் கைபேசியை எடுத்துப் பேசுவோம். கண்ணை கசக்குவோம். சிலசமயம் கணினியில் தானே வேலை பார்க்கிறோம் என்று அசட்டையாகக் கைகழுவாமல் சாப்பிட்டும் விடுவோம். கீபோர்டில் இருந்த கிருமிகள் அப்போது நம் உடலுக்குள் புகுந்து, தங்கள் வேலையைக் காட்டத் தொடங்கிவிடும்.

லண்டனில் ஓர் அலுவலகத்தில் இருந்த விசைப்பலகைப் பரிசோதனைக்கு உட்படுத்தினார்கள். அதில் ஒரு கணினியில் அதிகமான கிருமிகள் இருந்திருக்கின்றன. பெரும்பாலான விசைப்பலகைகள் பயன்பாட்டுக்குத் தகுதி இல்லாத அளவில் கிருமிகளின் கூடாரமாக இருந்திருக்கின்றன. தனிநபர் சுத்தமாக இருக்கும் பழக்கத்தைப் பொறுத்தே, கணினியில் கிருமிகள் சேர்வதும் அமைகிறது.

பலர் கழிப்பறையை பயன்படுத்திய பிறகு கைகளைச் சரியாகச் சுத்தம் செய்வதே இல்லை. இன்னும் சிலர் கம்ப்யூட்டரின் முன்னால் அமர்ந்துகொண்டு கைக்குட்டையால் முகத்தை மூடாமல் இருமுவதும், தும்முவதும் சகஜம். இதுபோன்ற பழக்கங்களாலும் கீபோர்டில் கிருமிகள் பெருகும்.

அலுவலகத்தில் யாருக்காவது சளியோ, இரைப்பை குடல் அழற்சியோ இருந்தால், அவர் பயன்படுத்திய விசைப்பலகையையோ மவுஸையோ நாமும் பயன்படுத்தினால் போதும். அவருடைய நோய்கள் நமக்கும் எளிதாக தொற்ற வாய்ப்பாகிவிடும். குறிப்பிட்ட கால இடைவெளியில் விசைப்பலகை, மவுஸ், செல்போன் ஆகியவற்றை சுத்தப்படுத்த வேண்டும். கீ போர்டைத் தலைகீழாகக் கவிழ்த்து மெதுவாகத் தட்டுவதன் மூலம் அதனுள்ளே சிக்கியிருக்கும் உணவுத் துணுக்குகளையோ, சிறிய குப்பையையோ அகற்றலாம். மெல்லிய துணியின் மூலம் இவற்றைத் துடைத்தெடுக்கலாம்.

# இயற்கைச் சமநிலையை சீர்குலைக்கும் வெப்பமாதல்

மணிமாறன்



பூகோள வெப்பமாதலுக்கு இரண்டு முதன்மைக் காரணங்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை பச்சைவீட்டு வாயுக்களின் அதிகரிப்பு மற்றும் ஓசோன் படையில் ஏற்படுகின்ற துவாரங்களாக அமைவு பெற்றுள்ளன.

**பச்சைவீட்டு வாயு அதிகரிப்பு!**

பூகோளச் சூழல் நடவடிக்கைகளில் பச்சைவீட்டுத்தாக்கமும் ஒன்றாகும். பச்சைவீட்டுத் தாக்கமானது பூமி அதிகளவில் வெப்பமடைவதால் நிகழ்கிறது. இந்தத் தாக்கம் பச்சைவீட்டு விளைவு என அழைக்கப்படும். சுருக்கமாகச் சொல்வதெனில் புவிச் சூழலின் புற வெப்பம் அதிகரிப்பதையே குறிக்கும். இத் தாக்கம் பற்றி முதன் முதலில் 1827 ஆம் ஆண்டு 'பரோன் ஜீன் பாஸ்டிஸ்ட் ஃபிரெரரின்' என்பவரால் விவரிக்கப்பட்டது. இத்தாக்கமானது பூமியை வெப்பமாக்கும் பச்சைவீட்டு வாயுக்களின் பொறிமுறைச் செயற்பாடாகக் காணப்படுகிறது.

**ஞாயிற்றுச் சமநிலை! சூரியனில் இருந்து பெறப்படும் கதிர் வீச்சு**

வளிமண்டலத்தை ஊடறுத்துப் புவி மேற்பரப்பை அடைகின்றது. இவ்வாறு ஊடறுத்துப் புவி மேற்பரப்பை அடையும் குற்றலைக் கதிர் வீசலானது, 'உறிஞ்சல், தெறித்தல், சிதறல்' போன்ற செயன்முறைகளுக்கு உட்பட்டு சமுத்திரம், நிலம், தாவரப்போர்வை என்பனவற்றை வெப்பமாக்குகிறது. பின்னர் அது நெட்டலைக் கதிர்வீச்சாகப் பூமியை விட்டு வெளியேறுகின்றது. இது ஒரு சமனிலையில் நிகழ்வதால் இதை 'ஞாயிற்றுச் சமநிலை' என்பர். ஆனால் இன்று ஞாயிறிலிருந்து உள்வரும் மற்றும் வெளிச் செல்லும் சக்தியானது வளிமண்டலத்திலுள்ள பச்சைவீட்டு வாயுக்களால் உறிஞ்சப்படுகிறது. இதனால் புவி வெப்பமடைகிறது.

இயற்கையாகவும், செயற்கையாகவும் தோற்றுவிக்கப்படும் பச்சைவீட்டு வாயுக்கள் புவியில் பாதகமான விளைவுக ளைத் தோற்றுவிக்கின்றன. வளிமண்டலத்தில் கடந்த 200 வருடங்களாகப் பச்சைவீட்டு வாயுக்களின் சேர்க்கையானது மனித நடவடிக்கைகளால் அதிகரித்து வருவதாகக் கூறப்படு கின்றது. 1980 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் படி பச்சைவீட்டு வாயுக்களின் வீதமானது பின்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளது. காபனீர்ஒக்சைட் 55 வீதம், குளோரோபுளோரோ காபன் - 24 வீதம், மெதேன் - 15 வீதம், நைதரசன் ஒக்சைட் 6 வீதமாக இருந்தது. கைத்தொழில் மயமாக முன்பு 1992 ஆம் ஆண்டு காபனீர்ஒக்சைட்டின் சேர்க்கையானது '288 பி.பி.எம்.வி' (பாட்ஸ் பேர் மில்லியன் வெல்யூம்) ஆக இருந்தது. ஆனால் 2000 ஆம் ஆண்டில் இது '370 பி.பி.எம்.வி' என மதிப்பிடப்பட்டது. இந்த மாற்றமானது பூகோளம் சூடாகவே வழி வகுத்துள்ளது.

**ஓசோன் படையில் ஏற்படும் துவாரங்கள்**

சூரியனின் கதிர்களில் உயிர்ச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய புற ஊதாக் கதிர்களும், அகச்சிவப்புக் கதிர்களும் புவியை வந்தடையாத வண்ணம் அவற்றை உறிஞ்சி எடுத்துக் கொண்டு உயிர்ச்சூழலுக்கு நன்மை பயக்கக் கூடிய கதிர்களைத் தேவையான அளவு புவிக்கு வழங்குகின்ற ஒரு படலமே ஓசோன் படை ஆகும். இந்த ஓசோன் படையில் ஏற்பட்டுள்ள துவாரங்களே இன்று மனிதன் எதிர்நோக்குகின்ற மிகப்பெரிய பிரச்சினைகளில் ஒன்றாகும்.

இந்த ஓசோன் படையானது மாறன் மண்டலத்துக்கும், படைமண்டலத்துக்கும் இடையே 12 கிலோ மீற்றர் தொடக்கம் 45 கிலோ மீற்றர் வரையான பிரதேசத்தினுள் பரந்துள்ள மென் படை எனலாம்.

இந்த ஓசோன்படை அமைந்துள்ள மாறன் மண்டலமே புவியின் வானிலை, காலநிலை நிலமைகளுக்கு முக்கியமானதாகும்.

அறிவியலின் அசுத்தமான வளர்ச்சி வளிக்குச் சொந்தமில்லாத பல புதிய இரசாயனங்களை வளிமண்டலத்தினுள் திணித்துக் கொண்டு இருக்கின்றது. குளோரோ புளோரோ காபன்களுக்கு இதில் முக்கிய பங்குண்டு.

**அறிவு பூர்வமான பார்வை!**

இந்த ஓசோன்படை குறித்து அறிவு பூர்வமான பார்வை 1970 ஆம் ஆண்டுகளில் பிரித்தானிய ஆட்சியாளர்களால் அந்தாட்டிக்காப் பகுதியில் கண்டறியப்பட்டாலும் கூட, 1980 ஆம் ஆண்டுகளில் அந்தாட்டிக்கா கலிபே எனும் பகுதியில் ஓசோன் படையில் பெருமளவு துவாரம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், இங்கு உறைபனி காலத்தில் துவாரங்கள் தோன்றுவதாகவும் 'நிம்பஸ் 7' எனும் செயற்கைக் கோள் கண்டறிந்து வெளிப்படுத்தியது.

ஓசோன்படையை அழிக்கும் வாயுக்களான 'சி.எவ்.சி.என்.ரு.ஓ' போன்றவை வாயுப் படைமண்டலத்தில் பேணப்பட்டு வந்த ஓசோன்படையின் இருப்பை இல்லாதொழித்து வருகின்ற செயன்முறையே ஓசோன்படைச் சிதைவு என்கின்றோம். அதாவது படைமண்டலத்தில் ஓசோன்படையின் உற்பத்தியை விட அழிவு விரைவாக அதிகரித்து இயற்கைச் சமநிலையானது சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இத்தகைய ஈடுகொடுக்க முடியாத ஓசோன்படையின் இழப்பையே ஓசோன்படையின் துவாரம் என விஞ்ஞானிகள் அழைக்கின்றனர். தற்போது இதன் பருமன் 2.8 கோடி சதுர கிலோ மீற்றர் என மதிப்பிடப்பட்டுள்ளது.



**பேரிடர்களும் தாக்கமும்**


காலநிலை மாற்றங்கள் காரணமாக உயிர் கோளத்தின் மீதான தாக்கங்கள் கூடிக் கொண்டே செல்கின்றது. வளிமண்டலத்தில் ஏற்பட்ட சீரற்ற தன்மை காரணமாக உயிர்க் கோளமானது நிலைதடுமாறிக் கொண்டு இருக்கிறது. இதனால் பல விளைவுகளுக்கு பூமி முகம் கொடுப்பது மட்டுமல்லாது, முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அந்தவகையில் முதலாவது பிரச்சினையாகக் கொள்ள வேண்டியது வெப்பச் சமநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றமாகும்.

வெப்பநிலைத் தரவுகளை நோக்குமிடத்து பூமியின் வெப்ப நிலையானது படிப்படியாக அதிகரிப்பது தெளிவாகின்றது. எதிர்வருகின்ற 2100 ஆண்டளவில் புவியின் வெப்பநிலை 2 தொடக்கம் 5 பாகை செல்சியஸ் வரை அதிகரிக்குமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. வெப்பநிலை அதிகரிக்கும் போது அடிக்கடி சூறாவளிகள் ஏற்படும்.

இதற்குக் காரணம் சமுத்திரத்தின் வெப்பநிலை அதிகரித்து நீர் ஆவியாகின்றமையே. இதனால் குறிப்பிட்ட இடங்களில் தாழமுக்கம் ஏற்படுகின்றது. ஆகவே தாழமுக்கத்தை நிரப்ப உயரமுக்கப் பகுதியில் இருந்து தாழமுக்கத்தை நோக்கி காற்று வீசுகின்றது. இந்தச் செயற்பாடு தற்பொழுது அடிக்கடி நிகழும் ஒன்றாகி விட்டது. இதற்குக் காரணம் வெப்பநிலை அதிகரிப்பது தான் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

“பூகோளச் சூழல் நடவடிக்கைகளில் பச்சைவீட்டுத்தாக்கமும் ஒன்றாகும். பச்சைவீட்டுத் தாக்கமானது பூமி அதிகளவில் வெப்பமடைவதால் நிகழ்கிறது. இந்தத் தாக்கம் பச்சைவீட்டு விளைவு என அழைக்கப்படும். சுருக்கமாகச் சொல்வதெனில் புவிச் சூழலின் புற வெப்பம் அதிகரிப்பதையே குறிக்கும். இத் தாக்கம் பற்றி முதன் முதலில் 1827 ஆம் ஆண்டு 'பரோன் ஜீன் பாஸ்டிஸ்ட் ஃபிரெரரின்' என்பவரால் விவ ரிக்கப்பட்டது. இத்தாக்கமானது பூமியை வெப்பமாக்கும் பச்சைவீட்டு வாயுக்களின் பொறிமுறைச் செயற்பாடாகக் காணப்படுகிறது.”







## இரணைமடுவில்...

குளத்தின் நான்கு வான்கதவுகள் திறக்கப்பட்டன. இடது பக்கம் இரண்டு கதவுகளும், வலது பக்கம் இரண்டு கதவுகளும் திறக்கப்பட்டிருந்தன. அந்தப் பகுதிக்குள் பெருமளவான பொது மக்கள் குழுமியிருந்தனர். இதில் சில இளைஞர்கள் ஆழமான பகுதிக்குள் இறங்கி குளித்துக் கொடிண்டிருந்ததாக, அங்கு நின்ற பொது மக்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் சாவகச்சேரியிலிருந்து ஐந்து பேருடன் இரணைமடுவைப் பார்க்க வந்திருந்த இளைஞனும் இதில் குளிப்பதற்கு இறங்கிய போது நீரில் இழுத்துச் செல்லப்பட்டதாக மக்கள் தெரிவித்தனர். இளைஞனுடன் வந்திருந்த நண்பர்கள் அங்கு அழுதவாறு நின்றிருந்தனர். அந்தப் பகுதியில் நின்ற ஊடகவியலாளர்கள், அவர்களிடம் விவரங்களைக் கேட்டு கிளிநொச்சி பிரதிப் பொலிஸ்மா அதிபர், கிளிநொச்சி படைகளின் தலைமையகத்துக்கு உடனடியாகத் தெரியப்படுத்தினர். அவர்கள் அங்கு உடனடியாக வரவில்லை. இதற்கிடையில் அங்கு திறக்கப்பட்டிருந்த ஒரு பகுதி வான்கதவுகள் மூடப்பட்டன. இளைஞர்கள் சிலர் நீரில் இறங்கித் தேடுதல் நடத்தினர். ஒரு மணித்தியாலத்தின் பின்னர் இளைஞர்களால், உயிரிழந்த நிலையில் டிலக்சன் மீட்கப்பட்டார்.

இதற்கிடையில், இரணைமடுக் குளத்தின் வான்பாயும் பகுதிக்குள் பார்வையிட்டுக் கொண்டிருந்த சிறுமி நீருக்குள் தவறி வீழ்ந்த நிலையில் இளைஞர்களால் மயிரிழையில் காப்பாற்றப்பட்டுள்ளார்.

இரணைமடுக் குளம் கடந்த வெள்ளிக்கிழமை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் திறந்து வைக்கப்பட்டது. இரணைமடுக் குளத்துக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளமையால் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதனைப் பார்வையிடுவதற்கு ஆயிரக்கணக்கானோர் அங்கு வருகின்றனர். நேற்று ஞாயிற்றுக் கிழமை என்பதால் வழமைக்கு மாறாக அதிகளவானோர் அங்கு திரண்டிருந்தனர். (5,6,105,214)

## நாடாளுமன்றம்...

தலைமை அமைச்சரின் செயலராக இருந்த எஸ்.அமரசேகர, நிதி அமைச்சின் செயலர் எஸ்.ஆர்.அடிகல்ல, வர்த்தக மற்றும் நுகர்வோர் கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ விவகாரங்களுக்கான அமைச்சின் செயலர் வசந்த பெரேரா, வீடமைப்பு மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் செயலர் உபாலி மரசிங்க மற்றும் எஸ்.டி கொடிகார ஆகியோர் அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளோம்.

நாடாளுமன்ற உத்தரவாதங்கள் குழு, நிதிக் குழு, பொதுக் கணக்காய்வுக் குழு ஆகியவற்றின் முன்பாக அவர்கள் தோன்றி விளக்கமளிக்க வேண்டும்.

நாடாளுமன்றில் தலைமை அமைச்சர் மற்றும் அனைத்து அமைச்சு அலுவலகங்களுக்குமான நிதியை இல்லாமல் செய்யும் ஒரு தீர்மானத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றிய பின்னர் அமைச்சரகங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டனவா என்பது தொடர்பில் விசாரிக்க வேண்டும். முறைகேடுகள் இடம்பெற்றிருந்தால் நாடாளுமன்றக் குழுக்கள் அவற்றை கேள்விக்கு உட்படுத்துவதற்கு சட்ட அதிகாரம் கொண்டுள்ளன - என்றார். (5,10)

## தமிழர்கள்...

நாட்டில் அதிகரித்துச் செல்லும் அரசியல் நெருக்கடி தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி இலங்கை அரசியலில் பெரிய சதி நடவடிக்கை அரங்கேறியது. பதவியில் இருந்த தலைமை அமைச்சர் திடீரென நீக்கப் பட்டு மக்களால் தோற்கடிக்கப்பட்ட ஒருவர் புதிய தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவர் தலைமையில் புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டது.

புதிய அரசுக்கு பெரும்பான்மைப் பலம் இல்லாததையடுத்து அதைச் சமாளிக்கும் வகையில் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது. எனினும், புதிய அரசின் இலக்கு நிறைவேறாதையடுத்து நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகள் எல்லாம் அரசமைப்புக்கு முரணாக சட்டவிரோதமாக நாட்டின் அதியுயர் பதவியில் இருக்கும் அரச தலைவர் மைத்திரிபாலவினால் முன்னெடுக்கப்பட்டவையாகும். இந்தச் சர்வாதிகார சட்டவிரோத செயற்பாடுகள் அனைத்துக்கும் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

தற்போது நாட்டில் தலைமை அமைச்சர் இல்லை, அமைச்சரவை இல்லை. ஏன் அரசு கூட இல்லை. தற்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இராஜதந்திர ரீதியில் செயற்படுகின்றது. எந்தச் சலுகைகளுக்கும் நாம் அடிபணியமாட்டோம். குறுக்கு வழியில் , சதி நடவடிக்கை மூலம் மக்களின் ஆணைக்கு மாறாக ஆட்சிக்கு வருபவர்களை நாம் ஆதரிக்கமாட்டோம். இதனை நாம் பகிரங்கமாகவே தெரிவித்துவிட்டோம். நாட்டின் நற்பெயரைக் கருதி நாட்டு மக்களின் நலனைக் கருதி கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதிக்கு முன்னர் ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசிய முன்னணியிடம் ஆட்சியை மீளக் கையளிக்குமாறு அரச தலைவர் மைத்திரிபாலவிடம் நாம் கடிதம் மூலமாகவும், நேரிலும் வலியுறுத்தியுள்ளோம். அதேவேளை, ஐக்கிய தேசிய முன்னணி தலைமை அமைச்சர் பதவிக்கு பரிந்துரைக்கும் நபரை ஆதரிக்கவும் முடிவெடுத்துள்ளோம்.

அரச தலைவர் மைத்திரிபாலவின் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக இடைக்காலத் தடை விதித்துள்ள நீதிமன்றங்கள் விரைவில் நீதியான தீர்ப்பை வழங்கும். அந்தத் தீர்ப்புக்கு அரச தலைவர் மதிப்பளிப்பார். ஏனெனில், அவரால் இனிமேல் ஒன்றும் செய்யவே முடியாது. ஐக்கிய தேசிய முன்னணி மீண்டும் ஆட்சியமைக்க அரச தலைவர் அனுமதித்தே தீரவேண்டும்.

ஐக்கிய தேசிய முன்னணி தலைமையில் மீண்டும் அமையும் அரசிடம் எமது மக்கள் நலன் சார்ந்த கோரிக்கைகளை நாம் முன்வைப்போம். இராஜதந்திர ரீதியில் எமது உரிமைகளை இலக்குகளை வென்றே தீருவோம். எமது மக்கள் குழம்பாமல் இருக்க வேண்டும் - என்றார். (5)

## சம்பளம்...

மகிந்த தலைமையிலான அரசு செயற்படுவதற்கு இடைக்காலக் கட்டளையும் விதிக்கப்பட்டுள்ளது. இதனால் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம், அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் சிக்கல் ஏற்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்றது.

இவ்வாறானதொரு நிலையில், பந்துல குணவர்த்தன தெரிவித்ததாவது:

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவு, ஓய்வூதியம் மற்றும் சமூர்த்திக் கொடுப்பனவுகளை வழங்குவதில் எந்தவிதமான பிரச்சினைகளும் ஏற்படவில்லை. அவர்களுக்கான கொடுப்பனவை தொடர்ந்து கொடுப்பதில் எவ்வித சிக்கல் நிலையும் தோன்றாது.

நாடாளுமன்ற கலைப்புத் தொடர்பான அரசிதழ் அறிவித்தலுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு அமையுமாக இருந்தால் நாடு பாரதூரமான நெருக்கடியைச் சந்திக்க வேண்டிய சூழல் ஏற்படும். கட்டாயம் இடைக்கால கணக்கு அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும். இதேவேளை, அரசு இல்லாத காரணத்தால் வடக்கின் பாதுகாப்பை பலப்படுத்த அமைதிகாக்கும் படையினரை பணிக்கு அமர்த்துமாறு எதிர்தரப்பினர் குறிப்பிட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது. நாட்டின் பாதுகாப்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவரிடமே காணப்படுகின்றது. இடைக்கால அரசு வடக்கு கிழக்குத் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது - என்றார். (5,10)

## ரணிலிடம்...

இல்லை. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கொழும்பைத் தளமாகக் கொண்ட தமிழ் ஊடகத்துக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'ஐ.தே.மு அரசு ஆட்சியமைவதற்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளீர்கள். அதற்கு முன்னதாக வாய்மொழியிலான இணக்கப்பாடேனும் அந்தத் தரப்புடன் ஏற்படுத்தப்பட்டுள்ளதா?" என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, பிரதானமாக அரசியல் தீர்வு எவ்வாறு எத்தகைய காலப்பகுதிக்குள் அமைய வேண்டும் என்பது பற்றி பேச்சுக்களை நடத்தியுள்ளோம். ஆனால் அதுசம்பந்தமாக தற்போதைக்கு பகிரங்கமாக கூறுவதற்கு நாம் விரும்பவில்லை. அரசியல் தீர்வு குறித்த இறுதி வடிவம் வருகின்றபோது அது நியாயமாக இருந்தால் அதனை மக்கள் மத்தியில் முன்வைத்து நாம் தெளிவுபடுத்துவோம். அதற்கு முன்னதாக பகிரங்க கருத்துக்களை முன்வைத்து குழப்பங்களை ஏற்படுத்த வேண்டியதில்லை. குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு தென்னிலங்கையில் மட்டுமல்ல எம்மத்தியிலும் இருகின்றார்கள். அவர்களுக்கு நாம் தீனிபோட்டு விடக்கூடாது. என்று குறிப்பிட்டுள்ளார்.

'ஐ.தே.முவுடன் ஏதாவது ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளதா?" என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, நாம் ஐ.தே.கவுடன் எவ்விதமான ஒப்பந்தங்களையும் செய்யவில்லை. அவ்வாறான எந்தத் தேவையும் எமக்கு இல்லை. நாம் அனைவருடனும் பேசுகின்றோம். மகிந்தவுடன் பேசினோம். அவருடைய புதல்வர்கள் எனது வீட்டுக்கு வந்து பேச்சுக்களை நடத்தினார்கள். இவற்றையெல்லாம் பகிரங்கப்படுத்தி குழப்பங்களை ஏற்படுத்த வேண்டிய அவசியம் எமக்கு இல்லை - என்றார்.

சில தினங்களுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல, கூட்டமைப்புடன் ஐக்கிய தேசியக் கட்சி எந்தவொரு ஒப்பந்தமும் கைச்சாத்திடவில்லை என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## அரசியல்....

ஆங்கில ஊடகத்துக்குத் தெரிவித்துள்ளார். காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம் நீண்ட இழுபறியின் பின்னர் கடந்த பெப்ரவரி மாதம் உருவாக்கப்பட்டது. பணியகம் உருவாக்கப்பட்டவுடன் நாடு முழுவதும் உள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுடன் சந்திப்பு நடத்தப்பட்டது. இந்தச் சந்திப்புக்களின் பின்னர், கடந்த செப்ரெம்பர் மாதம் காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தால் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் இடைக்கால அறிக்கை கையளிக்கப்பட்டது. பல்வேறு பரிந்துரைகளை காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம் முன்வைத்திருந்தது.

இவற்றைச் செயற்படுத்துவதற்காக அமைச்சரவை உபகுழுவும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டு அதற்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியிருந்தது. இவ்வாறானதொரு நிலையில் கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி, தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்க நீக்கப்பட்டு மகிந்த ராஜபக்ச நியமிக்கப்பட்டிருந்தார். புதிய அமைச்சரவையும், மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பால் முடங்கியுள்ளது.

'அரசியல் நெருக்கடி காரணமாக காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தின் பணிகள் திட்டமிட்ட வேகத்தில் நடைபெறவில்லை. மந்த வேகத்திலேயே நகர்கின்றன" என்று மிராக் தெரிவித்துள்ளார். (5)

## இலங்கை...

தெரிவிக்கின்றன.

இந்திய மற்றும் அமெரிக்கப் பாதுகாப்பு ஒத்துழைப்புத் தொடர்பாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ஜேம்ஸ் மாட்டிஸ் உள்ளிட்ட உயர்மட்டத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளை நிர்மலா சீத்தாராமன் சில தினங்களுக்க முன்னர் சந்திப்புச் பேச்சு நடத்தினார்.

இந்தப் பேச்சுக்களின்போது இந்தோ பசுபிக் பிராந்தியத்தின் தற்போதைய நிலவரம் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன் கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதிக்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்குவாரங்கள் தொடர்பிலும், இரு நாட்டு அமைச்சர்களும், அதிகாரிகளும் தீவிரமாகக் கவனம் செலுத்தியுள்ளனர். (5)

## நோயாளர்...

வருகின்றது. யாழ்ப்பாணம் நகரப் பகுதியிலுள்ள மகளிர் பாடசாலையைச் சேர்ந்த மாணவி ஒருவர், டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதுவதற்கு கோரிக்கை விடுத்திருந்தார். மருத்துவமனை நிர்வாகம் அது தொடர்பான சாத்தியப்பாட்டை ஆராய்ந்திருந்தது.

பரீட்சைக்கு ஒவ்வொரு நாளும் நோயாளர் காவு வண்டியில் பரீட்சை மண்டபத்துக்கு வந்து மாணவி, பரீட்சை எழுதி முடிந்த பின்னர் மீளவும் நோயாளர் காவு வண்டியில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வட்டாரங்கள் இந்தத் தகவலை உறுதி செய்தன. (5,105)



## ஜோய் காருண்யா அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 10
மன்னார் பூப்பந்தாட்டச் சங்கத்தால் வடக்கு கிழக்கு மாகாணங்களின் ரீதியாக நடத்தப்பட்டுவரும் அமரர் முரளிதரன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான பூப்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பெண்கள் திறந்த பிரிவு ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஜோய் காருண்யா கிண்ணம் வென்றார்.

மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த வீராங்கனைகளான ஜோய் காருண்யா, கம்சாயினி இருவரும் மோதினார்கள். 21:18, 21:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார் காருண்யா. (ம-23)



# சென். பற்றிக்ஸ் அரையிறுதியில்

யாழ்ப்பாணம், டிசெ. 10
இலங்கைப் பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனம் 20 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையில் நடத்தும் த பப்பரே வெற்றிக் கிண்ணத்துக்கான தொடரில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு சாகிராக் கல்லூரி அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் தலா மூன்று கோல்களைப் பதிவுசெய்யதை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

அரையிறுதியாட்டங்கள் கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளன. அன்றையதினம் மாலை 5 மணிக்கு சென். பற்றிக்ஸ் தனது அரையிறுதி ஆட்டத்தில்ஹமிட் அல்குசைன்கல்லூரி அணியை எதிர்கொள்ளவுள்ளது. (ம-23)

## அரியாலை சுதேச திருநாளை முன்னிட்டு பல போட்டிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 10
அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு வடமாகாண ரீதியாக பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இவ்வற்றுக்கு ஆர்வலர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.


மென்பந்துத் துடுப்பாட்டம், ரி20 கடினப் பந்து துடுப்பாட்டம், இருமுறையிலுமான கரப்பந்தாட்டம், கடற்கரை கரப்பந்தாட்டம், கிளித்தட்டு, கபடி, வலைப்பந்தாட்டம், கயிறு இழுத்தல், இருபாலாருக்குமான பூப்பந்தாட்டம், பாடசாலைகள் மற்றும் கழகங்களுக்கு இடையிலான தடகளம் ஆகிய போட்டிகளே அவ்வாறு நடத்தப்படவுள்ளன.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகளும், விளையாட்டுக் கழகங்களும் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)


## மேரிஸை தோற்கடித்தது மொரகஸ்முல்ல

யாழ்ப்பாணம், டிசெ. 10
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் முதலாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மொகஸ்முல்ல அணி வெற்றிபெற்றது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து கொழும்பு மொரகஸ்முல்ல அணி மோதியது.

முதல் பாதியில் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பதிவுசெய்தன.
இரண்டாவது பாதியின் 23ஆவது நிமிடத்தில் மொரகஸ்முல்ல அணியின் சார்பில் கோலொன்று பதிவாக முடிவில் அந்த அணி 2:1 என்ற கோல் க்ணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



இலங்கை கால்பந்தாட்டச் சமேளனத்தின் 23 வயதுப்பிரிவு தேசிய கால்பந்தாட்ட அணிக்கு வீரர்களைத் தெரிவு செய்வதற்கான பயிற்சி முகாம் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பித்தது. இன்றுவரை இந்தப்பயிற்சி முகாம் தொடர்ந்து நடைபெறுகிறது. இலங்கை கால்பந்தாட்ட அணியின் தலைமைப் பயிற்சியாளர் பக்கீர் அலி வீரர்களுக்கு பயிற்சிகளை வழங்குகிறார். (ம-23)




## யாழ். வீரர் காண்டீபன் பூப்பந்தாட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 10
மன்னார் பூப்பந்தாட்டச் சங்கத்தால் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் ரீதியாக நடத்தப்பட்டுவரும் அமரர் முரளிதரன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான பூப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த காண்டீபன் வெற்றிபெற்றார்.

மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் காண்டீபனை எதிர்த்து மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மனோ மோதினார்.

21:08, 21:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார் காண்டீபன். (ம-23)




# ஆஸிக்கு இலக்காக 323 ஓட்டங்கள் இந்திய அணியின் பிடி ஓங்குகிறது

## இன்னும் 219 ஓட்டங்களுக்காக 6 இலக்குகளே கையிருப்பில்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் அந்த அணிக்கு 323 ஓட்டங்களை இலக்காக நிர்ணயித்தது இந்திய அணி. நேற்றைய நான்காம் நாள் முடிவில் ஆஸ்திரேலிய அணி 4 இலக்குகளை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது.


அடிலெய்ட் மைதானத்தில் கடந்த ஆறாம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சகல இலக்குகளையும் இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றது. புஜாரா அதிகபட்சமாக 123 ஓட்டங்களைக் குவித்தார். ரோகித் 37 ஓட்டங்களையும், பன்ட் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஹசில்வூட் 3 இலக்குகளையும், ஸ்ராக், கம்மின்ஸ், லயன் மூவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

கடந்த இன்னிங்ஸைப் போலவே இரண்டாவது இன்னிங்ஸிலும் பின்ஞ் இசாந் சர்மாவின் பந்துவீச்சில் தடுமாறினார். முதலாவது இன்னிங்ஸில் 'சில்லி பொயின்டால்' பவுண்டரி அடிக்க திட்டமிட்டு போல்ட் முறையில் ஆட்டமிழந்த பின்ஞ், இரண்டாவது இன்னிங்ஸிலும் 'சில்லி பொயின்டால்' சில தெரிவுகளை மேற்கொள்ள எத்தனித்தார். ஆனால் அனைத்திலும் தோல்வி கண்டார். ஒருமுறை இசாந் சர்மாவிடம் எல்.பி.டபிள்யூ. ஆன பின்ஞ் அது முறையற்ற பந்து என்பதால் தப்பித்தார்.




பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 235 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ஹெட் 72 ஓட்டங்களையும், ஹான்ஸ்கொம் 34 ஓட்டங்களையும், கவாயா 28 ஓட்டங்களையும் பெற்றனர். லயன் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். பந்துவீச்சில் பும்ரா, அஸ்வின் இருவரும் தலா 3 இலக்குகளையும், இசாந் சர்மா, சமி இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.





15 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்றுமுன்தின மூன்றாம் நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 151 ஓட்டங்களைப்பெற்றிருந்தது. புஜாரா 40 ஓட்டங்களுடனும் ரகானே ஓர் ஓட்டத்துடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக்களமிறங்கினார்கள். அரைச்சதம் கடந்தார் புஜாரா. புஜாரா-ரகானே கூட்டணி ஆஸ்திரேலியாவின் பந்து வீச்சை அதிலும் குறிப்பாக ஆஸ்திரேலிய சுழல்பந்து வீச்சைத்திறம்படச்சமாளித்தது. எனினும் இந்த இணை லயனின் சுழல் பந்துவீச்சிலேயே முடிவு கண்டது. 71 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் புஜாரா. ரோகித் ஓர் ஓட்டத்துடன் ஏமாற்றினார். பன்ட் வழக்கம்போல அடித்தாடினார். அவர் 15 பந்துகளில் 28 ஓட்டங்களுடன் லயனின் சுழலில் ஆட்டமிழந்தார். ஆனால் ரகானே வலுவான முறையில் விளையாடினார். அவர் 70 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இந்திய அணி 307 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பந்துவீச்சில் லயன் 6 இலக்குகளையும், ஸ்ராக் 3 இலக்குகளையும், ஹசில்வூட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆஸ்திரேலிய அணிக்கு இலக்காக 323 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன. பின்ஞ் கடந்த இன்னிங்ஸைப்போலவே இரண்டாவது இன்னிங்ஸிலும் இசாந் சர்மாவின் பந்துவீச்சில் தடுமாறினார். முதலாவது இன்னிங்ஸில் 'சில்லி பொயின்டால்' பவுண்டரி அடிக்க திட்டமிட்டு போல்ட் முறையில் ஆட்டமிழந்த பின்ஞ். இரண்டாவது இன்னிங்ஸிலும் 'சில்லி பொயின்டால்' சில தெரிவுகளை மேற்கொள்ள எத்தனித்தார். ஆனால் அனைத்திலும் தோல்விகண்டார். ஒருமுறை இசாந் சர்மாவிடம் எல்.பி.டபிள்யூ. ஆன பின்ஞ் அது முறையற்ற பந்து என்பதால் தப்பித்தார். எனினும் அடுத்த சில நிமிடங்களில் அஸ்வினிடம் வீழ்ந்தார். கவாயாவையும் 8 ஓட்டங்களுடன் வெளியேற்றினார் அஸ்வின். ஹான்ஸ்கொம், ஹரிஸ் இருவரையும் சமி வெளியேற்றினார். நான்காம் நாள் முடிவில் ஆஸ்திரேலிய அணி 4 இலக்குகளை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஆஸ்திரேலியாவின் வெற்றிக்கு இன்னும் 219 ஓட்டங்களும், இந்தியாவின் வெற்றிக்கு இன்னும் 6 இலக்குகளும் தேவை என்ற நிலையே உள்ளது. (ம)



## 100 ஆண்டுகால வரலாற்றை மாற்றுமா ஆஸ்திரேலியா?

தற்போது நடைபெற்றுவரும் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றால் கடந்த நூறு ஆண்டுகாலத்தில் நடக்காத ஒரு சம்பவமாகவே பார்க்கப்படும்.

ஆஸ்திரேலிய - இந்திய அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் நடைபெற்றுவரும் மைதானம் அடிலெய்ட். இந்த மைதானத்தில் நான்காவது இன்னிங்ஸுக்காக விளையாடுவதென்பது கெட்ட கனவாகவே பார்க்கப்படுகிறது. அதாவது இந்த மைதானத்தில் நான்காவது இன்னிங்ஸை எதிர்கொள்ளும் எந்த அணியும் கடந்த நூறு ஆண்டுகளில் 300 க்கும்



மேற்பட்ட ஓட்டங்களை விரட்டி வெற்றிபெறவேயில்லை. இதனால் இந்த டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றால் அது கடந்த நூறு ஆண்களில் நடக்காத சம்பவமாகவேபார்க்கப்படும். (ம)

## ஆஸியை விட்டுவிடாதீர்கள் நெருக்கடியை வழங்குங்கள்

### இந்திய வீரர்களுக்கு சச்சின் அறிவுரை

ஆஸ்திரேலிய அணிக்கு வழங்கும் அழுத்தத்தை இரட்டிப்பாக்குங்கள். அந்த அணியை வீழ்த்தி 1:0 என்று முன்னிலை பெறுவதற்கு இது மிகச் சிறந்த வாய்ப்பு என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் வீரர் சச்சின்.

நேற்றைய நிலவ்ரத்தின் பின்னர் தனது கீச்சகத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் சச்சின்.

தற்போதைய நிலவரப்படி இந்திய அணி ஆதிக்கம் செலுத்தி வருகிறது. ஆஸ்திரேலியாவிட மிருந்து ஆட்டத்தைப் பறித்துச் செல்ல எல்லாம் நன்றாக அமைந்துள்ளது. நாளை (ஐந்தாம் நாள்) ஆஸ்திரேலியாவுக்கு கொடுக்கும் நெருக்கடியை இந்திய வீரர்கள் மேலும் அதிகரிக்க வேண்டும். ஷோன்மார்ஷ் மற்றும் பெய்ன் ஆகியோரை நிலைத்து நிற்பதற்கு அனுமதிக்கக் கூடாது என்று சச்சின் தனது பதவில் குறிப்பிட்டார். (ம)

# மெஸ்ஸியின் அசத்தல் ஆட்டத்தால் வெற்றிபெற்ற பார்சிலோனா அணி

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வெற்றிபெற்றது பார்சிலோனா அணி.

பார்சிலோனா அணியை எதிர்த்து எஸ்பன்ஜோல் அணி மோதியது. ஆட்டத்தின் ஆரம்பித்திலேயே மெஸ்ஸி சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 17ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி பார்சிலோனாவின் முதலாவது கோலைப் பதிவு செய்தார். 26ஆவது நிமிடத்தில் டெம்பிலி பார்சிலோனாவின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். 45ஆவது நிமிடத்தில் சுவாரஸ் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது பார்சிலோனா அணி.

இரண்டாவது பாதியிலும் பார்சிலோனாவின் ஆதிக்கம் வலுப்பெற்றது. 65ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி தனது இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். இந்தக் கோல் பார்சிலோனாவின் நான்காவது கோலாகப் பதிவானது. முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பார்சிலோனா அணி. (ம)




Your Best Pathway to a British Degree
UNIVERSITY of GREENWICH
START FOR A NEW ACHIEVEMENT
B.Sc.(Hons)
Computer Systems & Networking
Why should you select IIS ?
- IIS set high standards for teaching quality.
- The lecture panel consist of eminent academic and industry experts.
- Facilities for ex-curricular activities.
- Bank loan facilities and easy payment schemes.
- Industrial placement at leading companies.
UGC APPROVED
For More Details 071 777 5666 / 0777 570 038
New Intake : 05.01.2019
IIS CITY CAMPUS
200; Sivan Pannai Road, Jaffna.
021 222 8060 | 021 4900 900
www.iis.edu.lk | info@iis.edu.lk

## வில்லியம்சனுக்கு எதிர்ப்பலை



பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் பரிசளிப்பின் போது கிண்ணத்தைத் தன்னிச்சையாக எடுத்துச் சென்றமைக்காக நியூசிலாந்து அணியின் தலைவர் வில்லியம்சனுக்கு எதிராக கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

பரிசளிப்பின் போது விளம்பரதாரர்கள் கிண்ணத்தை எடுத்து அதை அணித் தலைவர்களிடம் வழங்குவதே முறை. ஆனால் வில்லியம்சன் விளம்பரதாரர்களிடம் இருந்து பெறாமல் தானாக கிண்ணத்தை எடுத்துச் சென்றார் இதற்கு பெரியளவில் விமர்னங்கள் குவிந்துள்ளன. (ம)

## சீனாவைத் துவைத்த ஆஸ்திரேலிய அணி!

ஹொக்கி உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சீனாவை ஊதித் தள்ளியது.

உலகக்கிண்ண ஹொக்கித் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சீனாவும் ஆஸ்திரேலியாவும் மோதின. 11:0 என்ற கோல் கணக்கில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது. (ம)




வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.